
www.padippakam.com

# மண்

ல்வி-கலை-இலக்கிய-சமூக இருமாத இதழ்



யேர்மனி

இதழ் - 96

கார்த்திகை – மார்கழி
November-December
2002

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

படிப்பகம்

www.padippakam.com



உள்ளே


- எங்கள் கருத்து
- சிறுவர் உலகம்
- சிறுவர் போட்டிகள்
- ஆத்திசூடி, திருக்குறள்
- கவிதை, கட்டுரை
- சிறுகதை, தொடர்கதை
- தியாகதீபம் திலீபன்
- அறிவியல்
- குறுக்கெழுத்துப்போட்டி
- செய்திச்சரம்
- ஐரோப்பிய விடையங்கள்
- நூல்வெளியீட்டுவிழா
- விளையாட்டுச்செய்தி
- ஆதரவற்றோர்நிதி
- தாயகக் கடிதங்கள்
- நத்தார்ப்பப்பா


## ,,மண்“ சஞ்சிகையின் தொடர்கள்


ஆசிரியர்கள்: வ.சிவராசா
ப.சௌந்தரராசா

முகவரி: V.Sivarajah
Angertalerstr.98
47249Duisburg
தொலைபேசி: 0203/706480
தொலைநகல்: 0203/6080581
மின்னஞ்சல்: mann_erde_sivarajah@hotmail.com


படிப்பகம்

www.padippakam.com



# எங்கள் கருத்து

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்குமான இரு கட்ட தாய்லாந்துப் பேச்சுவார்த்தை முடிவடைந்து மூன்றாவது சுற்றுப் பேச்சு நோர்வேநாட்டில் நடை பெறவுள்ள நிலையில் கொழும்பு அரசியல் நிலையில் மீண்டு ஒருஸ்த்திரத்தன்மை அற்ற தழும்பல் நிலை உருவாகியுள்ளது. மாற்று அரசு வருமா? அல்லது மீண்டும் பொதுத்தேர்தல் வருமா? என்ற கேள்விகள் தோன்றியுள்ளது.

நாட்டுமக்களின் அடிப்படைப்பிரச்சனையை விட்டு பதவிகள் மீது குறியாக இருக்கும் அரசியல்வாதிகளால் பிரச்சனைகள் அதிகரிக்கின்றது. சமாதானத்துக்கான யுத்த மென்று கூறி கடந்த 7 ஆண்டுகளாக ஆட்சிபுரிந்த சந்திரிகா அரசில் தமிழ்மக்கள் சொல்லொணாத் துயரை அனுபவித்தனர். ரணில் பதவிக்கு வந்ததும் சந்திரிகா அரசு மக்களால் புறக்கணிக்கப்பட்டதும் சமாதானம் மீதான மக்களின் வெளிப்பாடாகவே அமைந்தது.

சமாதானம் தனது எதிர்கால அரசியலைப் பாதிக்கும் என்பதில் சந்திரிகா உறுதியாக இருந்ததனாலேயே அதை எப்படியாவது முறியடிக்கவேண்டும் என்பதில் குறியாக இருந்துவருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. இதன் விளைவுதான் நாட்டில் இன்று அரசியல் பதற்றநிலையாகும். ரணில் இப்போது சமாதான முயற்சியில் முனைப்பாக இருப்பதால் தேர்தல் வந்தாலும் வெற்றிபெறும் சந்தர்ப்பம் உண்டு. ஆனால் ஜனாதிபதி சந்திரிகாவோ தேர்தலை நடாத்தாமல் ஆளும்கட்சியினரின் செல்வாக்கையும், பேரினவாதிகளில் செல்வாக்கையும், பயன்படுத்தி ரணில் அரசை கலைக்கும் திட்டத்தில் செயற் படுகின்றார்.


சந்திரிகாவிற்குப் பேரினவாதிகளின் ஆசியும் அனுசரணையும் வேண்டுமானால் கிடைக்கலாம். மக்களின் ஆதரவு கிடைக்கப் போவதில்லை. ஆயினும் உயர் நீதிமன்றத்தின் அரசியலமைப்பின் சீர்திருத்தம் தொடர்பான தீர்ப்பு சந்திரிகாவிற்குத் தெம்பூட்டக் கூடியதாகவே அமைந்துள்ளது. ஆனாலும் இது மக்களின் தீர்ப்புக்குப் பாதிப்பை ஏற்படுத்தாது. இந்த நிலையில் தனது நிறை வேற்று அதிகார வலுவைப் பயன்படுத்தி ரணில் அரசுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தி சில உறுப்பினர்களை தன்பக்கம் இழுத்து மாற்று அரசொன்றை உருவாக்குவதிலேயே சந்திரிகா கண்ணும் கருத்துமாக இருக்கிறார்.

ரணிலோ தேர்தலை எதிர்கொள்ளத்தயாராகின்றார் என்பது உண்மை. ஆகவே இன்றைய சமாதானத்தின் எதிர்காலம் இலங்கையில் இஸ்திரக் தன்மையற்ற அரசியல்காரணமாக இழுபறி நிலையை எட்டக்கூடிய அபாயம் தோன்றும் கட்டத்தை எட்டிவருவதாக அஞ்சப்படுகின்றது. ஆனாலும் ஆட்சிமாற்றம், அரசியல் இஸ்திரத்தன்மை ஏற்பட்டாலும் தற்பொதுய சமாதான முயற்சிகள் இடைநிறுத்தப்படாது நடைபெறும் என்று நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் தெரிவித்திருப்பது தமிழ் மக்கள் மத்தியில் நம்பிக்கை தருவதாக இருப்பது ஆறுதலான விடையமேயாகும்.

ஆசிரியர்

www.padippakam.com






# ஒற்றுமையின் வலிமை

அருணாசலம் என்பவருக்கு ஐந்து புதல்வர்கள் இருந்தனர். அவர்கள் கண்ணன், செந்தில், ராமு, பாலு, சுரேஷ். அவர்கள் ஐவரும் தங்களுக்குள் சண்டை போட்டுக் கொண்டிருந்தனர். சிறு விஷயங்களில் கூட அவர்களுள் நான் – நீ என்று கைகலப்பு நிகழ்வது வழக்கம்.

அருணாசலம் தன் குழந்தைகளின் சண்டையால் களைத்து விட்டார். ஒரு நாள் அவர் அவர்களுக்கு அறிவுறுத்த எண்ணி பக்கத்தில் கூப்பிட்டார். முதலில் மெல்லிய உலர்ந்த ஐந்து குச்சிகளை ஒரு சிறிய கட்டாகக் கட்டினார். மகன்களிடத்தில் சொன்னார் " உங்களில் யார் இக்குச்சிகளின் கட்டை ஒடிக்கிறீர்களோ, அவனுக்கு ஐந்து ரூபாய் பரிசு கிடைக்கும் " என்று. ஐந்து பேரும் நான் தான் முதலிலே ஒடிப்பேன் என்று சண்டையிட்டனர். அவர்களுக்கு யாராவது ஒருவன் முதலில் எடுத்து உடைத்து விட்டால் பணம் அவனுக்குக் கிடைத்து விடுமே என்ற பயம் இருந்தது. அருணாசலம் கூறினார் "முதலில் கடைசிப் பையன் சுரேசை ஒடிக்க விடுங்கள்" என்று.

படிப்பகம்

சுரேஷ் முதலில் கட்டை எடுத்துப் பலத்துடன் ஒடிக்கத் தொடங்கினான். பல்லைக் கடித்துக் கொண்டு கண்களை உருட்டி மிகுந்த பலத்தைக் காட்டினான். வியர்வை ஆறாகப் பெருகியது. ஆனால் கட்டில் இருந்த குச்சிகள் உடைய வில்லை. அவன் பாலுவிடம் கொடுத்தான். அவன் பலம் காட்டி உடைக்க முயன்றும் முடியவில்லை. இவ்விதமாக எல்லாப் பையன்களும் ஒவ்வொருவராகக் கட்டை முறையே எடுத்து பலம் காட்டி ஒடிக்க முயன்றும் யாரும் வெற்றி பெற வில்லை.

அருணாசலம் கட்டை அவிழ்த்து ஒரு ஒரு குச்சியாக எல்லோருக்கும் கொடுத்தார். இத்தடவை அனைவரும் 'பட்', 'பட்' எனக் குச்சிகளை ஒடித்தார்கள். அருணாசலம் கூறினார் "பார்த்தீர்களா! இக்குச்சிகள் ஒன்றாக ஒரு கட்டாக இருக்கும் போது உங்களில் ஒருவர் கூட ஒடிக்க முடியவில்லை. தனித்தனியே பிரித்ததும் நீங்கள் இலகுவாக எல்லாவற்றையும் ஒடித்து விட்டீர்கள். இம்மாதிரியே நீங்கள் உங்களுக்குள் சண்டையிட்டும், தனித்திருந்தாலும் மற்றவர்கள் உங்களைத் துன்பப் படுத்துவார்கள். அமுக்கப் பார்ப்பார்கள். ஆனால் நீங்கள் ஒருவருக்கொருவர் ஒற்றுமையுடன் இருப்பின் யாரும் உங்களை எதிர்க்கத் துணிய மாட்டார்கள். அருணாசலத்தின் பிள்ளைகள் அன்றிலிருந்தே தங்களுக்குள் சண்டையிடுவதை விட்டு விட்டு ஒற்றுமையுடன் இருந்தார்கள்.

"ஒன்று பட்டால் உண்டு வாழ்வு"

✣ ✣ ✣ ✣ ✣ ✣

எந்தக்காலத்திலும் தெய்வமும் மனிதனும் வரவேற்பது தன்னம்பிக்கை உடையவரையே.

✣ ✣ ✣ ✣ ✣ ✣

தனக்காக மட்டுமே வாழ்கிற மனிதன் , மனிதர்களிலே மிகவும் கேவலமானவன்.

www.padippakam.com



# வேறு வழியில்லை

ஒருமுறை தெனாலிராமனின் சொற்களால் வெறுப்படைந்த கிருஷ்ணதேவராயர், அவனை நாட்டை விட்டு வெளியேறி கண் காணாத இடத்துக்கு ஓடிப் போகும்படி உத்தரவிட்டு விட்டார்.

தெனாலிராமனும் அரசர் சொன்னதுபோல் விஜயநகரத்தை விட்டு வெளியேறினான்.

சில நாட்கள் கடந்தன.

அன்று கிருஷ்ண தேவராயர் குதிரையில் சவாரி செய்து காட்டு வழியே சென்று கொண்டிருந்தார். அப்போது ஒரு மரத்தின் உச்சியில் ஒருவர் ஏறுவதற்கு முயற்சிப்பதை மன்னர் அருகில் சென்று பார்த்தார்.

மரத்தில் ஏறுபவர் யார் என்று மன்னர் பார்த்தார். அது தெனாலிராமன் என்று தெரிந்தது.

கோபம் அவரது தலைஉச்சிக்கு ஏறியது.

உன்னை நாட்டை விட்டு வெளியே போகச் சொன்னேன் அல்லவா? ஆனால் நீயோ இங்கே இருக்கிறாய்...?“ மன்னரின் பேச்சில் உக்கிரம் தெரிந்தது.

தெனாலிராமன் வழக்கமான தனது சாதுர்யத்தை பேச்சில் காட்டினான்.

“மன்னா! இந்த உலகம் பூராவும் போய் வந்து விட்டேன். ஆனால் யாரைக் கேட்டாலும் இது கிருஷ்ணதேவராயரின் ராஜ்ஜியம் என்கிறார்கள். அதனால் எங்கே போவது என்று எனக்கு தெரியவில்லை. அதனால் இந்த மரத்தின் மீது ஏறி, சொர்க்கத்திற்கு போவதைத் தவிர வேறு வழி எதுவும் தெரியவில்லை. ஆகவேதான் உங்களைப் பார்த்தவுடன் மரத்தில் ஏறி விட்டேன்.“

அதைக் கேட்ட மன்னர் வாய் விட்டு சிரித்தார். தெனாலி ராமனை மன்னித்து மறுபடியும் அவைக்கு வர உத்தரவிட்டார்.

சில்லையூர் சிங்கறாஜா
(ஒல்வன்)

## கடவுள் ஒருவர்தான்...!

குழந்தைகளின் உள்ளத்தை கவர்வதற்காக மிட் டாய்க்காரன், சர்க்கரையை பாகு செய்து, அதில் பலவகை நிறங்களை அதில் செலுத்துகிறான். கொக்குப் போலவும், குருவி போலவும், பாகற்காய், கத்தரிக்காய், அணில் போலவும் பலவகைகளில் செய்கிறான். குழந்தைகள் தங்களுடைய விருப்பத்திற்கு ஏற்ப மிட்டாய்களை வாங்கிச் சாப்பிடுகின் றனர். எல்லாம் சர்க்கரைதானே என்று அந்த குழந்தைகளுக்கு தெரிவதில்லை. நிறத்திலும், உருவிலும் ஈடுபடுகின்றன. அதேபோல்தான் இறைவன் பல வண்ணங்களையும், வடிவங்க ளையும் கொண்டு அடியார்களின் உள்ளங்களை கவர்கிறான். எனவே கடவுள் ஒருவர்தான் என் பதை நாம் உணர வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



# "த" வரிச்சொற்கள்

001) தமிழ்மொழி
002) தமிழ்இலக்கியம்
003) தமிழ்இலக்கணம்
004) தமிழிசை
005) தமிழகராதி
006) தமிழ்த்துறை
007) தமிழறிவு
008) தமிழ்த்திறன்
009) தமிழ்க்குரல்
010) தமிழ்க்கலை
011) தமிழோசை
012) தமிழ்ச்சோலை
013) தமிழ்நாதம்
014) தமிழ்அலை
015) தமிழ்மன்றம்
016) தமிழ்ச்சங்கம்
017) தமிழ்இனம்
018) தமிழ்நூல்
019) தமிழ்க்கொடி
020) தமிழ்மலர்
021) தமிழ்பாவை
022) தமிழினி
023) தமிழ்ப்பிரியா
024) தமிழன்பன்
025) தமிழரசு
026) தமிழேந்தி
027) தமிழரசன்
028) தமிழ்க்கவி
029) தமிழ்வாணன்
030) தமிழ்தாநன்
031) தமிழன்
032) தமிழ்மகள்
033) தமிழ்மகன்
034) தமிழ்க்குடிமகன்
035) தமிழ்ச்செல்வன்
036) தமிழ்ச்செல்வி
037) தமிழ்முனி
038) தமிழ்வேந்தன்
039) தமிழ்நதி
040) தமிழ்வழக்கு
041) தமிழ்மலை
042) தமிழ்ப்புலவர்
043) தமிழாசான்
044) தமிழ்ப்பேராசிரியர்
045) தமிழாராய்ச்சி
046) தமிழரசு
047) தமிழர்கூட்டணி
048) தமிழ்த்தேசியம்
049) தமிழ்மூதாட்டி
050) தமிழமைப்பு
051) தமிழ்ப்பாடல்
052) தமிழ்ப்புத்தாண்டு
053) தமிழ்ப்படம்
054) தமிழ்மக்கள்
055) தமிழ்க்குழு
056) தமிழ்ப்பணி
057) தமிழறிஞர்
058) தமிழருவி
059) தமிழ்மறவர்
060) தமிழ்மாலை
061) தமிழ்ச்சான்றோர்
062) தமிழுணர்வு
063) தமிழர்கண்ணோட்டம்
064) தமிழ்த்தாய்
065) தமிழ்ப்பத்திரிகை
066) தமிழகம்
067) தமிழின்பம்
068) தமிழநாடு
069) தமிழ்ஞானி
070) தமிழ்த்தேர்
071) தமிழ்நாவல்
072) தமிழ்மறை
073) தமிழ்மரபு
074) தமிழ்ப்பண்பு
075) தமிழ்முரசு
076) தமிழ்வானொலி
077) தமிழ்ச்சமூகம்
078) தமிழ்மண்
079) தமிழ்ப்போராளி
080) தமிழ்மாமணி
081) தமிழீழம்
082) தமிழ்ப்பற்று
083) தமிழிச்சித்தர்
084) தமிழாக்கம்
085) தமிழர்தேசியம்
086) தமிழ்மகாநாடு
087) தமிழ்மன்னன்
088) தமிழ்இணையம்
089) தமிழ்த்தொண்டு
090) தமிழ்க்குடில்
091) தமிழமுதம்
092) தமிழீழவரலாறு
093) தமிழ்வித்தகர்
094) தமிழ்ராச்சியம்
095) தமிழர்கழகம்
096) தமிழ்மணி
097) தமிழ்மாணவர்
098) தமிழ்ப்பண்டிகை
099) தமிழ்க்கலை
100) தமிழ்க்குடிமகன்

*செல்வன் பார்த்திபன் பாலச்சந்திரன்*

## 100 சொற்கள்


**ஜேர்மனி Differten நகரைச் சேர்ந்த செல்வன். பார்த்தீபன் பாலச்சந்திரன் அவர்கள், "த" எழுத்தில் தொடங்கும் 100 சொற்களை எழுதி அனுப்பியுள்ளார். இருவருக்கும் "மண்" சஞ்சிகை பாராட்டையும், நன்றியையும் தெரிவிக்கின்றது.**

மாணவமணிகளே!.......

**நீங்களும் நூறு சொற்களை கண்டுபிடித்து எழுதி 20.12.2002க்கு முன்னர் அனுப்பிவையுங்கள்......**

## ஆங்கிலக் குறுக்கெழுத்துப் போட்டி

விடுபட்ட சதுரங்களை நிரப்புங்கள். நிரப்பிய எழுத்துக்களை மேலிருந்து கீழாகப் பார்த்தால் ஒரு மிருகத்தின் பெயர் வரும். எங்கே முயற்சி செய்யுங்கள். முடியாவிடின் பக்கங்களைப் புரட்டுங்கள். விடை கிடைக்கும்.




Fill in the empty squares and read the letters going down between the dark lines to find out the name of an animal.

- விழிப்படைந்து எழுச்சி கொள்ளும் பெண்ணினமே ஒரு போராட்டச்க்தியாக உருப்பெற முடியும்.

(தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன்)

- விடா முயற்சியும் தீர்க்கமான சிந்தனையும் கொண்ட மனிதன் புனிதன் ஆகிவிடுகிறான்.

www.padippakam.com





ஆத்திசூடி விளக்கம்





## 5 உடையது விளம்பேல்

உன்னிடம் மிகச் சிறந்த பொருள் ஒன்று இருக்கிறது. அந்தப் பொருளை மற்றவர் பார்த்து மெச்ச வேண்டும், புகழ்ந்து பாராட்ட வேண்டும் என நீவிரும்புகிறாய். ஆகவே உன்னிடமுள்ள அந்தப் பொருளைப் பற்றி உயர்வாகப் பிறரிடம் கூறுகிறாய். அதைப் போன்றதொரு பொருளை எங்கும் காண முடியாது என்று சொல்லிப் பெருமைப்பட்டுக் கொள்ளுகிறாய்.

உன்னுடைய இந்தச் செயலைக் கண்டு அவர்கள் என்ன நினைப்பார்கள்? உன்னை ஓர் ஆடம்பரக்காரன் என்றோ, ஆடம்பரக்காரி என்றோ நினைப்பார்கள். பெருமைக்காரன், டம்பம் அடித்துக் கொள்ளுகிறான், என்று எண்ணி அவமதிப்பார்கள். ஆகவே உன்னிடம் உள்ள பொருளின் சிறப்பைப்பற்றிப் பிறரிடம் பெருமைப்பட்டுக் கொள்ளாதே. அது, பிறர் உன்னை இகழ்ச்சியாக மதிக்க ஏதுவாகும்,

## 6 ஊக்கமது கைவிடேல்

நீ ஒரு காரியத்தைச் செய்ய முற்படுகிறாய். அப்போது அக்காரியம் முடிவதற்குள் பல இடையூறுகள் ஏற்படுகின்றன. தடங்கல்கள் முளைக்கின்றன. அப்போது, உன் செயலில் தளர்ச்சி ஏற்படும். ஊக்கம் குறையும், அசிரத்தை உண்டாகும். இந்த நிலைகள் ஏற்படுமானால் நீ செய்ய ஆரம்பித்த காரியம் வெற்றியடையாது. சிலந்தி வலை பின்னும்போது பல முறை, அது உருவாக்கிய நூலிழை அறுந்து போகும். ஆனால் அது தன் செயலை நிறுத்தாது தொடர்ந்து முயன்று, வலையைப் பூர்த்தி செய்யும். காந்தி மகாத்மாவுக்கு அவர் மேற்கொண்ட காரியத்தில் எத்தனை தடங்கல்கள், தொல்லைகள் ஏற்பட்டன? அதனால் அவர் துவண்டாரா? இல்லை. தளராது ஊக்கத்துடன் முயன்றார், நம் பாரதத்துக்கு சுதந்திரம் வாங்கிக் கொடுத்தார். அதுபோல நீங்களும் எந்தக் காரியத்தைச் செய்தாலும் ஊக்கத்தைக் கைவிடக்கூடாது.

படிப்பகம்

www.padippakam.com


# சிறுவர் குறுக்கெழுத்துப்போட்டி – 16

## (கார்த்திகை – மார்கழி 2002)

| | | | |
|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 |
| 05 | 06 | 07 | 08 |
| 09 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 |

இ. – வ.:

01-04: ஐக்கிய நாடுகள் தாபனம் இவர்களுக்கு வருடத்தில் ஒரு தினத்தைக் கொண்டாடும்.

15-16: நீரிலும் நிலத்திலும் வாழும்.

வ. – இ.:

12-11: பழம் இதன் ஒத்தசொல்.

08-07: நீர்வாழ் உயிரினம்.

கீ. – மே.:

10-02: தானியவகை ஒன்று.

15-11: மாதம் ஒன்று.

மே. – கீ.:

01-13: காட்டுராசா.

03-11: தாயகத்தில் இங்கு வாழும் தமிழ்ச்சிறார்கள் கல்வி பயில்வதில் பல சிரமங்களை எதிர்நோக்குகிறார்கள்.

10-14: மனித உறுப்புக்களில் ஒன்று.

– முடிவு திகதி 20.12.2002 –

# சிறுவர் குறுக்கெழுத்துப்போட்டி முடிவு – 15

## (புரட்டாதி – ஐப்பசி 2002)

| | | | |
|---|---|---|---|
| தி | ங் | க | ள் |
| ட் | ம் | ட | ப |
| ட | சா | லை | பா |
| ம் | ன | வ | ல் |

www.padippakam.com



# வினாவிடைப்போட்டி முடிவு – 84
## (புரட்டாதி / ஐப்பசி 2002)

1. இலங்கையின் வடபகுதியில் பல சிறிய தீவுகள் காணப்படுகின்றன. அவை யாவன:
நெடுந்தீவு, அனலைதீவு, நயினாதீவு, மண்டதீவு, காக்கைதீவு, கச்சதீவு, பாலைதீவு, இரணதீவு

2. ஸ்கன்டிநேவியன் (Skandinavien) நாடுகளின் பெயர்களும் தலைநகரங்களும்.

Sweden - Stockholm
Norway - Oslo
Denmark - Kopenhagen
Finnland - Helsinky

பெனலுக்ஸ் நாடுகளின் (Benelux-Länder) பெயர்களும். தலைநகரங்களும்.

Belgium - Brüssel
Netherlands - Amsterdam
Luxemburg - Luxemburg

3. உயர்த்தியைக் (Lift) கண்டுபிடித்தவர் E.G. ஒற்றிஸ். இவர் 1852ம் ஆண்டு கண்டுபிடித்துள்ளார். இவர் அமெரிக்க நாட்டவர்.

4. ஒத்தசொற்களை எழுதுக:

வியாபாரி – வர்த்தகர்
இறைவன் – ஆண்டவன்
புகழ்தல் – பாராட்டுதல்
கள்வன் – திருடன்
தொடக்கம் – ஆரம்பம்

எதிர்சொற்களை எழுதுக:

எதிர்ப்பு – ஆதரவு
உறங்கியது – விழித்தது
இரவல் – சொந்தம்
துக்கம் – மகிழ்ச்சி
எளிமை – ஆடம்பரம்

5. „அம்மா“
   1. அம்மா எம் தெய்வம்.
   2. அம்மா எமக்கு உயிர் தந்தவர்.
   3. அம்மா எமக்கு அன்பை ஊட்டியவள்.
   4. அம்மாவே எம்மை வளர்த்து ஆளாக்கியவள்.
   5. அம்மாவைப் போல் உலகில் ஒருவரையும் காணமுடியாது.

> ➤ சுயநலம் என்பது ஒரு சிறிய குடிசையைப் போன்றது. ஆனால் பொதுநலம் என்பது பரந்த அரண்மனைக்கு ஒப்பானது.

www.padippakam.com



# வினாவிடைப்போட்டி – 85
## (கார்த்திகை + மார்கழி 2002)

1. ஈழவிடுதலைப்போராட்ட வரலாற்றில் உண்ணாநோம்பு இருந்து உயிர்நீத்த தியாகிகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

2. ஜேர்மனியின் அதிபரின் (Bundeskanzler) பெயர் என்ன? ஜேர்மனியின் தலைவரின் (Bundespräsident) பெயர் என்ன?

3. பாரசூட் (Parachute), இதனைக் கண்டுபிடித்தவர் யார்? இவர் எந்த நாட்டவர்? எத்தனையாம் ஆண்டு?

4. பொருத்தமான ஒத்தகருத்துச்சொற்களின் கீழ்க்கீறிடுக.
   1. தேசம் (நாடு, உலகம், தீவு)
   2. பெற்றோர் (மாமனார், தாய்தந்தையர், சகோதரர்)
   3. மன்னிப்பு (இனிப்பு, பொறுத்துக்கொள்ளல், தவறு)
   4. குணம் (பண்பு, மணம், கோபம்)
   5. பரிசு (காசு, அன்பளிப்பு, படம்)

5. ,,தாய்நாடு" என்னும் தலைப்பில் 5 வசனங்களை எழுதுக.

- சரியான விடைகளை எழுதி ,,மண்" சஞ்சிகையின் முகவரிக்கு 20.12.2002க்கு முன்னர் அனுப்பிவைக்கவும். அதிஸ்டசாலிக்குப் பரிசு வழங்கப்படும்.

> மனிதஉள்ளமும் ஒரு புத்தகத்தைப் போன்றதே. அதனைப் புரட்டப் புரட்ட பல பாடங்கள் புலப்படும்.

> நாவை அடக்கமுடியாதவன் மனதை அடக்கமுடியாது. மனதை அடக்க முடியாதவன் ஆசையை அடக்கமுடியாது.

> தளர்ச்சி அடையாமல் உழைப்பது ஒன்றே உயர்வுக்கு என்றும் வழிகோலுகின்றது.

படிப்பகம்

# சிறுவர்போட்டி முடிவுகள்

## (புரட்டாதி – ஐப்பசி 2002)

பங்குகொண்டவர்களும் பரிசு பெறுபவர்களும்:

| | | | கண்டுபிடியுங்கள் | வினாவிடைப்போட்டி | குறுக்கெழுத்துப்போட்டி |
|---|---|---|---|---|---|
| செல்வி: | ஆரணி வாசீகன் | - Switzerland | ✓ | ✓ | ✓ |
| செல்வி: | பிரியந்தா. யோகீஸ்வரன் | - Göttingen | ✓ | ✓ | ✓ |
| செல்வி: | வருணா பாலசிங்கம் | - Bonn | ✓ | | |
| செல்வி: | பிருந்தா சிறிதரன் | - Bonn | ✓ | | |
| செல்வி: | பானுரதி புவனேந்திரன் | - Duisburg | ✓ | | |
| செல்வி: | றூபிகா தவராசன் | - Menden | ✓ | | |
| செல்வி: | கீர்த்தனா சதானந்தன் | - Düsseldorf | ✓ | | |
| செல்வி: | ஆர்த்திகா சதானந்தன் | - Düsseldorf | ✓ | | |
| செல்வி: | ஆன்வினோலினி நடேசன் | - Havixbeck | ✓ | ✓ | ✓ |
| செல்வி: | றொமினா தவராஜ் | - Wadgassen | | | ✓ |
| செல்வி: | சுகிதா தவராஜ் | - Wadgassen | | | ✓ |
| செல்வி: | ரஜனி கமலநாதன் | - Solingen | | ✓ | ✓ |
| செல்வி: | தர்சினி கமலநாதன் | - Solingen | | ✓ | ✓ |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சேல்வன்: | சயன் வாசீகன் | - Switzerland | ✓ | ✓ | ✓ |
| செல்வன்: | அனுரதன் நாகேஸ்வரன் | - Gondelsheim | ✓ | | |
| செல்வன்: | வியாசன் செல்வராசா | - Castrop-Rauxel | ✓ | ✓ | ✓ |
| செல்வன்: | பானுஸ்கந்தா புவனேந்திரன் | - Duisburg | ✓ | | |
| செல்வன்: | றுசான் தவராசா | - Menden | ✓ | | |
| செல்வன்: | இலிங்காதரன் கமலநாதன் | - Solingen | | ✓ | ✓ |

**– கண்டுபிடியுங்கள் போட்டியில் பரிசு பெறுபவர்:**
**செல்வி. கீர்த்தனா. சதானந்தன – Düsseldorf**

**– வினாவிடைப்போட்டியில் பரிசு பெறுபவர்:**
**செல்வி. ஆன்வினோலினி. நடேசன் – Havixbeck**

**– சிறுவர்குறுக்கெழுத்துப்போட்டியில் பரிசு பெறுபவர்:**
**செல்வி. பிரியந்தா. யோகீஸ்வரன் – Göttingen**

**இம்மாதம் சிறுவர்வட்டப்பகுதியில் பரிசு பெறுபவர்**
செல்வன் பார்த்திபன் பாலச்சந்திரன் - Differten

www.padippakam.com





## சிறுவர் படுகொலை

ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் சிறுவர்படுகொலைகள் அதிகரித்துவருகின்றன. சிறுமிகள் கடத்தப்பட்டு பாலியல் கொடுமைகளின் பின் படுகொலை செய்யப் படும் சம்பவங்களும் நிகழ்ந்துவருகின்றன.

இப்படத்தில் காணப்படும் சிறுவனைப் பற்றிக் குறிப்பிட்டால் ஜேர்மனியில் படுகொலை செய்யப்பட்ட 12 வயது பாடசாலைச் சிறுவனாவன். தாய் தந்தையர் பெரும் பணக்காரர். இந்த மாணவனுக்குப் பாடசாலை பாடங்கள் கற்பித்த சட்டக்கல்லூரி மாணவனால் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட துயர சம்பவம் நடந்துமுடிந்துள்ளது. பணத்தின் மீது அந்தச் சட்டக்கல்லூரி மாணவன் கொண்ட ஆசையால் கொலை வெறியாக நடந்துமுடிந்துள்ளது.

எனவே புலம்பெயர் நாடுகளில் வாழும் நம் பெற்றோர்கள் பணம்... பணம்... என கடும் ஆசைகொள்ளாமல் தமது குழந்தைச் செல்வங்கள் மீதும் அக்கறை கொள்ளல் வேண்டும்.

### குழந்தை

நமக்குள்ள உரிமைகளைப் போல் குழந்தைகளுக்கும் இருக்கின்றன. அவர்களை மனிதப் பிறவிகள் என்று கருதி நாம் நடத்தல் வேண்டும். அவர்களை நாம் மிருகத்தனமாக நடத்தக் கூடாது. அன்பாக இனிமையாக அவர்களை நடத்த வேண்டும்.

- இங்கர்சால்.

படிப்பகம்

# உலகளாவிய பல்கலைக்கழகங்களில் தமிழ்க்கல்வி

இலங்கை

பேராதனையில் உள்ள பல்கலைக் கழகத்தில்1934ம் ஆண்டு முதல் தமிழ் கற்பிக்கப்பட்டு வருகிறது. இங்கு தமிழ் பயிற்றுவித்த முதலாவது தமிழ் பேராசிரியர் விபுலானந்த அடிகளாகும். இவர் 1934முதல் 1947வரை பேராசிரியராக கடமை புரிந்து தமிழ்த் தொண்டாற்றினார். இவரைத் தொடர்ந்து பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்கள் தமிழ்த்துறை தலைவராக பணியாற்றியுள்ளார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகம் தமிழ்மக்களின் நீண்டநாள் முயற்சியால் 1974இல் தோற்றுவிக்கப்பட்டது. இங்கு பேராசிரியர்கள் கைலாசபதி, சு.வித்தியானந்தன் ஆகியோரின் தமிழ்ப் பணிகள் குறிப்பிடத்தக்கனவாகும்.

இந்தியா

சென்னைப்பல்கலைக்கழகம் மிகப் பழமையானதாகும். டாக்டர் உ.வே.சாமிநாதன், இரா.பி.சேதுப்பிள்ளை, மு.வரதராசன் முதலியோர் தமிழ்துறைத் தலைவர்களாக இருந்து பல ஆய்வு நூல்களை வெளியிட்டுள்ளனர்.

சிதம்பரத்தில் அண்ணாமலைப்பல்கலைக்கழகம் உள்ளது. இங்கு தமிழும், தமிழிசையும் கற்பிக்கப்பட்டு வருகிறது. பேராசிரியர்கள் மீனாட்சி சுந்தரனார், சிதம்பரனாரும், தமிழாராய்ச்சித் துறையில் கா.சுப்பிரமணியம், தேவநேயப் பாவாணர் முதலியோரும், சித்தூர் சுப்பிரமணியம், மதுரைசோமு ஆகியோர் தமிழிசைத் துறைத் தலைவர்களாக இருந்து பணியாற்றி பல ஆய்வு நூல்கள் வெளியிடப்பட்டன.

காமராசர் பல்கலைக்கழகம் மதுரையில் உள்ளது. இங்கு பேராசிரியர்கள் மீனாட்சி சுந்தரனார், வரதராசன் துணைவேந்தர்களாக பணியாற்றியுள்ளனர். இங்கு அஞ்சல் வழிப் பட்டப்படிப்பு மூலம் ஆயிரக்கணக்கான பட்டதாரிகள் உருவாகியுள்ளனர்.

தஞ்சாவூரில் தஞ்சைத் தமிழ் பல்கலைக்கழகம் உள்ளது. தமிழ் ஆய்வுத்துறையும், நூல்வெளியீடுமே முதன்மையான குறிக்கோளாக இப்பல்கலைக்கழகம் இயங்கிவருகிறது. தமிழ் தொல்பொருள் அகழ்வாய்வு கருத்தரங்குகள் நடாத்தப்படுகின்றன. வெளிநாட்டில் வாழும் தமிழ் பிள்ளைகளின் தமிழ்மொழிக் கல்வி பற்றிய ஆய்வும் மேற்கொள்ளப்படுகிறது. பல அரிய பழந்தமிழ் நூல்களை பதிப்பு செய்துள்ளது. மருத்துவம், சிற்பம், வானவியல், மாந்தவியல், கணிப்பொறி இயக்கம், வாணிபம், நிலத்திணையியல், கணணி போன்ற பல்வேறு துறைகளிலும் அறிவியல் நூல்கள் தமிழில் வெளிக்கொணரப்படுகின்றன. ஆண்டு தோறும் வெளியாகும் சிறந்த ,தமிழ் இலக்கியத்துக்கு விருதுவழங்கிக் கௌரவிக்கிறது. மாதந்தோறும் தமிழ்ப்பண்பாடு என்ற சஞ்சிகை வெளியிடுகிறது.

திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகம், எட்டையபுரம் பாரதியார் பல்கலைக்கழகம் , அன்னை திரேசா பல்கலைக்கழகம் ஆகியவையும் சிறப்பாகச் செயலாற்றி வருகின்றன. இவ்வதவிர திருவனந்தரபுரத் தில் உள்ள கேரள பல்கலைக்கழகம், ஆந்திராவில் உள்ள உசுமானியா பல்கலைக்கழகம், திருப்பதியில் உள்ள திருவேங்கடவன் பல்கலைக்கழகம், கர்நாடகாவில் உள்ள மைசூர் பல்கலைக்கழகம், காசியில் உள்ள இந்துப்பல்கலைக்கழகம், பஞ்சாப் சண்டிகாரில் உள்ள பஞ்சாப் பல்கலைக்கழகம், வடஇந்தியாவில் உள்ள இலட்சுமணபுரியில் இயங்கும் தென்னிந்திய மொழிக்கல்லூரி ஆகியவற்றில் தமிழ் துறைகள் உண்டு. இங்கு தமிழ் கற்றுக் கொள்ள, தமிழ் பட்டப்படிப்பை மேற்கொள்ள முடியும்.

மலேசியா

கோலாலம்பூரில் உள்ள மலேசியப் பல்கலைக்கழகத்தில் தமிழ் கற்பிக்கப்படுகிறது. முதன் இங்கு தமிழ்துறை 1953இல் ஆரம்பிக்கப்பட்டது. பேராசிரியர் முத்துராசா கண்ணனார் முதலாவது தமிழ்துறைத் தலைவராகும். இவரைத் தொடர்ந்து பணியாற்றியவர்களில் குறிப்பிடத்தக்கவர் தனிநாயகம் அடிகளாராகும். உலகத்தமிழாராய்ச்சி மாநாடு நடைபெறக் காரணமாயிருந்தவர் தனிநாயகம் அடிகளார் என்பது குறிப்பிடத்தக்கது.

www.padippakam.com



பிரித்தானியா
இங்கு உயர்நிலைப் பள்ளி அளவிலும், கல்லூரிப் புகுமுக நிலையிலும் தமிழை ஒரு பாடமாகக் கொண்டு பரீட்சை எழுத வாய்ப்புண்டு. இளங்கலை, முதுகலை தமிழில் பயில இலண்டன் பல்கலைக்கழகத்தில் வாய்ப்புண்டு. பேராசிரியர்கள் திருமார், ஆஷர் ஆகிய இருவரும் தமிழ் பயின்ற பேராசிரியர்களாக கடமையாற்றுகின்றனர். திருக்குறள், திருவாசகம், நாலடியார் ஆகியவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த போப் ஐயர் தமிழ் வளர்த்த நாடு பிரித்தானியா. தனது கல்லறையில் தன்னை ஒரு தமிழ் மாணவன் எனப் பொறிக்கச் செய்தவர் போப் ஐயர்.

பிரான்சு

இந்தியாவில் உள்ள பாண்டிச்சேரியை பிரான்சியர் ஆண்ட காரணத்தால் தமிழர்கள் பிரான்சில் குடியேறிய காலம் தொட்டு பல்கரைக்கழகங்களில் தமிழ்படிக்கும் வாய்ப்பு உண்டு. மூன்றாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு இங்குதான் நடைபெற்றது.

ஜேர்மனி

ஜேர்மனியில் உள்ள் கொலோன் (Köln), கைடில்பேர்ச் (Heidilberg) ஆகிய நகரங்களில் உள்ள பல்கலைக்கழகங்களில் தமிழ் படிக்க வாய்ப்புண்டு. கொலோன் (Köln) பல்கலைக்கழகத்தில் 1960ம் ஆண்டிலிருந்து தமிழ்படிக்க வாய்ப்புண்டு. பேராசிரியர் கப் (Kapp) முதலாவது தமிழ்ப் பேராசிரியரான ஜேர்மனியராகும். இங்குள்ள தமிழ்நூல்நிலையத்தில் அறுபதினாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் நூல்கள் உள்ளன. இப்போது பேராசிரியர் ஜமேர்ற் (Jamert) தமிழ் பேராசிரியராக உள்ளார். திருக்மேய்ப்பல் (Kmüppel), திரு.சாஸ்சா (Sascha) ஆகியோர் பகுதிநேரமாக தமிழ்தொண்டாற்றி வருகின்றனர். இப்போது முப்பது மாணவர்கள் தமிழ் கற்று வருகின்றனர்.

நெதர்லாந்து

இங்குள்ள இலெய்டன் பல்கலைக்கழகத்தில் தமிழ் படிக்க வாய்ப்புண்டு. பழந்தமிழ் ஏட்டுச் சுவடிகளும், நாகை சூளாமணி, விகாரச் செப்புப்பட்டயம் போன்றவை இங்குள்ள அருங்காட்சியத்தில் உள்ளன.
செக்கோஸ்லாவாக்கியாவைச் சேர்ந்த பேராசிரியர் கமீல்சுவலபெல் தன் சொந்த முயற்சியால் தமிழ் கற்று பலமை எய்தி பல தமிழ்நூல்களை எழுதினார். பேர்லினில் உள்ள மரியா கேர்மன் என்பவரும் தனது சொந்த முயற்சியால் தமிழ் கற்றவராவர்.

போலந்து
போலந்து நாட்டிலுள்ள வார்சோ பல்கலைக்கழகத்தில் நீண்ட காலமாக தமிழ் கற்பதற்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளது.
ருசியா
சோவியத் யூனியன் இருந்த போது பல பல்கலைக்கழகங்களில் தமிழ்துறை ஆரம்பிக்கப்பட்டு ஆராய்ச்சிகள் நடைபெற்றன. பல எழுத்தாளர்களின் வெளியீடுகள், பழந்தமிழ் இலக்கியங்கள் ருசிய மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. சிந்துவெளி நாகரீக வரிவடிவங்கள் திராவிடருடையதே என நிறுவிய அறிஞர் குணோரோசவ் இந்நாட்டவரே.
அமெரிக்கா
இங்குள்ள வாஷிங்டன் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் ஹெரோல்டு ஷிப்மன் தமிழ் கற்பிக்கிறார். கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் திருமதி. இராசம் அம்மையார் தமிழ் கற்பிக்கிறார். பேராசிரியர் இராமானுஜன் சிக்காக்கோ பல்கலைக்கழகத்தில் தமிழ் கற்பிக்கிறார்.
கனடா
மாண்ட்ரில், வன்கூவர் ஆகிய இடங்களில் உள்ள பல்கலைக்கழகங்களில் தமிழ் கற்க வசதி செய்யப்பட்டது. இப்போது தமிழ் மாணவர்கள் அதிகமாக கற்று வருவதனால் தமிழ் கற்பதோடு, பல தமிழ் ஆய்வுகளும் செய்யப்படுகின்றன.

திரு கே.கே. அருந்தவராசா - Soest

படிப்பகம்

# தமிழ் மாணவ மாணவியர்க்கான ஊக்குவிப்புக் கல்வித்திட்டம்
# Tamilische Schüler und Schülerin Nachhilfe

Duisburg, Essen, Oberhausen, Mühlheim வாழ் தமிழ்ப் பெற்றோர்களே !! உங்கள் பிள்ளைகளி கல்வியை மேம்படுத்துவதில் நீங்கள் அக்கறைகாட்டி வருகிறீர்கள். ஆனாலும் இங்கே அவர்கள் ப சிரமங்களை கல்விக்கூடாக சந்திக்கிறார்கள், இதற்கு உதவும் முகம் நாம் ஊக்குவிப்புக் கல்வித்திட் ஒன்றை நடைமுறைப்படுத்த உள்ளோம். பின்வரும் பாடங்களை ஆண்டு அடிப்படையில் இருந் பல்கலைக்கழகம் வரை திட்டமிட்டுள்ளோம், ஆகையால் எமது வருங்காலச் சந்ததியினரின் வளர்ச்சியி எமக்கும் பங்கு உண்டு, ஆதலால் நீங்கள் கீழ்வரும் தொலைபேசியுடன் தொடர்பு கொண்டு மேலதி விபரங்களைப் பெறலாம் என்பதை அறியத்தருகிறோம்.

பிரிவுகள் :- கல்வியாண்டு — Gruppen :- Schulbildung (Schuljahre)

1. அடிப்படை 4ம் ஆண்டிலிருந்து 10 வரை — 1. Allgemeinbildung (Hauptschule)
2. சாதாரணம் 11ம் ஆண்டிலிருந்து 13 வரை — 2. Fachschule (Abitur)
3. உயர்கல்வி பல்கலையும் தொழில் நுட்பமும் — 3. Hochschule (Uni)

| 1 அடிப்படைக் கல்வி | 1. Allgemeinbildung |
|---|---|
| யேர்மன் மொழி | Deutsch |
| ஆங்கிலம் | English |
| கணிதம் | Mathematik |
| வரலாறு | Geschichte |
| உயிரியல் | Biologie |
| பௌதீகவியல் | Physik |
| இரசாயனவியல் | Chemie |
| புவியியல் | Erdkunde |
| நுட்பவியல் | Technik |
| வர்த்தகவியல் | Wirtschaft |
| இசை | Musik |
| விளையாட்டு | Sport |

| 2 சாதாரண கல்வி | 2. Fachschule |
|---|---|
| கணிதம் | Mathematik |
| தொடர்பியல் | Informatik |
| பௌதீகவியல் | Physik |
| இரசாயனவியல் | Chemie |
| உயிரியல் | Biologie |
| வர்த்தகவியல் | Wirtschaft |

| 3. உயர்கல்வி | 3. Uni Hochschule |
|---|---|
| கணிதம் | Mathematik |
| தொடர்பியல் | Informatik |
| பௌதீகவியல் | Physik |

நடைபெறும் நாள் .- திங்கள் . $16^{15}$- $18^{.15}$ , புதன் . $16^{.15}$ - $20-^{00}$ , வெள்ளி . $19 -^{00}$ $-21 -^{30}$ வரை (01.10.02 முதல் ஆரம்பம்)

இந்த ஊக்குவிப்புத் திட்டம் யேர்மனியின் ஏனைய நகரங்களிலும் வெகுவிரைவில் ஆரம்பிக்கப்படும்.

Mathematik , Informatik , Physik (8ம் வகுப்பிற்கு மேற்பட்டோர்)

V. S . Sivakumaran , B.Sc. In Engineering Srilanka , Mathematisch-technischer Assistent , Deutschland

குறிப்பு .- கணினி வகுப்புக்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறும். (ஆரம்ப வகுப்புக்களும்)

Internationales Zentrum
(Volkshochschule 47051 Duisburg)

C.K.A (Sasi)
Postfach 100965
46009Oberhausen

Duisburg HBF nach 400m — Bus und U-Bahn (901) am Rathaus

மேலதிக விபரங்களுக்கு.- 020820599107 தொ. இல .- 01703178603(17.00-21.00) m.sasi@web.de

www.padippakam.com





# ஜேர்மன் தமிழ்க் கல்விச் சேவை

(இலங்கைப் பாடத்திட்டத்திற்கு அமைய)

Tamilischer Bildungsverein Deutschland e.V.

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை"

## பொதுப் பரீட்சை - 2002 / 2003
## தமிழ்மொழி

ஜேர்மன் தமிழ்க் கல்விச் சேவை ஆண்டுதோறும் ஐரோப்பா தழுவிய முறையில் நடாத்தும் தமிழ்மொழிப் பொதுப் பரீட்சை, எதிர்வரும் 2003ஆம் ஆண்டு தை மாதம் 18ஆம் திகதி நடைபெறவுள்ளது. சகல மாணவர்களும் இப்பரீட்சையில் தோற்றித் தங்கள் திறமைகளை வெளிப்படுத்திச் சான்றிதழ்களையும், பரிசுகளையும் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். பாடசாலைப் பரீட்சார்த்திகளாயின், ஆசிரியரின் உதவியுடன் பாடசாலை மூலமும்; தனிப்பட்ட பரீட்சார்த்திகளாயின், பெற்றோரின் உதவியுடன் தனிப்பட்ட முறையிலும் விண்ணப்பிக்குமாறு வேண்டுகின்றோம்.

பரீட்சைக்கான செலவுக் கட்டணமாக பாடசாலைப் பரீட்சார்த்திகள் 7 ஒயிறோவும், (7,- €) தனிப்பட்ட பரீட்சார்த்திகள் 10 ஒயிறோவும் (10,- €) அனுப்புதல் வேண்டும்.பரீட்சைகள் ஆண்டு 2 தொடக்கம் ஆண்டு 11 வரையான வகுப்புகளுக்கு நடைபெறும். விண்ணப்பங்கள் 2002.12.10ந் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாகக் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.;

முகவரி:-

Tamilischer Bildungsverein Deutschland e.V.
Postfach 1646
59159 Kamen.
Deutschland.

பணம் அனுப்ப வேண்டிய வங்கி விபரம்:-

Tamilischer Bildugsverein Deutschland e.V.
Konto Nr: 5053335 Bankleitzahl: 443 513 80
Städtische Sparkasse Kamen. Deutschlan.

இங்ஙனம்
ஜேர்மன் தமிழ்க் கல்விச் சேவை

படிப்பகம்

# குறளும் பொருளும்

அங்கவியல் அதிகாரம் 76

## 13. பொருள்செயல்வகை

பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள். 751

இல்லாரை யெல்லாரு மெள்ளுவர் செல்வரை
யெல்லாருஞ் செய்வர் சிறப்பு. 752

பொருளென்னும் பொய்யா விளக்க மிருளறுக்கு
மெண்ணிய தேயத்துச் சென்று. 753

அறனீனு மின்பமு மீனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள். 754

அருளொடு மன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள விடல். 755

உறுபொருளு முல்கு பொருளுந்தன் னொன்னார்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள். 756

அருளென்னு மன்பீன் குழவி பொருளென்னுஞ்
செல்வச் செவிலியா லுண்டு. 757

குன்றேறி யானைப்போர் கண்டற்றா றன்கைத்தொன்
றுண்டாகச் செய்வான் வினை. 758

செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கு
மெஃகதனிற் கூரிய தில். 759

ஒண்பொருள் காழ்ப்ப வியற்றியார்க் கெண்பொரு
ளேனை யிரண்டு மொருங்கு. 760

www.padippakam.com



## குறளும் பொருளும்

திருக்குறள் இனிய உரை பொருள்

### 13. பொருளை உண்டாக்கும் திறம்

ஒரு பொருளாக மதிக்கத் தகாதவரை மதிப்புடையவராகச் செய்வது பொருளே; அப்பொருள் அல்லாது சிறந்த பொருள் வேறு இல்லை. 751

நற்குணம் உள்ளவராயினும் பொருள் இல்லாதவரை எல்லோரும் இகழ்வர்; தீயவராயினும் பொருள் உள்ளவருக்கு எல்லோரும் சிறப்புச் செய்வர். 752

எல்லோராலும் சிறப்பிக்கப்படும் அணையா விளக்காகிய பொருள் தன்னை அடைந்தவருக்கு அவர் நினைத்த இடத்திற்குச் சென்று அவரது பகையென்னும் துன்பத்தைப் போக்கும். 753

சேர்க்கும் திறம் அறிந்து தீமையற்ற முறையில் சேர்த்த பொருள் ஒருவனுக்கு அறத்தையும் இன்பத்தையும் கொடுக்கும். 754

அருளோடும் அன்போடும் வராத செல்வத்தைத் தீமையானது என்று தொடாமல் நீக்கி விட வேண்டும். 755

உடையார் இல்லாத பொருளும், சுங்கப்பொருளும், பகைவரால் கொடுக்கப்பட்ட கப்பப் பொருளும் அரசுக்கு உரிய பொருள்களாகும். 756

அன்பினால் பெறப்பட்ட அருட்செல்வமாகிய குழந்தை, பொருள் என்ற செல்வமாகிய செவிலித் தாயால் வளர்வதாகும். 757

தன் கைப்பொருளைக் கொண்டு ஒருவன் ஒரு செயலைச் செய்வது, மலைமேல் நின்று யானைப் போரைக் காண்பது போன்றது. 758

தமக்கு ஒன்று உண்டாக்க நினைப்பவர் பொருளை ஈட்ட வேண்டும்; பகைவரைக் கெடுக்கும் கூர்மையான ஆயுதம் அதைவிட வேறு இல்லை. 759

நல்ல வழியில் மிகுதியான செல்வத்தை ஈட்டியவருக்கு அறமும், இன்பமும் மிக எளிய பொருள்களாகும். 760

படிப்பகம்

## சாதுரியத்திறன் கேள்வி 14


1. உலகின் முதல் நாட்காட்டியை உருவாக்கியவர் யார்??
2. உலகின் சர்க்கரைக் கிடங்கு என்று அழைக்கப்படும் நாடு எது???
3. மோனாலிசா ஓவியத்தை வரைந்தவர் யார்??
4. ஒரு லீட்டர் கடல்நீரில் எத்தனை கிராம் உப்பு உள்ளது??
5. அக்னிச்சிறகுகள் என்ற நூலை எழுதியவர் யார்??
6. மோர் புளிப்பதற்கு காரணமானது எது???
7. நீரில் கரையக்கூடிய விட்டமின்கள் எவை??
8. முதுகெலும்பு தரையில் படுமாறு உறங்கும் உயிரினம் எது??
9. பறக்கும் பாலூட்டி எது???
10. நமது மூளையின் எடை எவ்வளவு??

பக்கங்களைப் புரட்டுங்கள் விடைகள் கிடைக்கும்.

தவறுகளை ஒத்துக் கொள்ளும் தைரியமும், அதனை திருத்திக் கொள்வதற்கான பலமும் தான் வெற்றி பெறுவதற்கு சிறந்த குணாம்சமாகும்.

(லெனின்)

## கவிதைச் சோலையில்



### மடமையை எதிர்த்திடு.

பொறுமையின் சிகரமென்று போற்றி
பணிவிடையைப் பாரமாக ஏற்றி
நிபந்தனை மட்டும் நிலையாக விதித்து
பாவையவளைப் பதுமையென்று
பாராட்டி வைக்கும் பாருலகமென்று
பாவையரே அறிந்திடுவீர்

மாநிலம் போற்றும் மாதவம் ஆனவளை
மடக்கி வைத்து மிடுக்காய் நடத்தி
மென்மைப் பூக்களை வன்மைப் படுத்தும்
உண்மைதன்னை உணர்ந்திடுவீர்

சத்திகள் பல இருந்தும்
சித்திகள் பல பெற்றும்
சகதிக்குள் வீழ்ந்து தவிக்காமல்
பொய்யான வாழ்வு கலைத்து
மெய்யாக வாழத்துணிந்திடுவீர்

மருட்சி கொண்ட மானாக வாழ்ந்ததுபோதும்
தலையாட்டும் பொம்மையாய்
தரணியில் நீ இருக்காமல்
மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமையை எதிர்த்து புரட்சி செய்ய
கண்ணே நீ துணிந்திடு
காலத்தை வென்றிடு.

-பகீரதி சுதேந்திரன்.
கைடன்கைம்.
ஜேர்மனி.

www.padippakam.com



# பத்தும் பறந்திட்ட பரம ஏழைகள்

போதும் என்ற மனம் இருந்தால் பொன்னாகும் - இது
புரியாத பலரிங்கே பறக்கின்றார் பகட்டினியே
ஏதும் கிடைப்பதை உண்ணலாம் என்ற நிலை மாறி - நோய்
உறவுகொள்ளச் சிலர் கிடக்கின்றார் கட்டிலிலே.
நாதியற்றோர் என்று சொல்லி வதியும் நம்மவர்கள் - இங்கே
நான் பெரிதா? நீ பெரிதா? என்கின்றார் போட்டியிலே
பாதாளம் பாயும் பணத்தை நாடும் பேராசைக்காரர் - பலர்
பத்தும் பறந்திட்ட பரம ஏழைகள் பணப்பசியிலே.

வாழ்க்கை நடாத்த வசதிவாய்ப்பு இருந்தும் - தினம்
வெற்றுமனங்களுடன் வாழ்பவர் பலரகம்
ஏழ்மை என்ற நிலை இல்லாத நாடுகளில் வசித்தும் - சிலர்
ஏழையையே மிஞ்சிவிட்டார் திருப்தி இன்மையால்
கூழ்கஞ்சி குடித்தாலும் நிம்மதி என வாழ்ந்தோர்- இங்கே
கோடீஸ்வரனாகிட குறுக்குவழிப் பணச்சம்பாதிப்பு
வாழ்கின்ற நிலத்தில் தற்பெருமைக் கொடிபறக்க — பலர்
வயிற்றுப்பசி மறந்து எங்கெங்கோ அலைகின்றார்.

சொந்த மண் தாண்டி தஞ்சம்புகுந்த நாடுகளில் - நாம்
தனவான்களாக வாழ்ந்தாலும் அகதிப்போர்வை.
வுந்தமண்ணில் வசதியாக உதவிப்பணம் கிடைத்தும் - நம்மில்
வளரும் ஏற்றத்தாழ்வுகள் பல வண்ணங்கள்.
சொந்தத் தொழில் மறந்து பொருத்தமற்ற தொழில்தேடி - உள்ள
சொற்பமும் தொலைந்திட நாயோட்டங்கள்.
எந்த மண்ணில் நம்மவர் வழ்ந்தாலும் மாறாதே — நிதம்
இன்னொருவரை மிதித்து தான் ஏறும் கோலங்கள்.

குடியிருக்க வீடு உணவோடு உடையிருந்தும் - நித்தம்
கலங்குகின்றார் மேற்தட்டு சுகம் அனுபவித்திட
அடிமைபோல வாழ்ந்தும் ஆடம்பரங்கள் காட்டிவிட - தினம்
அலைகின்றார் அகதி முத்திரை பொறித்தபடி.
துடிப்புக்கொண்ட இளைய நம் சந்ததிகள்- என்றும்
தினைக்கின்றார் மேனாட்டுச் சாயம் பூசியபடி.
நடிப்புச் சுதேசிகளாக வாழமுனையும் சிலருக்கு - உவமை
நடுக்கடலிலும் நக்கிடும் நீர்தான் கேளீரோ!

- வேலணை வீணா -

படிப்பகம்

www.padippakam.com



## தேடியும் கிடைக்கவில்லை

தன்னாட்டியே தானகதியாய்
தமிழ் மைந்தர் பட்ட பாடு போதாதென்று
யுத்த எச்சங்களாய் அவனை முடமாக்கிட
அங்கொன்றும் இங்கொன்றுமாய்
அடி தப்பியதால் சௌக்கியம் கேட்ட
மிதிவெடிதனில் சிக்கி – அவர் தம்
தசை கிழிந்து, நரம்பு நார் அறுந்து
எலும்புடைந்து ஈற்றில் சிதைந்த அங்கமிழந்து
மெய்யென்ற மேனி பொய்த்து விட
கொட்டிய குருதியில் மிஞ்சிய பலமிழந்து
உடைந்த மட்கலமாய் நொறுங்கிய
உள்ளத்தோடு துடிப்போரின் துயரத்தை,
அப்பாவியாக எண்ணிக்கையறியாது
மிதிவெடி சுமந்திருக்கும் – எம்மண்ணின்
கொடிய தலைவிதியை இக்கவியில்
அடக்கிட எனக்கோ தேடியும்
வார்த்தை கிடைக்கவில்லை.

*(ஓர் ஜெய்ப்பூர் நிறுவன அபிமானி)*

## விழிப்பு

கற்றைக் குழலும் கதிர் மேனியும்
ஒற்றைப் பார்வையும் ஒருமுறை சுழல
முற்றிப் பழுத்த மாங்கனியிடம்
விற்றுவிட்டேன் என்னை நானும்
பெற்ற அன்னையோ என்னை அழைத்து
கற்ற நோட்டுடன் கலியாணம் பேசி
திருமணப் பற்றை திணித்திட முனைப்பு
ஐயகோ நானோ அதன் பிடியில்
ஆயினும் மூச்சோ முழுமதி நினைவில்
தாயின் பேச்சோ தாரகமாக
அம்மா கட்டளை ஏற்றேன் என்றான்
பழியது கூறல் பாவையர் மேலா?
விழிப்பதில்லா ஆடவர் மேலா?
விழிப்பது இருவர் மேலும் இருத்தல் வேண்டுமே!

*திருமதி சுகந்தினி சுதர்சன்*

# எழுச்சியுடன் வாருங்கள்..!

பள்ளத்தில் உழல்பவரைப் பற்றிடக்கரம் நீழ்கையிலே
பாதாளத்தில் தள்ளிவிடும் பாதகரைக்கண்டீரோ
உள்ளத்தில் சூதுவைத்து உதட்டளவில் புன்னகைக்கும்
ஊதாரிகள் ஒன்றாய் ஊரையே கொழுத்திடலாமோ
துள்ளியெழுந்திடுங்கள் தூரதேசம் வாழும் உறவுகளே
துார்ந்திடும் நம்தேசத்தை தோண்டி எடுத்திடுவோம்...!

வெள்ளத்தில் கரையேறி விறைத்தே நிற்கையிலே
வேண்டுமென்று அணையுடைக்கும் வீணரைக்கண்டீரோ
வெள்ளைப் புறாக்களையே வெறுப்பினால் கொல்கையிலே
விடிவொன்று வருமென்று விரும்பிநாம் இருக்கலாமோ
வெள்ளிடை மலையாக நம்விடுதலை தெரிகையிலே
வேட்டுவைக்க நினைப்பவரை வீழ்த்திடவே வாருங்கள்...!

மெள்ளமெள்ள அமைதியிங்கே மெருகேறி வரும்வேளை
மெதுவாக முட்டுக்கட்டையிடும் மூதேவியை அறிவீரோ
குள்ளநரிக் கூட்டமொன்றை குதர்க்கமாய் ஏவிவிட்டு
குளிர்காய்திடுமந்த குருட்டெலியை நடமாடவிடலாமோ
கள்ளூறும் தமிழ்மொழி கசங்கி நசுங்கி செத்திடாமல்
காத்திடுவதற்கு ஒன்றாய் கரம்கோர்த்து வாருங்கள்...!

கள்ளிமுள்ளில் படுக்கையிட்டு காலமெல்லாம் வாழ்வதுவோ
களைந்தெறிந்து வெளிவர காலம்தான் கனிந்திடாதோ
காஞ்சிரங்குடா அக்கரைப்பற்று கல்முனை திருமலையென்று
கதறிய கண்ணீக்கதையின்னும் காலமெல்லாம் தொடரலாமோ
தள்ளிநின்றே பார்த்துத் தயங்கியதெல்லாம் போதுமையா
தாயகத்தினை மீட்டிட எதிர்த் தடையுடைப்போம் வாருங்கள்...!

சுள்ளிவிறகெடுத்து அன்னை சூட்டேடு உணவு சமைத்து
சுகமாகவாழ்ந்த வாழ்கை சுடகாடாய் ஆகிடலாமோ
அள்ளியள்ளி வந்து பிணமாய் அனலிடை போடுவதற்கு
ஆதரவற்ற அனாதைகளாய் ஆகிடலாமோ தமிழர்கள்
பள்ளிகொண்டது போதுமையா பாரில் வாழும் உறவுகளே
பாதகர்கள் கைகளிலிருந்து பாவிகளை மீட்டிட வாருங்கள்...!

www.padippakam.com




முள்ளினைப்பிடுங்கிய வலியின் முனகல் தணிகையிலே
முட்காடே சூழ்ந்துவந்தால் முடிவொன்றைக் காண்பதேப்போ
கொள்ளிபோட நினைப்பவருடன் குடித்தனம் நடத்துவதும்
கூட்டாளியாய் இருப்பதுவும் என்றும்கூடாத காரியம்தான்
எள்ளென்றால் எண்ணெயாகும் எங்கள் இளைஞர்காள்
எமதுறவுகளின் ஏக்கம்போக்கிட எழுச்சியுடன் வாருங்கள்...!

உள்ளத்தால் நாமெல்லாம் உத்தமர்களாய் எண்ணுகின்ற
உயர்வான மாவீரர்களை நினைக்குமிவ் உன்னதவேளையிலே
கள்ளமில்லா நெஞ்சகரைக் காடையர்கள் கூட்டம்புகுந்து
ககனவழியனுப்புமந்தக் காட்டுமிராண்டிதனத்தை அனுமதிப்பதா
சுள்ளெனச் சுட்டசெய்தி சூரியனையே எரிக்கும்வேளை
சும்மா இருந்திடாமல் அவர்க்கு சூடுவைப்போம் வாருங்கள்...!

**அம்பலவன்புவனேந்திரன்..**

## நிரந்தர அமைதி



- ஜெ. கரிகாலன்

அதிகாரவர்க்கத்தின்
ஆயிரமாயிரம்
படுகொலைகளுக்குப் பின்,
ஆர்த்தெழுந்த வீரத்தினால்
அடி உதையில்,
அடங்கி ஓடி ஒளிந்தபின்பு
அமைதிக்கான அழைப்பு.

ஓயாத அலைகளில்
சிக்கித் திணறிய பின்
கைகளுயர்த்தி
அமைதிக்கான ஆர்ப்பரிப்புகள்

துவக்குகளின்
சப்த ஓய்வில்லை
நிரந்தர அமைதி
இருந்தாலும்
ஒத்துக்கொள்வோம்
அமைதிக்கான
எவ்வொரு துவக்கத்தையும்

எங்கள் மண்
எங்களுக்காகும்போது
குடிகொள்ளும் ஓர் அமைதி
மாவீரர்களின் எஞ்சங்களில்
அப்பொழுது வாருங்கள்
நீங்களும் மெழுகுகள் ஏந்தி
எங்கள் மண்ணுக்கு

படிப்பகம்

www.padippakam.com

## கவிஞனாகிறான்.

சாதாரண மனிதனாகப்
பிறந்து
இயற்கை நிகழ்வுகள்
அவனைப் பாதிக்கின்றது
உணர்வலைகள் அவனை
எழுப்புகின்றது
அவன் துணிவாக
தன் மனதின்
எண்ணக்கிடக்கையை
வரைகின்றான்
கவியென ...சிலர்
பெயர் ..சூட்டினர்
மக்கள் பார்த்து
வியப்படைகின்றனர்
வாசித்து மகிழ்வடைகின்றனர்
அவனை மேலும் எழுத
தூண்டுகின்றனர்
மேலும் தனது
படைப்புக்களை
படைக்கின்றான்
அவன் கவிஞனாக
உருவாகிவிட்டான்
இவனே கவிஞன்.

## விலைமதிக்க முடியாத சொத்து

இயற்கை அன்னையின்
உலகில் விலை
மதிக்க முடியாத
ஒரே ஒரு சொத்து
தண்ணீராகும்
அதனை பாதுகாப்பது
மனிதனின் கையில்தான்
இருக்கின்றது.

## தாய்மொழி

பிறக்கும் மழலைக்கு
கைப்பாசை தான்
உலகமொழி
கண்ணசைவுகள் தான்
இனியமொழி
புன்னகைதான்
உறவுமொழி
வளர்ந்த பின்பு
மொழியை
விளக்கபடுத்தும் போது
தாய்மொழியாக
மாறுகின்றது.

## 25. உப்பு

வாயில் போட்டால்
உவர்க்கும்
உணவில் போட்டால்
சுவைக்கும்
புளியோடு உப்பிட்டால்
இனிக்கும்
பொருட்களோடு
சேர்ந்து விதம்விதமான
சுவையைக்கொடுக்கும்
உப்பு
கடலில் விழைந்து
நாட்டில் புகுந்து
மனிதனை அடிமையாக்கி
வைத்திருக்கும்
ஒரு பொருள்

ஈழமுருகதாசன்
Lüdenscheid

www.padippakam.com



## வேதனை

பனைமரமாய் அத்தனையும் அரசு வெட்டி எறிந்ததே
கோயில்கள் முழுவதையும் அழித்துவிட்டதே
மாடமாளிகைகள் செல்விழுந்து தகர்ந்து போனதே
பரிகாரல் சொன்ன அரசை எல்லாம்
கழுவில் ஏற்றிப் பார்க்கணும்
இராணுவர்கள் அத்தனை பேரையும்
உயிரோடு கொழுத்தணும்
பெண்களின் கர்ப்பெல்லாம் கறையானதே
அத்தனைபேருக்கும் சாட்டைஅடி கொடுக்கவேண்டும்
புதைகுழியில் தோண்டிய எலும்புகளெல்லாம்
எழும்பி ஆமிக்காரரை அமுக்கி விடவேண்டும்
அத்தனை வேதனைகளும் நம்மவருக்கே
ஆடி அடங்கும் காலம் வருமட்டும்.

## ஊமைக்காதல்

கொடுத்துவிடு நீ எழுதி எழுதி வடித்த கவிதைத் தாளை
கசக்கி எறிந்த காகிதத் துண்டுகளை எடுத்துத் தா
நீ நிலத்தில் வீசிய
றோசாப்பூ இதழ்களை அள்ளித்தா
தினம் தினம் உன்னோடு பேசித் தொலைத்த
ஆயிரம் வார்த்தைகளை உமிழ்ந்துவிடு
எனதன்பு உனக்கிருந்தால்
வாழ்க்கையை வென்று விடுவதாகக் கூறு
எதுவாக இருந்தாலும் கொடுத்துவிடு
காதலென்றால் மரணமட்டும்
நினைவுச் சின்னமா ஒன்று வேண்டுமே!

திருமதி ஜெயா. நடேசன் - Havixbeck

# க(வி)தைக் கலசம்

## பகுத்தறிவு

அவர்கள் காட்டுவழியே நடந்தார்கள்; அடர்ந்த காடு என்பதால் பகலிலும் சற்று இருளாக இருந்தது.

குழந்தை ஒன்றின் அழுகுரல் கேட்டது. இருவரும் நின்று நிதானித்து அழுகுரல் கேட்ட திசையை அறிந்து நடந்தார்கள்.

''குழந்தையும் ஒருமிருகந்தான்.'' ஒருவன் சொன்னான் ''ஏன்...''

மற்றவன் கோபமாகக் கேட்டான்.

''குழந்தைக்கும் மிருகங்கள் மாதிரி அஞ்சறிவுதான் இருக்கு. ஆறறிவானபகுத்தறிவில்லை. அதுதான் அதை மிருக மெண்டனான்.

''அட அதையேசொன்னனி''

இருவரும் சிரித்தபடி முன்னே பார்த்தார்கள்; குழந்தை போலக்கத்திய கரடி அவர்களைக்கண்டதும் ஓடி மறைந்தது.

மனிதனுக்கு கிடைத்த<br>
கொடை பகுத்தறிவு<br>
ஒவ்வொரு மனிதனுக்கும்<br>
வழிகாட்டும்<br>
உற்ற தோழன்<br>
மனிதனின் ஒவ்வொரு<br>
நேர்த்தியான<br>
செயற்பாட்டுக்கும் பின்னால்<br>
பகுத்தறிவு இருக்கும்<br>
மனிதனுக்குள்<br>
மறைந்தான்வது<br>
பகுத்தறிவே!

## நம்பிக்கை

அந்தப்பள்ளிக்கட்டடம் தலையிழந்த முண்டமாகக் கிடந்தது. மரநிழலில் வகுப்பொன்று இருந்தது. ஆசிரியர் வகுப்பினுள் நுழைந்தார். பிள்ளைகள் எல்லோரும் எழுந்து வணக்கம் சொல்லிவிட்டு அமர்ந்தார்கள்.

''இண்டைக்கு காலமை சாப்பிடாதாக்கள் கையுயத்துங்கோ''

ஆசிரியர் கூறிவிட்டு அவர்களைப்பார்த்தார்; எவரும் கை உயர்த்தவில்லை. ஆசிரியருக்கு அவர்கள் தயங்குவது புரிந்தது.

''ஒருதரும் தயங்க வேண்டாம்; சாப்பிடாட்டி கை உயத்துங்கோ''

ஆசிரியர் அழுத்தமாகவே சொன்னார்; ஒன்றிரண்டு கரங்களைத்தவிர ஏனைய கரங்கள் உயர்ந்தன. அவர் கைகளை விடும்படி கூறிவிட்டு கண்களைத்துடைத்தார்.

''நாங்கள் படிப்பம் சேர்''

எல்லோரது குரலும் ஒருமித்து ஒலித்தது; அவர் தன்னை ஒரு நிலைப்படுத்திப்படிப்பிக்கத் தொடங்கினார்.

வாழ்க்கை<br>
நம்பிக்கை வேர்களில்<br>
நிமிர்ந்து நிற்கிறது.<br>
நம்பிக்கை வேர்கள்<br>
நசியுண்டு போகின்ற<br>
வாழ்வும் அடியோடு<br>
பாறிவிடும்.<br>
நம்பிக்கை நரம்புகளை<br>
மீட்டுகின்ற போது<br>
நம்பிக்கை ஒளி<br>
பிரகாசமாகத்தெரியும்.

- பொலிகை யூரான்

www.padippakam.com



## உப்பு (சோடியம் குளோரைட்)

உப்பு மிகவும் மவுசு மிக்க பொருளாக இருந்து வந்ததால் அதற்காக போர்களும் கூட மூண்டன. பிரெஞ்சு புரட்சி ஏற்பட்டதற்கான காரணங்களில் ஒன்று, பதினாறும் லூயி மன்னர் உப்பின் மீது உயர் வரியை சுமத்தியதே. பண்ட மாற்று வணிகத்தில் மதிப்பு மிக்க பொருளாகவும் உப்பு பயன் படுத்தப்பட்டது. வட ஆபிரிக்காவின் வெவ்வேறு பாகங்களில் வாழ்ந்த மூரிஷ் நாடோடி வணிகர்கள் உப்புக்காக கிராமுக்கு கிராம் தங்கத்தைக் கொடுத்தனர். மத்திய ஆபிரிக்க படிங்குடியினர் சிலர் பாறை உப்புப் பாளங்களை பணமாக பயன்படுத்தினர். சம்பளம் என்பதற்கான ஆங்கில வார்த்தையாகிய சாலரி என்பது சாலரியம் என்ற லத்தீன் வார்த்தையிலிருந்து உருவானது. இந்த சாலரியம் உப்பு என்று பொருள் படும் சால் என்ற வார்த்தையிலிருந்து உருவானது. இது பண்டைய ரோம வீரர்களுக்கு வழங்கப்பட்ட சம்பளத்தை பணத்தோடு உப்பும் வழங்கப்பட்ட சம்பளத்தை குறித்தது. கிரேக்கர்கள் உப்பை கொடுத்த அடிமைகளை வாங்கினர். இதுவே அவன் உப்புக்கு விலைபெறாதவன் என்ற பழமொழி உருவாக வழி வகுத்தது. ஆரம்ப காலத்திலிருந்தே மனிதன் இயற்கையில் கிடைக்கும் உப்புநீரிலிருந்தோ, கடல் நீரிலிருந்தோ, பாறை உப்பிலிருந்தோ உப்பை பிரித்தெடுக்க கற்றுக் கொண்டான். மருந்தியல் பற்றிய ஒரு பண்டைய சீனப் பதிவில் 40க்கும் அதிகமான உப்பு வகைகள் குறிப்பிடப்படுகின்றன. அதில் உப்பை பிரித்தெடுக்கப் பயன்படுத்தப்பட்ட இரண்டு முறைகள் இன்று பயன்படுத்தப்படும் முறையை ஒத்திருக்கின்றன. சூரிய ஒளியை பயன்படுத்தி கடல் நீரிலிருந்த உப்பை பிரித்தெடுக்கும் முறை. மிகப் பெரிய நிறுவனம் உலகிலேயே மெக்ஸிக்கோவை சேர்ந்த பாஹா கலிபோர்னியா சூயரிலுள்ள பாயீயா ஸேபாஸ்டியான் வீஸ்காயீனோவின் கரைகளில் அமைந்துள்ளது. பொதுவாக கடல் நீரிலுள்ள உப்பின் சாதாரண அளவைவிட சுமார் ஒன்பது மடங்கு அதிகமான உப்பு சவக்கடல் நீரில் உள்ளது. உணவுக்கு சுவையூட்டுதல், இறைச்சியை பதப்படுத்துதல், சோப்பையும் கண்ணாடியையும் உற்பத்தி செய்தல் போன்றவற்றில் உப்பு பயன்படுத்தப்படுகிறது. உயர் இரத்த அழுத்த நோய் உள்ளவர்கள் உப்பையும் குறைவாக உட் கொள்ள வேண்டும். உயர் இரத்த அழுத்தம் உள்ளவர்களில் சுமார் முப்பது முதல் ஐம்பது சதவீதமானோர் தாங்கள் உட்கொள்ளும் உப்பினால் பாதிக்கப்படுகின்றனர். சில வகை உப்புக்கள்:

கறுப்புத்தூள் உப்பு - இந்தியா

ஃப்ளூர்டஸெல் - பிரான்ஸ்

செல்கீர் (கிரேசால்ட்) - பிரான்ஸ்

ஆலயீயா கடல் உப்பு - ஹவாய்

ஆர்கானின் கடல் உப்பு

திருமதி. ரஞ்சனா தவராஜ்

# தியாக தீபம் திலீபன்



உலக வரலாற்றிலேயே ஓர் புதிய அத்தியாயத்தின் தொடக்கம் மட்டுமல்ல... தமிழீழ மக்கள் புரட்சியின் திறவுகோல். ஈழ விடுதலைப் போராட்டத்தின் அகிம்சைத் தீ. அணையாவிளக்கு. அகிம்சையால் எழுந்த பாரதமெனும் நாட்டுக்கு, அகிம்சையின் பொருள் கற்பித்த புலிவீரன்.

இந்திய - சிறீலங்கா ஒப்பந்தமெனும் சூழ்ச்சிப் பொறியோடு, தமிழீழ மக்களின் துன்பங்களையும், வேதனைகளையும் வெட்டி வீழ்த்தி விடுவோமென்று கூறிக் கொண்டு இந்தியப் படைகள் மண்ணில் காலூன்றியபோது தமிழீழ மக்களின் மகிழ்ச்சி உச்சிமேவிப் பிரவாகித்தது.

ஆனால் இந்திய அரசின் கபடம் மெல்ல மெல்ல வெளிவரத் தொடங்கியபோது ஐந்து கோரிக்கைகளை முன் வைத்து பன்னிருநாட்கள் தண்ணீருமின்றி உண்ணாநோன்பிருந்து தமிழீழ விடிவிற்காய் உயிர்த்தியாகம் செய்தவர் தியாகி திலீபன்.

1963.11.27இல் ஊரெழு என்னும் கிராமத்தில் பிறந்த இராசையா பார்த்தீபன் என்னும் திலீபன் கல்வியில் சிறந்து விளங்கி பல்கலைக்கழக மருத்துவபீட அனுமதியைப் பெற்றான். தமிழீழ மக்களின் இன்னல்கண்டு தனது கல்வியை உதறித்தள்ளி 1983ஆம் காலப் பகுதியில் விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைத்துக் கொண்டான்.

ஆரம்ப காலங்களில் இயக்க அரசியல் வேலைகளில் ஈடுபட்ட திலீபன், பின்னர் யாழ் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டான். இககாலப்பகுதியில் சிறீலங்காப் படைகளுடனான நேரடி மோதல்களிலும் தனது திறமையினை வெளிப்படுத்தி வந்தான். மக்கள் மத்தியில் மிக அன்பாகப் பழகியதுடன் அவர்க முன்னேற்றத்துக்காக பல அமைப்புகளையும் நிறுவினான்.

விடுதலைப் புலிகள் அமைப்பையும் பல புதிய பரிமாணங்களிற்கு இட்டுச் செ வழிவகுத்துச் செயற்பட்டான். களத்தில், சுதந்திரப் பறவைகள் உட்பட பல பத்திரிகைகளை ஆரம்பித்து செயற்படுத்தினான். விடுதலைப் புலிகளின் மாணவர் அமைப்பு, மகளிர் அமைப்பு. சுதந்திரப் பறவைகள் அமைப்பு, தேச பக்தர் அமைப்பு என்பனவற்றுடன் தமிழீழ கிராமி நீதி மன்றங்கள், விழிப்புக் குழுக் சர்வதேச உற்பத்திக் குழுக்கள்

www.padippakam.com



தமிழீழ ஒலி ஒளி சேவைக் கட்டுப்பாட்டுச் சபை, தமிழர் கலாசார அவை என இவர் ஆரம்பித்து நெறிப்படுத்திய பலவற்றை சொல்லிக் கொண்டே போகலாம்.

இவ்வாறு விடுதலைக்காய் தீவிரமாக உழைத்து வந்த ஓளப். கேணல் திலீபன் இந்திய - சிறீலங்கா ஒப்பந்தத்தை சிறீலங்கா அரசு மீறுவதை கண்டு ஐந்து கோரிக்கைகளை வைத்து உண்ணா நோன்பு இருந்தான். பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுப்புக் காவலிலும், சிறைகளிலும் உள்ளோர் விடுவிக்கப்பட வேண்டும். புனர்வாழ்வு என்னும் பெயரில் தமிழர் தாயகத்தில் நடத்தப்படும் சிங்களக் குடியேற்றங்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். இடைக்கால அரசு நிறுவப்படும்வரை 'புனர்வாழ்வு' என்னும் சகல வேலைகளையும் நிறுத்த வேண்டும். வடக்கு கிழக்கில் காவல் நிலையங்கள் திறக்கப்படுவது நிறுத்தப்பட வேண்டும். இந்திய அமைதிப்படையின் மேற்பார்வையில் உள்ள ஊர்காவற் படையினரின் ஆயுதங்கள் திரும்பப் பெறப்பட்டு, தமிழ்க் கிராமங்கள். பள்ளிக்கூடங்கள் என்பவற்றில் குடியிருக்கும் இராணுவ காவல் நிலையங்கள் அகற்றப்பட வேண்டும் என முன் வைத்து பல்லாயிரக்கணக்கான மக்கள் திரள் முன் தண்ணீருமின்றி தன் உண்ணாவிரதத்தை ஆரம்பித்தான் திலீபன். பன்னிரு நாட்கள் தன்பாராமுகத் தன்மையினால் திலீபன் என்னும் தியாக வீரனை சாவின் வாய்க்குத் தீனியாக்கியது இந்திய அரசு.

மக்கள் புரட்சி வெடிக்கட்டும், சுதந்திர தமிழீழம் மலரட்டும் என்று கூறி மரணித்த அந்த மாவீரனின் 15ஆம் ஆண்டு நினைவுடன் ஒன்றுபட்ட மக்கள் சக்தியாய் எழுந்து நின்று, தினம் தினம் தீக்குளித்து போராடி நிற்கிறது தமிழினம்.

நீ நன்றாகப் பேசினாய் எனப் பாராட்டப் பெறுவதை விட, நீ நன்றாகச் செய்தாய் எனப் பாராட்டப் பெறுவது மேல். மண்டியிட்டு நிற்கும் பெரிய மனிதனை விட, நின்று கொண்டு ஏர் உழும் உழவனின் வாழ்க்கை மேல். கடனோடு காலையில் எழுவதை விட, பட்டினியோடு இரவில் படுப்பது மேல்.

*- பெஞ்சமின் பிராங்கிளின்.*

# இவர் கல்யாணத்தில் 'மாவீரர்'



இவர்தான் 60 கல்யாணம் செய்த 'ஆபூர்வ' மனிதர்.
உள்படம்: 51–வது மனைவி

நம்ம ஊர்களில் பெரும்பாலும் ஒருவருக்கு இரண்டாவது திருமணம் என்றாலே அநேகமாக அது அவரது 60-வது ஆண்டைக் கொண்டாடும் திருமணமாகவே இருக்கும்.

ஜப்பானிலோ ஒருவர் நிஜமாகவே 60 கல்யாணம் வரை பண்ணிக்கொண்டிருக்கிறார். இவரது 60 திருமண விஷயம் வெளிவந்தபோது அது உலகம் முழுக்க அதிர்ச்சி அலைகளை பரப்பிவிட்டது.

அந்த ஜப்பானியரின் பெயர் ஹறோ ஒயக்குமட்டோ. ஜப்பானில் மட்டும் இவர் 50 திருமணங்களை செய்து இருக்கிறார். 2000-ம் ஆண்டில் தாய்லாந்து போன போது அங்கும் இவரது திருமணம் தொடர்ந்தது. சியம் ரீப் என்ற பெண்மணியை 51-வது மனைவியாக்கியவர், அடுத் தடுத்து 9 பேரை மணந்து '60 திருமணம் செய்தவர்' என்ற இலக்கை அடைந்துவிட்டார்.

இதுதான் அவரது இலக்கு என்பதில்லை. அதற்குள் அங்குள்ள போலீஸ் இவர் மீது பார்வையை பதித்த நேரத்தில் இவர் 'எஸ்கேப்'.

இவரைப்பற்றி போலீசார் விசாரித்தபோது கிடைத்த தகவல்கள் அவர்களுக்கு ஆச்சரிய மூட்டின. திருமணம் செய்து கொண்ட அன்று ஒரு இரவு மட்டுமே இவர் மனைவியுடன் தங்குவாராம். பிறகு மணப்பெண் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் இவரை தேடிக்கொண்டிருக்க, இவரோ தேடிப்பிடித்து அடுத்த மணமகளுக்கு மாலை சூடிவிடுவாராம்.

எப்படி இவரை பெண்கள் நம்பினார்கள்? அப்படி அவர்கள் இவரை நம்பும் அளவுக்கு இவர் எப்படி அவர்களின் நம்பிக்கைக்குரியவராக மாறி, மணமேடை வரை வந்தார் என்பது போலீசாருக்கே புரியாத புதிராகவே இருக்கிறது.

www.padippakam.com



ஒருவேளை இவர் போலீசில் பிடிபட்டு ஜெயிலுக்குப் போனால், அங்கும் தன் வேலையைக் காட்டுவாரோ என்ற கவலை போலீசாருக்கு. ஜெயிலில் யாராவது பெண் கைதிக்கு தாலி கட்டி தனது மனைவியரின் எண்ணிக்கையை கூட்டிவிடுவாரோ என்ற கவலைதான்.

ஜப்பான்காரர்களுக்கோ போலீஸ் கண்ணில் அவர் மண் ணைத்தூவிவிட்டு நடமாடும் இந்த நாட்களில் எத்தனை பெண்களுக்கு மாப்பிள்ளை ஆகி. யிருக்கிறாரோ என்ற கவலை.

# எது சிறந்த உணவு?

சிறந்த உணவுகள் எவை எவை என்று இங்கே தெரிந்து கொள்ளுங்கள். பருப்பு, கீரை வகைகள், காலி பிளவர், காளான் போன்றவைகளில் அடங்கி இருக்கும் தாது தத்துக்கள் உடலுக்கு மிகவும் ஏற்றவை. கூடுதலாக கொழுப்பு சத்து நிறைந்த உணவு உண்ணும் போது உடல் குண்டாகும். குண்டான உடலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர இந்த உணவு உதவும்.



தேவையற்ற கொழுப்பு, சருமத்தில் புற்று நோயை உருவாக்க கூடும். தேவையற்ற கொழுப்பு அதிகமாக உருவாக மாமிச உணவு துணை புரிகிறது. அதனால்

மாமிசம் சாப்பிடுவதை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருங்கள்.

ஜீரணத்தை துரிதப்படுத்தும் சக்தி, நார் சத்து நிறைந்த உணவுகளுக்கு இருக்கிறது. ஜீரணக் கோளாறுகள் தான் பல்வேறு நோய்களுக்கு காரணமாக இருக்கிறது. அதனால் நார் சத்து நிறைந்த உணவுகளை அதிகம் சாப்பிட்டு, ஜீரணத்தை சரி செய்ய வேண்டும். காய்கறி, பழங்களில் நார் சத்து அதிகமாக இருக்கிறது. ஆரஞ்சு, ஆப்பிள், நேந்திரம்பழம், பீன்ஸ், காலி பிளவர், போன்றவைகளில் அதிகமான அளவு நார் சத்து

இருக்கிறது.உடலில் ஏற்படும் அதிக சூட்டை கட்டுப்படுத்தவும், உடலுக்குள் ஏற்படும் பல்வேறு இயக்கங்களுக்கு அத்தியாவசியமாகவும் இருப்பது, தண்ணீர். வியர்வையாகவும், சிறுநீராகவும் உடலில் இருந்து தண்ணீர் விரயமாகிறது. அதனால் தினமும் 8 முதல் 12 'கப்' தண்ணீர் பருக வேண்டும். தண்ணீரின் தேவை. ஆண் பெண் இருவருக்கும் மாறுபாடாக இருக்கிறது. ஆண்களுக்கு 12 கப் தேவைப்படும் போது பெண்ணுக்கு 8 கப் போதுமானது.

# குறுக்கெழுத்துப்போட்டி முடிவு - 72

## (புரட்டாதி - ஐப்பசி 2002)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| அ | ன் | னை | தி | ரே | சா | ஸி |
| ன் | ரை | தி | க | ர் | ணா | ன் |
| பு | ட | ல | ங் | கா | ய் | வ |
| ட | யா | க | ள் | வ | ன் | தை |
| மை | னா | ல் | ம் | ன | மா | வி |
| சு | டை | டி | வெ | ணி | ண் | க |
| வி | த | வை | ர | ம் | க | தி |

பங்குகொண்டவர்களும் பரிசு பெறுபவரும்!...

| | | |
|---|---|---|
| திருமதி:- | ஜெயா நடேசன் | - Havixbeck |
| திருமதி:- | றூபி வாசீகன் | - Switzerland |
| திருமதி:- | சுகந்தி யோகீஸ்வரன் | - Göttingen |
| திருமதி:- | துரைராணி நாகேஸ்வரன் | - Gondelsheim |
| திருமதி:- | ஜெயந்தா பாலச்சந்திரன் | - Bochum |
| திருமதி:- | றஞ்சனா தவராஜ் | - Wadgassen |
| திருமதி:- | பகீரதி சுதேந்திரன் | - Heidenheim |
| திருமதி:- | சுலோசனா புவனேந்திரன் | - Duisburg |
| திரு:- | க. தவராசன் | - Menden |
| செல்வன்:- | பிரசன்னா செல்வராசா | - Castrop - Rauxel |

**இவர்களுக்கு „மண்" சஞ்சிகை பாராட்டுக்களைத் தெரிவிக்கின்றது. இவர்களில் அதிஸ்டசாலியாகத் தெரிவு செய்யப்பட்டுப் பரிசு பெறுபவர்:**

திருமதி றஞ்சனா. தவராஜ் - **Wadgassen**

உலகில் எந்த ஆலயத்திற்கும் இல்லாத சிறப்பு மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்திற்கு உண்டு. மீனாட்சி அம்மன் ஆலயத்தில் முப்பத்து மூன்றாயிரம் சிற்பங்கள் உள்ளன.

www.padippakam.com



# குறுக்கெழுத்துப்போட்டி – 73

## (கார்த்திகை – மார்கழி 2002)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | 06 | 07 |
| 08 | 09 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | 32 | 33 | 34 | 35 |
| 36 | 37 | 38 | 39 | 40 | 41 | 42 |
| 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 |

**இ. – வ.**

01-06: தமிழர்களின் தியாகநாள். விடுதலை வீரர்நாள்.
09-14: மட்டக்களப்பை இப்படியும் அழைப்பார்கள். (கு)
22-24: இளையவன் வீட்டில் இவனுக்குத்தான் வேலைகளும் அதிகம்.
31-34: தமிழீழ தியாகவீரன். விடுதலைவீரன்.
36-37: வீதிகள் அமைக்கப் பயன்படுத்துவது.

**வ. – இ.**

42-40: ஊர்வன ஒன்றின் வாழ்விடம். (கு)
46-43: தொலைபேசிபாவனை அதிகரித்ததால் செய்திபரிமாறும் இது எழுதும் பழக்கம் நம்மவர்களிடையே குறைந்துவிட்டது எனலாம்.

**மே. – கீ.**

01-29: அமரர் குமார் பொன்னம்பலம் அவர்களுக்கு விடுதலைப்புலிகளின் தலைவரால் வழங்கப்பட்ட பட்டம்.
02-16: பஞ்சபாண்டவர்களில் ஒருவன்
05-47: நாம் எங்கு, எப்படி வாழ்ந்தாலும் இந்தப்பற்றை மறக்காமல் வாழ வேண்டும்.
07-14: நம் நாட்டுக் குளிர்பானம்.
13-34: ஆண் நாய்க்குட்டியை இப்படியும் அழைப்பார்கள்
31-45: திருடனுக்கு நிகரான பெண் இவள்.

**கீ. – மே.**


24-10: நம்மவர்களின் உணவு ஒன்று.
35-14: மார்கழிமாத உத்தமர் திருநாள்.
44-23: மானிடராய் பிறந்த நாம் இது செய்து வாழ்ந்தால் ஆயுள் நிலைக்கும்.
46-18: மனித உள்உறுப்புக்களில் ஒன்று.

படிப்பகம்
- முடிவுதிகதி 20.12.2002 -

www.padippakam.com

மானிடப்பிரியனின்
தொடர்கதை........

அத்தியாயம் - 2



புனிதம் பை ஒன்றைத் தூக்கிக் கொண்டு மற்றச் சாமான்களையும் வாங்கி பஸ்சுக்குள் வைத்தாள். அவர்களே கடைசியாக ஏறினார்கள். பஸ் கொச்சிக்கடையை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது.

புனிதம் யன்னல் பக்கம் இருந்துகொண்டு வெளியுலகை ஒருமுறை நோட்டம்விட்டாள். கடைகளில் வரிசையாகத் தொங்கவிடப்பட்டிருக்கும் வண்ணவிளக்குகள் பஸ்சின் விரைவோடு வந்து கொண்டிருந்தன. கடைகளில் நிறையவே இன்றும் கூட்டமிருந்தது. பொருட்களை வாங்குவோரும். வாங்கியபின் திரும்ப வெளியில் வருவோருமாக வீதியில் அவர்கள் வந்தபோது இருந்ததை விட வாகனங்கள் மிகக் குறைவாகவே இருந்தன. பஸ்க்காரன் தனது இஸ்ரத்திற்கு விரைவாகவே பஸ்ஸை ஓட்டினான். அடுத்த பஸ் ஸ்ராண்டில் நிற்கும் சனங்களை முதலில் ஏற்ற வேண்டும் என்கின்ற அவசரம், இப்படிப் பல பஸ் ஸ்ராண்டுகளில். மூவருமே ஒருவரோடு ஒருவர் பேசிக் கொள்ளவில்லை.

சுற்றியிருப்பவர்கள் எல்லோரும் சிங்களவர் என்ற காரணம்தான். நடைபெறும் பிரச்சனைகளில் மூவருமே பாதிக்கப்பட்டவர்கள் என்ற உணர்வுகளும் அனுபவங்களுமே அவர்கள் மத்தியில் சுமையைத் தோற்றுவித்தது. ஏன் பிரச்சனையை? அதிக நேரம் பிடிக்கவில்லை, அவர்கள் இந்தச் சந்தியில் இறங்க.

„பிள்ளை சாமானைக் கவனமாகப் பார். எல்லாம் எடுத்தனியோ?" „ஓமணை. எல்லாம் இருக்கு." டெய்சி ரீச்சர் இறங்கும் போதே கண்ணில் தென்பட்ட மாதா சுருவத்திற்கு தனது வணக்கத்தைச் செலுத்திக் கொண்டா. புனிதம்

www.padippakam.com



இதனைக் கவனிக்காமல் இல்லை. ,,ரீச்சர் இதில இருந்து இன்னும் கன தூரம் போக வேணுமே?" ,,இல்லையம்மா. கன தூரம் என்றில்லை. சாமான் ஒன்றும் இல்லாட்டி நடந்து போகலாம். இதுகளை தூக்கிக் கொண்டு கஸ்ரம். அம்மாவாலயும் ஏலாது." ,,ரீச்சர். எனக்கே சொல்லிறியள். இதெல்லாம் இப்ப பழகிப் போச்சு. அந்தப் பிரச்சனையில எவ்வளவு சாமானைத் தூக்கிக் கொண்டு ஊர் ஊராய் பல மைல் தூரம் நடந்திருப்பம். நல்லா அனுபவிச்சிற்றம்." சொல்லும்போதே மகேசின் கதைகளில் சோர்வு தெரிந்தது.

டெய்சி ரீச்சர் அதனைப் புரிந்துகொண்டார். இந்த அளவிற்கு டெய்சி ரீச்சர் பாதிக்கப்படவில்லை என்றாலும் அங்கால இருக்கும் தமிழ் மக்களின் கஸ்ரங்கள் துயரங்கள் அறிந்து வைத்திருந்தார். ,,சரி சரி பேசிக் கொண்டு நின்றால் நேரம் போயிடும், வீட்டைபோய் ஆறதலாகக் கதைப்பம். இப்ப ஆட்டோ ஒன்றைப் பிடிப்பம்." ,,ஓம் ரீச்சர். போய் ஆசை தீரக் குளிச்சால்தான் கொஞ்சமாவது ஆறதலாக இருக்கும், ஆட்டோவைக் கூப்பிடுங்கோ. அதுக்கும் நேரம் செல்லுமோ." மகேஸ்தான் கேட்டாள். ,,அதுக்கு நேரம் செல்லாது."

அவர்கள் மறிக்கவேயில்லை அவர்களுக்கும் பக்கத்தில ஆட்டோ ஒன்று வந்துநின்றது. சாமானைத்தூக்கி வைத்துவிட்டு அவர்களும் ஏறிக்கொண்டார்கள். ,,பள்ளஞ்சேனை." ,,ஆ, பள்ளஞ்சேனையோ" என்று கேட்ட ஆட்டோறைவர் மற்றப்பக்கமாக ஒரு சுற்றிச் சுற்றி நேராகப் போய்க்கொண்டிருந்தான். ஆட்டோ றைவர்கள் அதிகமாக இரண்டு மொழிகளிலும் சரளமாகப் பேசுவார்கள், சிலர் தமிழ் தெரிந்தாலும் தெரிந்தது மாதிரிக் காட்டிக்கொள்ளவே மாட்டார்கள். இவர்களை டெய்சி ரீச்சர் பல தடவைகளில் அடையாளம் கண்டு கொண்டார். இந்தப் பகுதியில் ஆட்டோ வைத்திருப்பவர்களில் அநேகமானவர்களை டெய்சி ரீச்சருக்குத் தெரியும். ஐந்து வருடங்களுக்கு மேலாகப் பள்ளஞ்சேனையில் தான் அவ வீடெடுத்து வாழ வேண்டியிருந்தது. சிங்களம் ஓரளவுக்குத்தான் தெரியும். கதைக்கின்ற கதையில் தமிழர் என்பதைக காட்டிக் கொடுத்துவிடும்.

ஆட்டோ விரைவாகக் குலுங்கிக் குலுங்கிப் போய்க் கொண்டிருந்தது. மகேசும் புனிதமும் ஒருவரையொருவர் திரும்பிப் பார்த்துக் கொண்டனர். பாதை சீராக இருக்கவில்லை. கற்கள் இடறுப்பட்டு குன்றும் குழியுமாகக் கிடந்தது. ஆட்டோக்காரன் சீரான பாதையைத் தேடி ஆட்டோவை ஓட்ட வேண்டியதாக இருந்தது. புனிதம் கையால இடிக்க. ,,என்ன பிள்ளை?" ,,அங்க பாருங்கோ." மெதுவாகச் சொன்னாள். அவள் கண்களின் குறியைப் பார்த்து மகேசும் திரும்பினாள். டெய்சி ரீச்சர் இருவரையும் கையால் அமர்த்திவிட்டு. ,,நாளைக்கு இஞ்ச வரத்தானே வேண்டும். அது கொர்ச்சிக் கடை பொலிஸ் ஸ்ரேசன்." சுற்றி வர மண் மூடை அடுக்கி காவலுக்கு ஆண்கள் பெண்கள் என்று நிறையப் பொலீஸ். எந்த நேரமும் தாக்கப்படலாம் என்ற எதிர்பார்ப்பில் ஆயுதங்களுடன் தற்பாதுகாப்பிற்காக நிறுத்தியிருந்தார்கள். நீண்ட நாளைக்குப் பிறகு தற்போது பாதுகாப்பு அதிகம் பலப்படுத்தப்பட்டிருந்தது. இரவு நேரம்தான் பாதுகாப்பில் கவனம் செலுத்தியிருந்தார்கள். புனிதம் அங்கப்

படிப்பகம்

பக்கமாக வெறிச்சுப் பார்த்துக் கொண்டிருந்தாள். எல்லாம் சின்னப் பெடியள், அந்த வெளிச்சத்தில் அவர்களின் முகம் பளிச்சென்று தெரிந்தது. பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக, ரயில்பாதை, சீ என்றபடி ஆட்டோக்காரன் ஆட்டோவை நிறுத்தினான். பாதையைத் தாண்ட முடியாமல் தடி கடவையை மறித்திருந்தது. ,,றெயில் வரப்போகுது." டெய்சி ரீச்சர் சொன்னா. புனிதம் பொலிஸ் நிலையத்தையே வெறிச்சுப் பார்த்துக் கொண்டு இருந்தாள். அவள் நினைவுகளில் மீண்டும் ஒரு பெருமூச்சு, இந்த வயசுதான் அவளுக்கும், படுபாவி அவள். அந்தப் பிஞ்சை ஈன இரக்கம் பார்க்காமல் துடிக்கக் துடிக்கக் கொண்டார்களே. அவள் கண்களில் இருந்து பொல பொல வென்று கண்ணீர். இதில நிற்கிறதுகள்ள எத்தனை உயிரோடை வாழும். ஏனிந்தச் சண்டை பிரச்சனையை சமூகமாகத் தீர்த்து வைத்தால் ஏனிந்த இழப்புகள். இந்த அரசாங்கம் ஏனிதை உணரவில்லை. மனதுக்குள் நினைத்துக்கொண்டாள். புகையிரதம் வருவது தூரத்தில் தெரிந்தது. காவலில் நின்றவர்கள் ஒருவரோடு ஒருவர் கதைத்துக் கொண்டு நின்றனர்.

ஆட்டோக்காரன் ஆட்டோவை ஸ்ராட் செய்தான். புகையிரதம் போனதும் உடன் புறப்படுவதற்கு ஆயத்தமாக, அது ஒரு நீண்ட புகையிரதம் போய் முடியச் சிறிது நேரம் சென்றது. ,,அப்பாடா" என்று எல்லோரும் மூச்சுவிட்டனர்.

,,பொட்டக் நவத்தாண்ட" டெய்சி ரீச்சர் சொன்னபோது அந்த வீட்டின் முன்னால் ஆட்டோ நின்றது. மூவரும் இறங்கிக் கொண்டனர். டெய்சி ரீச்சர்தான் பணத்தைக் கொடுத்தா. ,,அம்மா காசை நீங்கள் கொடுங்கோ. ரீச்சர் இஞ்ச பிடியுங்கோ." ,,நான் குடுத்திற்றன். பிறகு பார்ப்பம்." அது ஒரு பெரிய வீடு. லயிற் போட்டிருந்ததால் வீட்டின் தோற்றம் பளிச் சென்று தெரிந்தது. பள்ளஞ்சேனையைக் குறுக்கறுத்தே அந்தப் பிரதான பாதை செல்லுகின்றது. பிரதான பாதையின் பக்கத்திலேயே அந்த வீடு இருந்தது. வீட்டின் இடது பக்கமாக வீடுகள் தொடராகக் கட்டப்பட்டிருந்தன. வலது பக்கம் வெறும்காணி அதற்கப்பால் விசாலமான ஒரு வீடு. வீட்டின் பின்பக்கம் தென்னந்தோட்டம். அதற்கப்பால் ஒரு வீடு. இருட்டியிருந்தபடியால் புனிதத்திற்கும் மகேசுக்கும் இதற்கு மேல் எதுவும் தெரியவில்லை நாளைக்கு எல்லாவற்றையும் பார்ப்போம்.........

தொடரும்

**இலங்கையில் 1981 ஆண்டு கணிப்பின்படி**

| | | | |
|---|---|---|---|
| **பௌத்த மதத்தவர்கள்** | - 69.3 % | **சிங்களவர்** | - 74.0 % |
| **இந்துக்கள்** | - 15.5 % | **தமிழர்** | - 25.2 % |
| **கிறிஸ்தவர்கள்** | 7.6 % | **ஏனையவர்கள்** | - 8.0 % |
| **முஸ்லீம்கள்** | - 7.5 % | | |
| **ஏனைய மதத்தவர்கள்** | - 1.0 % | | |

www.padippakam.com



# செய்திச்சரம்

## இலங்கை:-

13.09.2002

- கொழும்பில் சமாதானத்தை வலியுறுத்தி சகல இனத்தவர்களுமாக 5 லட்சம் பேர் கலந்துகொண்டனர்.
- அமெரிக்க இராஜாங்க பிரதி அமைச்சர் யாழ்குடா நாட்டிற்கு விஜயம் செய்து போரினால் பாதிக்கப்பட்ட பல இடங்களையும் பார்வையிட்டார்.
- சிறிலங்கா பிரதமரின் ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் வன்னிக்குச் சென்று தமிழீழ அரசியல்துறைப்பொறுப்பாளரைச் சந்தித்து உரையாடி யுள்ளார்.
- வடகிழக்கு இன்று தனிநாடு, ஈழராட்சிய வரைபடமும் தயார்... கண்டி சுதந்திரக்கட்சி மாநாட்டில் ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு.

19.09.2002

- நாட்டில் சமாதானத்தை வலியுறுத்தி சகல இனமதத்தவர்களுமாக ஒன்று சேர்ந்த 5 லட்சம்மக்கள் தலைநகரில் எழுச்சிப் பேரணி ஒன்றை நடாத்தினார்கள்.

29.09.2002

- தாய்லாந்தின் தலைநகர் - பாங்கொக் நகரின் அருகே உள்ள சட்டா ஹிப் கடற்படைத்தளத்தில் விடுதலைப் புலிகள் இலங்கை அரசு தரப்பினர் முதற்கட்டப் பேச்சுவார்த்தை நடைபெற்றது.
- இலங்கையின் புதிய பொலிஸ்மா அதிபராக ரி.ஈ. ஆனந்தராசாவை ஜனாதிபதி நியமனம் செய்துள்ளார்.
- தியாகதீபம் திலீபனின் 15வது ஆண்டு நினைவுதினம் தமிழீழத்திலும், புலம்பெயர் நாடுகளிலும் சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டது.

03.10.2002

- ஈழத்தின் சிறந்த கவிஞராக, எழுத்தாளராக, விமர்சராக இலக்கிய உல கிற்கு புகழ்பரப்பிய கீழ்க்கவைப் பொன்னையன் பாரிசில் தனது 54வது வயதில் காலமானர்.
- 2003ம் ஆண்டில் இலங்கை அரசு போர்விமானங்கள், தாக்குதல் படகு கள், கவசவாகனங்கள் உட்பட பெருமளவு போர்த்தளபாடங்களை கொள்வனவு செய்யவுள்ளது.
- ஓமந்தையில் இலங்கைப்படைகள் - விடுதலைப்புலிகள் கைதிகள் பரிமாற்றம் இடம்பெற்றது. தமிழ்- - சிங்கள மக்கள் மத்தியில் மகிழ்ச்சி.
- இலங்கைப்பிரதமர் ரணில் அமெரிக்கா சென்று பல முக்கிய தலைவர் களைச் சந்தித்தார். வடகிழக்கை அபிவிருத்தி செய்ய பெருமளவு நிதியையும் உதவியாகக்கோரியுள்ளார்.

10.10.2002
- மட்டக்களப்பு-ஏறாவூர் பிரதேசத்தில் 15வயது தமிழ்ச்சிறுமி பாலியல் வல்லுறவுக்குப் பின் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.
- நெடுந்தீவில் பாரியகடற்படைத்தளம் கடற்படை அமைக்கிறது. கண் காணிப்புக்குழுவிடம் விடுதலைப்புலிகள் ஆட்சேபம்.

25.10.2002
- மானிடத்தின் தமிழ்க்கூட்டல் 2002, 3 நாள் மகாநாடு யாழ்ப்பாணத்தில் வெகுசிறப்பாக நடைபெற்றது.
- திருக்கோவில் அதிரடிப்படை சுட்டதில் 7 தமிழர்கள் பலி, 15 பேர் படுகாயம், திருகோணமலை ஊர்வல அசம்பாவிதத்தில் 3 பேர் பலி 50 பேர் படுகாயம்
- தமிழீழ பெண்கள் எழுச்சி தின விழா கிளிநொச்சியில் வெகுசிறப்பாகச் கொண்டாடப்பட்டது.

உலகம்:-

05.09.2002
- கர்நாடக மாநில முன்னாள் அமைச்சரும் ஜனதாத்தளத் தலைவர்களில் ஒருவருமான எச். நாகப்பாவை சந்தன வீரப்பன் குழுவினர் கடத்தியுள் ளனர்.
- மத்திய சீனாவில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் 7 லட்சம் பேர் இருப் பிடங்களை விட்டு இடம்பெயர்ந்துள்ளனர்.

12.09.2002
- வடகொரியா-தென்கொரியா இணைப்பு சம்பந்தமான தேசிய உயர்மட்டப் பேச்சுவார்த்தை மீண்டும் ஆரம்பமாகி நடைபெற்றுள்ளது
- ஈராக் ஜனாதிபதி சதாமின் பதவியை இழக்கச் செய்யும் நோக்கில். ஈராக் மீது அமெரிக்கா பாரிய தாக்குதல் ஒன்றை 2003ம் ஆண்டில் மேற் கொள்ள இருப்பதாக செய்திகள் வெளிவந்துள்ளன.

19.09.2002
- செப்டம்பர் 11ம் தேதி அமெரிக்க வர்த்தகவலயம் தீவிரவாதிகளால் தாக் கப்பட்ட நினைவுநாள் கூர்ந்து அமெரிக்காவில் பிராத்தனை வைபவங்கள் இடம்பெற்றன.

www.padippakam.com



26.09.2002

- இத்தாலி நாட்டில் தஞ்சம் புகுந்திருக்கும் சுமார் 8000 தமிழர்களை அடுத்து வரும் 3 மாதங்களில் நாடுகடத்தும் என அந்த நாட்டின் வெளி நாட்டு அமைச்சு தெரிவிப்பு..
- யப்பானில் சுமார் 18 ஆயிரம் பெண்கள் 100 வயதையும் தாண்டி வாழ்வதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.
- ஐக்கிய நாடுகள் தாபனத்தின் 190 வது நாடாக சுவீஸ்லாந்து நாடும் 191வது நாடாக அண்மையில் இந்தோனிசியாவிலிருந்து விடுபட்ட நாடான சின்னஞ்சிறு கிழக்குத் தீமோரும் இணைந்துகொண்டுள்ளன.

26.09.2002

- புதுடில்லியில் ரயில்விபத்து ஏற்பட்டதில் 105 பேர் பலியாகியுள்ளனர்.

03.10.2002

- கியூபா நாட்டில் வீசிய கடும் சூறாவளியால் 1 லட்சது 50 ஆயிரம் மக்கள் இடம்பெயர்வு ஆயிரக்கணக்கான கால்நடைகள் உயிரிழந்தன.

10.10.2002

- 14வது ஆசியவிளையாட்டுப் போட்டிகள் தென்கொரியாவில் நடைபெற்றது. இப்போட்டிகளில் 44 ஆசிய நாடுகளின் 6700 வீரர்கள், வீராங்கனைகள்பங்குகொண்டனர்.
- கடந்த 27 வருடங்களாக இந்தோனிசியாவின் பிடியிலிருந்து விடுபட்டு இவ்வருடம் மேமாதம் 20ம் திகதி சுதந்திர தனிநாடாக பிரகாசித்த கிழக்குத் தீமோர் நாடு ஐ.நா. சபையில் 191வது நாடாக இணைந்து கொண்டுள்ளது.
- ஆபிரிக்க நாடான செனகலில் இடம்பெற்ற படகு விபத்தில் 10 நாடுகளைச் சேர்ந்த பிரயாணிகள் 700க்கும் அதிகமானோர் இறந்துள்ளனர்.

25.10.02

- இந்தோனிஷியா பாளித்தீவில் கார்குண்டு வெடிப்பில் 180 பேர் பலியானர்கள்
- மொஸ்கோவில் செச்சினியத்தீவிரவாதிகள் படமாளிகை ஒன்றில் 700 பேரை பணயக்கைதிகளாக வைத்திருந்தனர். மீட்புப்பணியில் ரஷ்ஷியப்படைகள் ஈடுபட்டபோது தீவிரவாதிகள் உட்பட சுமார் நூறுபேர்வரை உயிரிழந்தனர்.

படிப்பகம்

www.padippakam.com



# ஆரோக்கியமாக வாழ்வோம்...

மேழிக்குமரன்

நீங்கள் கண்ணாடிக் காரரா??? இதனை வாசியுங்கள். . . .

அந்தக் காலத்தில் 70,, 80-க்கு மேல் தான் கண் பார்வை பாதிக்கப்பட்டனர் மக்கள். ஆனால் இப்போதோ நிலைமை படு மோசமாகி விட்டது. ஆம். ஆரம்ப வகுப்பில் படிக்கும் சின்னச் சின்ன வாண்டுகளுக்குக் கூட கண் பார்வை கெட்டு, கண்ணாடியின் உதவியை நாட வேண்டிய அவலம்..! ஏன் இந்த பரிதாபம் எனச் சிந்தித்தால், சந்தேகமே இல்லை... சரியான உணவு முறையைப் பின் பற்றாததே இதற்குக் காரணம் என ஆணித்தரமான பதில் மனதில் வந்து விழுகிறது.

இதற்கு ஒரு உணவு மூலமே ஒரு எளிய தீர்வு இருக்கிறது. பின்பற்றிப் பார்க்கிறீர்களா....?

300 கிராம் நாட்டு நெல்லிக்காய்ப் பொடி, 100 கிராம் சுக்குப் பொடி, (அதுவாது காய்ந்த இஞ்சி) இரண்டையும் நன்றாகக் கலந்து, காலை, மாலை ஒரு டீஸ்பூன் அளவு வாயில் போட்டு தண்ணீர் அருந்தி வரவும். இது பொதுவாக உடல் ஆரோக்கியத்தைக் காக்கிறது என்றாலும், குறிப்பாக கண் பார்வை பாதிக்கப்பட்டவர்களுக்கு மிகச் சிறந்தது.

இதோடு இவர்கள், தினமும் இரண்டு முறை கேரட்டுகள், மற்றும் பாசிப்பருப்புப் பாயாசம் ஒரு முறையும் அருந்தி வருவது நல்லது. பச்சைப்பட்டாணி, கொண்டைக் கடலையும் நல்லது. இதனால் உணவு நன்றாகச் செரிக்கப்படுகிறது. இந்த உணவில் உள்ள வைட்டமின் சி, மற்றும் ஏ- போன்றவை நன்கு செல்களில் கிரகிக்கப்படுவதால், மைனஸ் 3 முதல் 4 வரை லென்ஸ் அணிந்துள்ள கண்ணாடிக்காரர்கள் சில மாதங்களிலேயே கண்ணாடி இன்றி எளிதில் படிக்கலாம்.

சமைக்கப்படாத, இயற்கை உணவில் முடீச்சத்தும் உடலுக்குக் கிடைக்கிறது

நார்ச்சத்து அதிகம் உள்ள உணவை உண்பதால் சல சூநாயைத் தவிர்க்கலாம்

பழங்கள், காய்கறிகளில் உள்ள கரோட்டினுக்கு முதுமைத் தோற்றத்தை தள்ளிப்போடும் ஆற்றல் உள்ளது

குழந்தை நோஞ்சானா? கவலை வேண்டாம். சோயா மாவில் பூரி, சப்பாத்தி செய்துகொடுங்கள். உடல் எடை அதிகரிக்கும்.

படிப்பகம்

பாலும், வாழைப்பழமும் விடாமல் சாப்பிடுபவர்க ளுக்கு இரைப்பை புண் ஏற்படுவதே இல்லை.

மாதுளம் பழச்சாறுடன் தேன் கலந்து காலை உணவிற்குப் பிறகு சாப்பிட்டுவர மலச்சிக்கல் நீஙுகும்.

தொகுப்பு: அருந்தவம். சோஸ்ற்.

## ஆங்கிலக்குறுக்கெழுத்து விடைகள்.

| | | | மேலிருந்து கீழ் |
|---|---|---|---|
| KEY | – | திறப்பு | K |
| STAR | – | நட்சத்திரம் | A |
| SNAIL | – | நத்தை | N |
| PIG | – | பன்றி | G |
| SAW | – | வாள் | A |
| TIRE | – | சில்லு | R |
| IGLOO | – | பனிக்கட்டிக்குடிசை | O |
| BOAT | – | படகு | O |
| | | | கங்காரு |

## சாதுரியத்திறன் கேள்வி 14. விடைகள்.

1. ரோமாபுரி மன்னர் யூலியஸ் சீசர்
2. கியுபா
3. லியோனார் டோ டாவின்சி
4. 35 கிராம்
5. இந்திய ஜனாதிபதி அப்துல் கலாம்
6. மோரிலுள்ள லாக்டிக் அம்லம்.
7. விட்டமின் B, C நீரில கரையக்கூடியவை.
8. மனிதன்
9. வெளவால்
10. எமது மூளையின் எடை 1 முதல் 1.5 கிலோவரை

தொகுப்பு: அருந்தவம். சோஸ்ற்.

www.padippakam.com





ஜி. யு. போப்
1820--1907
திருக்குறள், நாலடியார், திருவாசகம்
ஆகியவற்றை ஆங்கிலத்தில்
பெயர்த்தவர்



சாமுவெல் எப். கிறீன்
1822—1884
நூறாண்டுகட்கு முன்
தமிழில் மருத்துவ நூல் படைத்தவர்



டாக்டர் கிரௌல்
1838—1879
குறளை இலத்தீனிலும்
செர்மனியிலும் மொழியாக்கம்
செய்தவர்



எச். ஏ. பாப்ளி
1879--1960
அணிமிகு குறளை
ஆங்கிலமாக்கியவர்



லாசரஸ்
(19ஆம் நூ.)
குறள் நூல் பகுதியை
ஆங்கிலமாக்கியவர்



ஈராசு பாதிரியார்
(19ஆம் நூ.)
சிந்துவெளி நாகரிகம்
திராவிட நாகரிகம் என நிறுவியவர்

## தமிழ்வளர்த்த பிறநாட்டவர்கள்

படிப்பகம்

www.padippakam.com




பெப்ரீசியஸ்
*1711—1791*
முதல் தமிழ்—ஆங்கில அகராதி
முதல் ஆங்கில—தமிழ் அகராதிகளைத் தொகுத்தவர்



கால்டுவெல்
*1814—1891*
திராவிட மொழிகளின்
ஒப்பிலக்கணம் கண்டவர்



ஜான் மர்டாக்
*1819—1904*
அச்சான தமிழ் நூல்களி
நூற்றொகை தந்தவர்

## நலமாய் வாழ.....

**இன்றைக்கு பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன் அமெரிக்காவில் நடைபெற்ற ஒரு கலந்துரையாடலில் 1024 மருத்துவர்கள் பங்குபெற்றனர். இவர்கள் சுகாதாரமான வாழ்க்கையை மனிதன் மேற்கொள்ள உதவக்கூடிய வழிமுறைகளைப் பற்றி ஆராய்ந்தனர். மருத்துவர்கள் ஆராய்ந்து வெளியிட்ட வழிமுறைகளில் சிலவற்றை முயற்சித்துக் பாருங்கள்.**

- சிகரெட் பிடிக்கும் பழக்கத்தை நிறுத்தவேண்டும்.
- எப்போதும் புன்னகைக்கு முயலவேண்டும்.
- கொழுப்பு குறைந்த உணவுகளை உண்ணவேண்டும்.
- அதிகமாக X-Ray எடுக்கக்கூடாது.
- நாளாந்தம்போதிய அளவு நீரைப் பருகவேண்டும்.
- குடும்பத்துடன் மகிழ்ச்சியாகக் களிப்புற நேரத்தை ஒதுக்கவேண்டும்.
- இரவில் 7 மணி நேரமாவது நன்றாக உறங்கவேண்டும்.
- உணவில் உப்பைக் குறைக்கவேண்டும்.
- பகலில் ஓய்வு தேவை. ஆனால் உறக்கம் அவசியமில்லை.
- உடற்பயிற்சி செய்தல் அவசியம்.
- தேவைக்கதிகமாக மருந்து எடுக்கக்கூடாது.
- மதுவகைகளை முற்றிலும் தவிர்க்க வேண்டும்.
- உணவில் சீனியைக் குறைப்பது நல்லது.
- சுகாதரமான சூழலில், தூய காற்றுள்ள பகுதியில் வாரத்திற்கு ஒரு முறையாவது அமைதியான மனதுடன் நடமாடவேண்டும்.
- ஆண்டுக்கு ஒரு முறையாவது உடம்பு முழுவதையும் பரிசோதிக்க வேண்டும்

படிப்பகம்

www.padippakam.com





**Glückwunsch zum 115. Die älteste Frau der Welt**

Tokio – So fröhlich kann das Leben mit 115 Jahren sein! Gestern feierte Kamato Hongo auf der südjapanischen Insel Kyushu Geburtstag. Sie ist die älteste Frau der Welt. Den halben Tag verschlief die Rekordhalterin, aber dann stieß sie mit Sake-Reiswein, ihren Kindern, Enkeln, Ur- und Ururenkeln an. Ihre Tochter (78): „Meine Mutter macht immer zwei Tage durch und bleibt dann zwei Tage im Bett. Sie singt und tanzt und macht manchem jungen Hüpfer noch was vor."

Geburtstagsfreude: Kamato Hongo (115)

## 115 வயது மூதாட்டி

தென் யப்பானில் வசிக்கும் மூதாட்டி 115வது பிறந்தநாளை அண்மையில் கொண்டாடினார். குமாற்றோ கொங்கோ எனப் பெயர் கொண்ட மூதாட்டியின் மகளுக்கு 78 வயதாகும். இவரே இன்று உலகில் அதி கூடிய வயதானவரென சாதனைபுரிந்துள்ளார்.

## தமிழின் அழிவு

இன்று உலகில் வெளிவரும் பல தமிழ் ஊடகங்கள் தமிழை உருக்குலைக்கும் நடவடிக்கைகளில் தெரிந்தோ, தெரியாமலோ செய்துவருகின்றன. தமிழ்மொழியின் சிறப்பு, மகிமை, தனித்தன்மையை இழந்து வருவதாகப் பல அறிஞர்கள் கவலை கொண்டிருக்கிறார்கள். எனவே ஊடகங்களும், ஊடகவியலாளர்களும் மிக அக்கறை எடுக்கவேண்டிய நேரமாகும். உதாரணத்திற்கு அண்மையில் தமிழ்நாட்டில் வெளிவந்த சஞ்சிகைகளில் கலக்கப்பட்டிருந்த ஆங்கில வார்த்தைகளின் எண்ணிக்கையைப் பாருங்கள். வியப்பாகத்தான் இருக்கும்.

| | | |
|---|---|---|
| 09.07.2002 | – குமுதம் | – 686 ஆங்கில வார்த்தைகள் |
| 12,.07.2002 | – குங்குமம் | – 129 ஆங்கில வார்த்தைகள் |
| 14.07.2002 | – கல்கி | – 413 ஆங்கில வார்த்தைகள் |
| 14.07.2002 | – ஆனந்த விகடன் | – 178 ஆங்கில வார்த்தைகள் |

படிப்பகம்

www.padippakam.com



## படித்துச் சுவைத்தவை

1. நைஜீரியாவில் ஒடா என்ற இடத்தில் புதிய மாதா கோவில் கட்டியிருக்கிறார்கள். அதில் 50ஆயிரம் பேர் அமர்ந்து பிரார்த்தனை நடத்த முடியும். உலகின் மிகப் பெரிய மாதா கோவில் இதுவே ஆகும்.

2. இந்தியாவின் மேற்கு ஒரிசாவில் குமா என்ற ஊரில் சிவன் கோவில் இருக்கிறது. இந்தக் கோவிலின் கோபுரம் மெல்ல மெல்ல சாய்ந்து கொண்டிருக்கிறது. 1670ஆம் ஆண்டு பாவியர்சிங் என்ற மன்னன் கட்டிய கோவில் இது.

3. எவரெஸ்டு சிகரம் உருவாகி 6கோடி ஆண்டு ஆகிறது. இங்கிலாந்து நில அளவை நிபுணரான எவரெஸ்டு சர்ஜார்ற் தலைமையிலான இந்தியக் குழுவினர் 1849ஆம் ஆண்டு இந்த சிகரத்தை கண்டுபிடித்தனர். அவரது நினைவாக எவரெஸ்டு என பெயர் சூட்டப்பட்டது. எவரெஸ்டு சிகரத்தின் நேபாள செல்லப் பெயர் சாகர் மாதா. இதன் பொருள் வானத்து பெண் தெய்வம். திபெத்து நாட்டவர் சோமொலுங்மா (அம்மன்) என்று அழைக்கின்றார்கள்.

4. கழுகுகள் வாழ்நாள் முழுவதும் சோடியுடன் தான் வாழும்.

5. இலங்கையை ஆண்ட இராவணன் இயற்றிய இசைநூல் இராவணியம், இராவணன் மிகச் சிறந்த இசைக்கலைஞன்.

6. உலகிலேயே மிகப் பெரிய அருவி நயாகரா. இந்த நயாகரா அருவி 1925ஆம் ஆண்டு பனிக் கட்டியாக உறைந்து விட்டது. அப்போது கனடாவில் அவ்வளவு குளிர்.

7. சவுதி அரேபியா நாட்டுக் கொடி ஒரு போதும் அரைக்கம்பத்தில் பறப்பது இல்லை. அரைக்கம்பத்தில் கொடி பறப்பது அல்லாவை (கடவுள்) அவமதிப்பது என்று சவுதி அரேபியா நம்புகிறது.


8. ஆசியாவின் மிகப்பெரிய சிறைச்சாலை பெங்களூர் அருகே உள்ள பாரப்பானா அக்ரகாரா சிறைதான். அங்கு ஒரே நேரத்தில் 8ஆயிரம் பேரை அடைக்க முடியும். டெல்லி திகார் சிறையில் 6ஆயிரம் பேரைத்தான் அடைக்க முடியும்.

திருமதி. றஞ்சனா தவராஜ்

படிப்பகம்

www.padippakam.com





# ஜேர்மனியில் மீண்டும் ஒரு நூல் வெளியீடு!
## ,,என்னுள் என்னோடு"

பத்திரிகையாளர் திரு. எஸ்.கே.காசிலிங்கம் அவர்களின் 35 வருட கால பத்திரிகைத் துறைப் பணியை பாராட்டுமுகமாகவும், அவர் எழுதி வெளிவந்திருக்கும் ,,என்னுள் என்னோடு" நூலை அறிமுகப் படுத்துமுகமாகவும் ஜேர்மன் டியூர்ஸ்பேர்க் நகரில் 21.09.02 திகதி ஒருவிழா ஒன்று நடை பெற்றது.

மாலை 4 மணியளவில் ஆரம்பித்த இவ்விழாவிற்குக் கவிஞர் திரு. இ.சிறிஸ்கந்தராசா அவர்கள் தலைமையேற்று ஆரம்பிக்க மங்கள விளக்கை திருமதி. இராசமணி மகேந்திரன், திருமதி. துவாரகாதேவி காசிலிங்கம் ஏற்றிவைக்க, மண்ணின் நினைவாக இரண்டு நிமிடங்கள் மௌனம் காக்க, நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. ,,சங்கீத பூசனம்" திருமதி. கலைவாணி ஏகானந்த ராசாவின் இனிமையாக ஒலித்த இசையுடன் விழா சூடுபிடிக்க ஆரம்பித்தது. சிறிய மண்டபம். நிறையவே இலக்கிய ஆர்வாலர்கள் அமைதி. ,,ஈழம்" பத்திரிகை ஆசிரியர் திரு. இராஜகருணாவின் வாழ்த்துக் கவிதையைத் தொடர்ந்து அண்மையில் ஐரோப்பிய நாடுகளுக்கு வருகை தந்திருந்த திரு. எஸ்.எம்.கோபாலரத்தினம் அவர்களின் 50 வருடகால எழுத்துத் துறையை பாராட்டுமுகமாகவும் அவர் எழுதி வெளி வந்திருக்கும் ,,ஈழமண்ணில் இந்தியச்சிறை" என்ற நூலை அறிமுகம் படுத்துமுகமாகவும் இந்த மண்டபத்தில் சிறப்பான விழா ஒன்றை எடுத்திருந்தோம். சில நாட்களிலேயே மீண்டும் ஒரு நூல் வெளியிடும் எழுத்தாளர் கௌரவிக்கப்படுவதும் பாராட்டத் தகுந்த நிகழ்வே. இதற்கான முயற்சியை மேற்கொண்டு சிறப்பாக விழாவுக்கு ஒழுங்கு செய்த ,,மண்" சஞ்சிகை ஆசிரியர் திரு. வ.சிவராசா அவர்களை முதலில் பாராட்டக் கடமைப் பட்டிருக்கின்றேன். எழுத்தாளர் திரு. எஸ்.கே.காசிலிங்கம் அவர்கள் எங்களுடன் ஈழநாட்டில் வேலை செய்த காலங்களில் மிகவும் சின்னப் பையன். திறமைசாலி. சிறந்த எழுத்தாற்றல் மிக்கவர். அவரது கடந்தகால அனுபவக்குறிப்பே இந்த நூல். அவரை இந்த மேடையிலே அறிமுகப் படுத்தி வைப்பதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன். முன்னை நான் ,,ஈழநாடு" அச்சுப் பொறுப்பாளர். திரு. மு.ஆறுமுகசாமி அவர்கள், திரு. காசிலிங்கம் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தி. அவரை

படிப்பகம்

அறிமுகப் படுத்தும்போது. மேற்கண்டவாறுகூ றினார். அவர் தொடரும் போது நாங்கள் ,,ஈழநாடு" பத்திரிகையில் வேலை செய்யும் போது. ஒரு குடும்ப அங்கத்தினராகவே வாழ்ந்தோம். அந்த நிகழ்ச்சிகளை என்னால் மறக்க முடியாது என்றார். சிறப்புரையை பாரிஸ் கல்வி நிலைய ஸ்தாபக போசகர் திரு. சி.காரானபிள்ளை அவர்கள் நிகழ்த்தினார். நான் பல நிகழ்ச்சிகளில் ஜேர்மனியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டிருக்கிறேன். ஜேர்மன் வாழ் தமிழ் மக்களை எனக்கு நன்றாவே பிடிக்கும். காரணம் தமிழ் மொழியை அவர்கள் என்றும் நேசிக்கின்றார்கள். இந்தச் சபையும் அவர்கள் காக்கின்ற அமைதியும். இதற்கொரு சான்று. திரு. எஸ்.கே.காசிலிங்கம் அவர்களும் நானும் ஒரே ஊர் என்ற வகையில் அவரைப்பற்றி அதிகம் அறிந்தவன் நான். ,,அனலைதீவு" என்ற ஊரையே தனது எழுத்தின் மூலம் வெளியுலகத்திற்கு தெரிய வைத்தவர் திரு. காசிலிங்கம் அவர்கள். அடுத்து திரு. மு.ஆறுமுகசாமி அவர்கள் ,,என்னுள் என்னோடு" நூலை அறிமுகப் படுத்த திரு. செ.மகேந்திரன் (முன்னாள் தபால் ஆதிபர்) பெற்றுக் கொண்டு உரை நிகழ்த்தினார்.

விமர்சன உரையை திரு. எம்.அரியநாயகம் (தலைவர்—ஐரோப்பிய தமிழ் எழுத்தாளர் ஒன்றியம்) சிறப்புரை நிகழ்த்தினார். நூலின் சிறப்பும் தவறுகளும் நேர்த்தியாகவே சுட்டிக்காட்டப்பட்டது, ஆரோக்கியமான விடையம் தொடர்ந்து ,,தமிழருவி" ஆசிரியர் நயினை விஜயன், திரு. சில்லையூர் சிங்கராசா ஆகியோர் நூலின் சிறப்புப் பற்றியும் திரு. எஸ்.கே.காசிலிங்கம் அவர்களின் எழுத்துப் பணிபற்றியும் உரை நிகழ்த்தினர். கலைஞர் திரு. ஏ.ரகுநாதன் அவர்களின் தனி நடிப்பில் ,,சிவிகை" என்ற நாடகம் சிறப்பாக அமைந்தது. ,,திருமணம் சுகமா? சுமையா?" என்ற தலைப்பில் கவியரங்கு ஒன்று நடைபெற்றது. அரங்குத் தலைமையை எழுத்தாளர், பேச்சாளர், கவிஞர் திரு. சிறிஜீவகன் ஏற்க கவிஞர்கள் அம்பலவன் புவனேந்திரன் திரு. அருந்தவராசா, திரு. பொன்.புத்திசிகாமணி ஆகியோர் கவிதைகளை வாசித்தளித்தனர்.

நடன நிகழ்வுகளில் செல்வி. பேர்லினி நடேசலிங்கம், செல்வி ஷாலினி நடேசலிங்கம் கலந்து கொண்டு சபையை ஆச்சரிக்கவைத்தனர். எழுத்தாளர் திரு. எஸ்.கே.காசிலிங்கம் அவர்கள் தனக்கு அளித்த இந்தப் பாராட்டுகளையும் ஆக்கபூர்வமான விமர்சனங்களையும் 35 வருடகால எழுத்துப் பணியின் சிறப்புச் செயற்பாடுகளையும் பற்றி சுருக்கமாகவும் மகிழ்ச்சியோடும் கூ றினார். இந்த விழாவை எனக்காக ஒழுங்கு செய்த விழாக்குழுவினர். திரு. வ.சிவராசா, திரு. மு.ஆறுமுகசாமி, திரு. இ.சிறிஸ்கந்தராசா, திரு. நயினை, விஜயன் ஆகியோர்க்கும் என்னைக் கௌரவப்படுத்திய அனைவர்க்கும் எனது நன்றிகள் என்றார்.


இறுதியில் ,,மண்" சஞ்சிகை ஆசிரியர் திரு. வ.சிவராசா அவர்கள் நன்றியுரை வழங்க திரு. மு.ஆறுமுகசாமி அவர்கள் அவருக்கும் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

(பொன்மணி)

www.padippakam.com



Mitgliedsstaaten der EU und die Beitrittskandidaten der ersten und zweiten Gruppe




## ஐரோப்பிய ஒன்றியம்

ஐரோப்பிய நாடுகளின் அரசியல், பொருளாதாரம், பாதுகாப்பு போன்ற பல முக்கிய விடையங்களுக்காகவே இயங்கிவருகின்றது. ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் நாடுகளின் பட்டியலையும், மேலும் சேர்ந்துகொள்ள இருக்கும் நாடுகளையும் இங்கே காணலாம்.


A- தற்போது அங்கம் வகிக்கும் நாடுகள்

B- அங்கம் வகிக்கும் நாடுகள். ஆனால் ஐரோப்பிய நாணயத்தில் (European Currency) சேர்ந்துகொள்ளாத நாடுகள்.

C- ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் சேர்ந்துகொள்ள விண்ணப்பித்திருக்கும் நாடுகள்.

www.padippakam.com






## ஐரோப்பிய நாடுகள் சிலவற்றின் வேலையின்மை


ஐரொப்பிய நாடுகள் பலவற்றில் அதிகரித்துவரும் வேலைவாய்ப்பு இன்மையால் பல பிரச்சனைகள் அதிகரித்து வருகின்றன. 2002 ஆகஸ்ட் மாதக் கணிப்பீட்டின்படி எடுக்கப்பட்ட புள்ளிவிபரங்களை இங்கே காணலாம்.

(உ-ம்) ஜேர்மனியில் 8.3 மில்லியன் தொகையினர் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். ஜேர்மனியின் சனத்தொகை ஏறத்தாள 82 மில்லியன்களாகும்.

**(1 மில்லியன் = 10 லட்சம்)**

★ தியாகமில்லாமல் சாதனை இல்லை முன்னேற்றமில்லை


- ஓர் அறிஞர்




## தேர்தல் முடிவு – 2002
## Bundestagswahl – 2002

கடந்த 22.09.2002ல் நடைபெற்ற ஜேர்மன் பாராளுமன்றத்துக்கான தேர்தலின் முடிவுகளை இங்கே காணலாம். 1998 ஆண்டு தேர்தலையும் 2002 ஆண்டு தேர்தலையும் ஒப்பீடுசெய்யப்பட்டுள்ளது. SPD கட்சி சென்ற தேர்தலை விட குறைவான வாக்குகளைப் பெற்றிருந்தாலும் Grüne கட்சியுடன் கூட்டுச் சேர்ந்தபடியால் பாராளுமன்ற ஆட்சியை மீண்டும் பொறுப்பேற்றுள்ளது. பிரதான எதிர்கட்சியான CDU கட்சி சென்ற தேர்தலை (1998) விட கூடுதலான வாக்குகளைப் பெற்றிருந்தாலும். ஆதன் தோழமைக் கட்சியான FDP கட்சியின் செல்வாக்கு அதிகம் இல்லாதபடியால் ஆட்சியை அமைக்க முடியாமல் போனதாகக் கருதப்படுகின்றது.

603 பாராளுமன்ற இருக்கைகளுக்கான தேர்தலில் SPD 251, Grüne 55 இரு கட்சிகளும் கூட்டுச் சேர்ந்து 306 இருக்கைகளை கைப்பற்றி ஆட்சியை அமைத்துள்ளன. அதே வேளை ஜேர்மனியின் கிழக்குப்பகுதியில் செல்வாக்கு மிகுந்த PDS கட்சி படுதோல்வி கண்டிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். மீண்டும் ஜேர்மனியின் அதிபராக Gerhard Schröder (SPD) தெரிவு செய்யப்பட்டிருப்பது ஜேர்மனியில் வாழும் வெளிநாட்டவர்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர். அதிபரை சஞ்சிகையும் வாழ்த்துகின்றது.







## ஜேர்மனியின் அதிபர்கள்
## Kanzler in Deutschland

Bundestag என அழைக்கப்படும். ஜேர்மனி யின் பாராளுமன்றத்தின் அதிபர்களாக (Kanzler) இருந்தவர்களின் பெயர்களை இங்கே காண லாம்.

| ஆண்டு | பெயர் | கட்சி |
|---|---|---|
| 1949-1963 | Konrad Adenauer | CDU |
| 1963-1966 | Ludwig Erhard | CDU |
| 1966-1969 | Kurt Georg Kiesinger | CDU |
| 1969-1974 | Willy Brandt | SPD |
| 1974-1982 | Helmut Schmidt | SPD |
| 1982-1998 | Helmut Kohl | CDU |
| Ab 1998 | Gerhard Schröder | SPD |

www.padippakam.com






## ஜேர்மனியின் சனத்தொகை

**1992-2001 கால 10 வருடத்தின் ஜேர்மனியின் சனத்தொகையை இந்த அட்டவணை காட்டுகின்றது. 1992ம் ஆண்டு 80.97 மில்லியனாக இருந்த சனத்தொகை 2001ம் ஆண்டில் 82.44 மில்லியனாக உயர்ந்துள்ளது. இருப்பினும் மற்றைய வளர்ந்த நாடுகளோடு ஒப்பிடும் பொழுது ஜேர்மனியின் சனத்தொகை அதிகரிப்பு குறைவானதாகும்.**

சமுதாயச் சீர்திருத்தத் தொண்டு என்பது மலைமேல் குண்டு ஏற்றுவது போன்றதாகும்.

- பெரியாரின் உவமைகள்.


ஒருத்தன் சொன்னானாம். என்னைத் தொட்டின்னா பார் என்றானாம். தொட்டால் என்ன செய்வாய் என்றான். தொட்டுப் பாரேன் என்றான். மற்றவன் தொட்டதும் அவன் அழ ஆரம்பித்து விட்டான். என்னடா ஏன் அழுகிறாய் என்றால் நான்தான் முதலிலேயே சொன்னேனே என்னைத் தொட்டால் பார்த்துக் கொள் என்று. அது போல் இன்று நம் அரசாங்கம் எதிரிகளிடம் நடந்து கொள்ளுகிறது. நெருங்கினால் எதிரிகள் ஓடிவிடுவார்கள். நெருங்குவதற்கு அரசாங்கம் பயப்படுகிறது.

- பெரியாரின் உவமைகள்.

வெற்றிகரமாய்ப் பொய் சொல்ல வரம்பற்ற நினைவாற்றல் வேண்டும். அவ்வளவு நினைவாற்றல் உள்ள மனிதன் எவனுமே இல்லை.

- ஆப்ரகாம் லிங்கன் (1809 - 1865)

படிப்பகம்




*„Es muss an einem solchen Tag alles stimmen" – der Amerikaner Tim Montgomery am Ziel in Paris: 100 Meter in 9,78 Sekunden.* Foto: SPORTIMAGE/Bildbyran

## Entwicklung des 100-m-Weltrekordes

| | | |
|---|---|---|
| 10,6 | Donald Lippincott (USA) | 6. 7.1912 Stockholm |
| 10,4 | Charles Paddock (USA) | 23. 4. 1921 Redlands |
| 10,3 | Percy Williams (Kan) | 9. 8. 1930 Toronto |
| 10,2 | Jesse Owens (USA) | 20. 6. 1936 Chicago |
| 10,1 | Willie Williams (USA) | 3. 8. 1956 Berlin |
| 10,0 | Armin Hary (GER) | 21. 6. 1960 Zürich |
| 9,90 | Jim Hines (USA) | 20. 6. 1968 Sacramento |
| 9,93 | Calvin Smith (USA) | 3.7.1983 Colorado Springs |
| 9,92 | Carl Lewis (USA) | 24. 9. 1988 Seoul |
| 9,90 | Leroy Burrell (USA) | 14. 6. 1991 New York |
| 9,86 | Carl Lewis (USA) | 25. 8. 1991 Tokio |
| 9,85 | Leroy Burrell (USA) | 6. 7. 1994 Lausanne |
| 9,84 | Donovan Bailey (Kan) | 27. 7. 1996 Atlanta |
| 9,79 | Maurice Greene (USA) | 16. 6. 1999 Athen |
| 9,78 | Tim Montgomery (USA) | 14. 9. 2002 Paris |

## முதலாவது ஓட்ட வீரர்

அமெரிக்கரான ரிம் மொன்காமெரி (Tim Montgomery) என்னும் வீரனே இன்று உலகின் முதலாவது ஓட்ட வீரனாகத் திகழ்கின்றார். 16.09.1999ல் அமெரிக்கா வின் மற்றொரு வீரரான மொறிஸ் கிறீனின் 9.79 வினாடிகளில் என்ற வேகத்தை முறியடித்து 9.78 என்ற வினாடி களில் 100 மீற்றர் தூரத்தை ஓடிமுடித்து புதிய சாதனையைப் படைத் துள்ளார். 14.09.2002ல் பாரிசில் நடைபெற்ற போட்டியில் இச்சாதனை நிலைநாட்டப்பட்டது.

படிப்பகம்

www.padippakam.com






## உலகப் பொலிஸ் - அமெரிக்கா

உலகநாடுகளின் பொலிஸ்காரரென அழைக்கப்படும் அமெரிக்கா உலக நாடுகளில் தனது தளங்களை, படைமுகாம்களை அமைத்துள் ளதை இப்படம் காட்டுகின்றது. உலக வல்லரசான அமெரிக்கா உலகம் பூரா வும் தனது ஆயுதப்படைகளைக் குவித்து பல நாடுகளை ஆக்கிரமித் திருப்பதுடன் பல நாடுகளை பயமுறுத்தி அடிபணியச் செய்யும் செயலி லும் ஈடுபட்டுவருகின்றது. உலகின் பொலிஸ்காரன் தானே என்றும் பெயரை நிலைநிறுத்தி வருவதுடன் சில நாடுகளை தனது ஆதிக்க வல் லாண்மையால் அடிமைப்படுத்தி வருவதுடன் எங்கும் ஆயத கலாச் சாரத்தை கட்டவிழ்த்துவிட்டிருப்பதை நாம் கவனத்திற்கொள்ள வேண் டும்.

வாழ்க்கைத் துணை
என்பது தனது சுக
துக்கங்களில் பங்கெடுத்துக்
கொள்ளக் கூடிய, விருப்பு
வெறுப்புகளை புரிந்து
செயல்படக்கூடிய இரு வேறு
பிறப்பு வளர்ப்பு, கல்வி
அனுபவம், குணாதிசயம்
கொண்ட மனிதர்களின்
பிணைப்பாக
இருக்க வேண்டும்.

கடவுளில் தொடங்கி
கடவுளையும் தாண்டுவது
ஆன்மீகம்

வர்க்கப் போராட்டத்தில் தொடங்கி
வாழும் பூமியை
சொர்க்கப்புரியாக்குவதில்
முடிவது மார்க்சியம்

அறியாமையில் தொடங்கி
அறிவில் முடிவது
பெரியாரிசம்

உணர்வில் தொடங்கி
உயிரையும் தாண்டிச்
செல்வது
காதலிசம்!

- காதலாகி புத்தகத்திலிருந்து

படிப்பகம்

# கவிஞர் காசியானந்தனின் சிந்தனை முத்துக்கள்

## மதிப்பு

'வாழ்ந்தால் குயிலைப்போல் வாழவேண்டும்' என்றது பட்டாம்பூச்சி.

இன்னொரு பட்டாம்பூச்சி கேட்டது:-

'ஏன்?'

''அதோ பார்... மா மரத்தில் பாடுகிறது குயில். மா மரத்துக்காகத்தான் அது பாடுகிறது. பின்பு மாங்கனியைச் சாப்பிடுகிறது. பறக்கிறது.'

'புரியவில்லையே...'

'யாருக்கும் கடமைப் படக்கூடாது. கொடுத்துப் பெறு. தங்கி வாழாதே.'

'ஓ! இப்போது புரிகிறது!' என்றது இரண்டாவது பட்டாம் பூச்சி.

தனக்குள்ளேயே அது சொல்லிக்கொண்டது:-

'மரத்துக்கு ஒரு பாட்டு
குயிலுக்கு ஒரு பழம்.'

## பார்வை

தரிசு நிலம்.

குப்பைகளும் கூழாங்கற்களும் குவிந்து கிடந்தன.

'உதவாத குப்பைகள் - கூழாங்கற்கள்' என்று உலாத்தலுக்கு வந்த நாய் கண்களை மூடி உரக்கக் குரைத்தது.

படுத்துக் கிடந்த மாட்டுக்கு இது பிடிக்கவில்லை.

'குப்பைதானே பெறுமதியான எருவாகிறது - கூழாங் கல்லைத்தானே தெருவாகப் போடுகிறார்கள்' என்றது மாடு.

'நன்றாகப் பார்... எதிலும் ஏதோ ஒன்று இருக்கிறது...'

மாடு தொடர்ந்தது:-

'குப்பையை எருவாய்ப் பார்
கூழாங்கல்லைத் தெருவாய்ப் பார்.'

www.padippakam.com



## (சிறுகதை)
## 'நெஞ்சில் தைத்த நினைவு'

'அம்மா படங்கள் பாக்கிறேல்லை. அக்கா படம் பாக்கிற நிலையில் இல்லை. பாவம் பொன்னம்மா மாமி வந்து சொல்லிட்டு போயிற்றா..... போகாட்டிலும் மாமி ஏதும் நினைப்பா' இப்படி எண்ணிய கமலி 'அம்மா நான் மாமிவீட்டை போட்டுவாறன். புனிதம் மச்சாளின்ரை பிள்ளை சௌமியின்றை பேர்த்டே படம் போடுறதெண்டு மாமி சொல்லிட்டுப் போனவா' என்று சொல்லியபடி அகிலனைத் தூக்கிகொண்டு நடந்தாள்.

மாமி சொன்ன மாதிரியே எட்டு மணிக்கு படம் ஓடத்தொடங்கிச்சு. முதல்லை வீடியோக்காரன்ரை விளையாட்டுகள் நேரத்தை விழுங்க மாமி பொறுமையிழந்தவளாய் 'இதென்ன கமலி...... பிறந்தநாள் படமெண்டாங்கள். இதிலை வேலற என்னவோ' என்று சொல்லிக்கொள்ளவும் புனிதம் மச்சாளும் மனுசனும் வந்தார்கள். பாக்கவே நல்லாக இருந்தது. வைச்ச கண்வாங்காமல் பாத்துக்கொண்டிருந்த மாமி பேத்தி சௌமியைக் கண்டவுடன் ஒருக்கால் தலையைச் சிலுப்பி 'பேத்தி நல்லாய் வளந்திட்டாள். பாத்தியே கமலி, அகிலனைவிட நாலு மாசம்தானே மூப்பு" என்றதும் கமலிக்கு சுருக்கென்று வலித்தது. மாமி சொன்ன மாதிரியே தளு.... தளு நடையில் சௌமி ஓடித்திரிவதிலும் தகப்பன் பிள்ளையைத் தூக்கிக்கொண்டு ஓடுவதும் அவனின் குளுகுளு கன்னத்தில் தாய் முத்தமிடுவதும் அதற்கேற்றாற்போலக் கமராக்காரன் போட்டிருந்தபாட்டும் கமலிக்குள் ஒரு தவிப்பைக்கொடுத்தது. வந்த பெருமூச்சை வெளியில் விடாமல் அடக்கிக்கொண்டாள். 'நாளைக்கு எங்கடை அகில்குட்டிக்கும் பிறந்தநாள். அக்கா பாவம் என்ன சுகத்தைக் கண்டவா. புனிதம் மச்சாள் கலியாணம் கட்டின மாதத்திலைதான் அக்காவுக்கும் நடந்தது. மச்சாளின்ரை முகம் எவ்வளவு செழிப்பாயிருக்கு. அக்காடை முகம் காய்ஞ்சு கறுத்து.......' நினைவை நிறுத்திப் படத்தைப் பார்க்க முயன்றாள் கமலி.

அப்பா அம்மா பக்கத்தில் நிற்க அந்த அழகான கேக்கை சௌமி வெட்டியபோது வந்த கரகோசம் கமலியின் காதில் விழுந்துவலித்தது. அகிலனின் தலையை மெல்ல வருடியபடி, தன் தலையை மெல்லச்சாய்த்து 'மாமி எனக்குச் சரியாய் தலையிடிக்கிது. வீட்டைபோய்ப் படுக்கப் போறன்' என்றாள். அவ்வளவு கூட்டத்துக்கையிருந்து கமலி போவதை பெரிது படுத்தாத பொன்னம்மாமாமி "சரி பிள்ளை போட்டுவா' என்று சொல்லியபடி படத்தில் கவனமாயிருந்தாள்.

வீட்டுக்கு வந்த கமலி 'விடிஞ்சால் எல்லாம் பறந்திடும்' என்று எண்ணியபடி மனச்சுமையோடு பாயில் சரிந்தாள். நித்திரையோ வரமறுக்கக் கண்களை இறுகமூடினாள். அதற்குள்ளும் சௌமி ஓடினாள். ஆற்றாமையோடு அருகில் படுத்திருந்த அகிலனை இறுக அணைத்தாள். அக்காவின் அவல வாழ்வு அவள் நெஞ்சைப் பிழிய, நெடுநேரம் விழி நனைத்துக்கிடந்தவள் அடுத்து பாயில் படுத்திருந்த அக்காவின் விசும்பல் கேட்டதும் விக்கித்துப் போனாள்.

படிப்பகம்

www.padippakam.com

தள்ளிவிட்டன். கால் கமலியின் பின் நடந்ததே தவிர சாந்தியின் மனம் கடந்துபோன நிகழ்வினை நினைத்து நடுங்கியது.

வரதனும் சாந்தியும் வவுனியா வந்து நாட்கள் ஓடி, மாதம் ஒன்று கழிந்துவிட்ட அன்று கார்த்திகை இருபத்தைந்து. மாலை, சாந்தி பிரசவ வலிகண்டு துடித்தாள். அவசரம் அவசரமாக ஆட்டோ ஒன்றில் ஏற்றி ஆஸ்பத்திரியில் சேர்த்துவிட்டான் வரதன். இரவு நெருங்கியது. ஆனால் குழந்தை வர நெருங்கியும் வந்து சேராததைக்கண்டு துடித்துப்போனவன், தன் துடிப்பை மறைத்து சாந்திக்கு ஆறுதல் கூறி வீடுபோனான். கார்த்திகை இருபத்தாறு அதிகாலை அகிலன் வந்துவிட்டான். அவன் அப்பாவைப் பார்த்துக்கிடந்தபோது சாந்தி அந்தப் பிஞ்சுக் கரங்களை மெத்தெனவருடி 'அப்பா இன்னும் கொஞ்ச நேரத்திலை வந்திடுவார்' என்று சொல்லியபடி தன் வலிமறந்து போனாள். மணிகள் ஒவ்வொன்றும் கடந்துபோக 'ஏன் அப்பா வரவில்லை' என்ற கேள்வி அவளைப் பிடுங்கியது. மனம் அந்தரப்பட்டது. யாரிடம் கேட்பது என்ன செய்வது என்று புரியாமல் துடித்துக்கொண்டிருந்தபோது மணியம் மாமா வந்து சேர்ந்தார் 'தம்பி வெள்ளெணவே வெளிக்கிட்டவர் இண்டைக்கு கார்த்திகை இருபத்தாறு; ஆமிக்காரர் ஆட்டிட்ட எல்லாரையும் விசாரணை செய்யு வேணுமெண்டு கொண்டு போனவங்கள். ஐநூறு அறுநூர் பேரை விசாரணை செய்ய எப்படியும் ஒருநாள் காணாது.........' என்று சொன்னபோது சாந்தி வாய்விட்டுக் கதறினாள்.

இருபத்தாறு, இருபத்தேழு என நாட்கள் கழிந்தது. வரதன் வரவில்லை. வவுனியாவிலிருந்து அநுராதபுரம், அங்கிருந்து களுத்துறைக்கு கடத்தப்பட்டான். அநாதைபோல் அவதிப்பட்ட சாந்திக்கு ஆதரவாய் இருந்த மணியம் மாமா இரண்டு முறை களுத்துறை போய்வந்து 'பிள்ளை நீங்கள் வன்னிக்குப் போய் அம்மாவோடை இருங்கோ. அண்டைக்கு பிடிச்ச பொடியளிலை அரை வாசிக்கு மேலை பயங்கரவாதியெண்டு பதிஞ்சிட்டாங்கள். இனி லோயர் வைச்சு தான் வழக்கை நடத்தவேணும்.' என்றதும் சாந்தி அதிர்ந்துபோய் அழுது புலம்பினாள். அதன்பின் வழக்கு தொடர்ந்தது இடையிடை கடிதம் வந்தது.

கோயில் மணிகள் ஒலித்தது. கற்பூர ஆரத்தி நடந்தது. எதையும் உணராதவள் போல நின்ற சாந்தி 'அக்கா அத்தான்ரை நட்சத்திரமென்ன' என்ற கமலியின் குரல் கேட்டு மீண்டாள். கைகளை கூப்பி கடவுளை வேண்டினாள். கமலி மனம் லேசாகி.... 'அக்கா அகில் பூராடமெல்லே. பூராடக்காரன் உலகாட்சிருப் எண்டு அம்மா சொல்லுவா, இனிப்பாருங்கோ எங்களுக்கு நல்ல காலம்தான்.' சொல்லியபடி நடக்கத்தொடங்கினாள். சாந்தி கவலையோடு 'என்ரை தலையிலை என்ன எழுதியிருக்கோ அது நடக்கும். பிள்ளையை ஏன் நோகவேணும். அம்மா தன்ரை பிள்ளை கண்ணீரோடை இருக்குதெண்டு கத்திறா. என்ரை பிள்ளை இன்னும் அப்பாவை முகம் தெரியாமல்...... அதை நினைச்சு நான் எவ்வளவு கவலைப் படுறனெண்டது அம்மாவுக்கு தெரியேல்லை. அத்தானும் ஒவ்வொரு கடிதத்திலையும் அகில், அகிலெண்டுதானே ஆயிரம் தடவை எழுதிறார். அவருக்கும் எவ்வளவு ஆசையிருக்கும்....' அக்காவின் கதையைச்

மௌனமான இரவில் அக்காவும் அழுதாளா....... என்பதை நினைத்து வெதும்பினாள். அக்காவின் விசும்பல் விம்மலாக இடையிடை வெளிப்பட்டபோது 'அக்கா அழாதை' என்று சொல்லவேணும் போலத்துடித்தவள் வாய்மூடி அழுதாள். அழுதால் அமைதிவரும் என்ற அசட்டுத்துணிவில் இருவரும் அமைதியாய் அழுதனர். விடியும்வரை தூங்காமல் துடித்தவர்கள் விடிந்தபோது தூங்கிவிட்டனர்.

'அம்மா....... அம்மா...... அம்மா' என்று சொல்லியபடி அகிலன் அவள் தலைமுடியைப் பிடித்து பிய்த்ததும் கமலி விழித்துவிட்டாள். அகிலனின் அத்தனை வேலைகளையும் செய்து முடிக்கும் வரை பனிமலோமாய் வெறித்தபடி நின்ற அக்காவைப் பார்த்த கமலிக்கு அழுகை வந்தது. 'காலமை விடியக் காகம் கத்தினாலும் கடிதம் வரும் ஒரு சனியனையும் காணேல்லை. 'சாந்தினி வரதன்' என்ட பெயருக்கு எப்பவாவது ஒரு கடிதம் வரும். ஆனால் அக்கா ஒவ்வொரு காலையும் பேய் பிடித்தமாதிரி தெருவைப் பார்த்துக்கொண்டிருப்பா' என்று மனம் நொந்தபடி...... 'அக்கா, வெளிக்கிடுங்கோ கோயிலுக்கு போக வேணும். வேளைக்கு போய் வந்தால் நல்லது.....' என்றதும். தாய் கனகம் வாயைத் திறந்தா. 'பிள்ளை, நீ இனி கோயிலுக்கு போக வேண்டாம். கடவுளுக்கு கண்ணிருந்தால் உன்னை இப்பிடி விட்டிருப்பானோ. கண்கெட்ட கடவுள்' என்று திட்டியதும் சாந்தி தடுமாறிப்போனாள். பார்த்துக் கொண்டிருந்த கமலி சீறிப்பாய்ந்தாள். 'என்னம்மா...... உங்களுக்கு என்ன நடந்திட்டுது. இன்டைக்கு அகில்குட்டியின்ரை பிறந்தநாளெல்லே. ஏன் கோயிலுக்கு போகவேண்டாமெண்டு கத்திறியள்......'

கமலி நியாயம் கேட்டது தாய்க்கு கொஞ்சமும் பிடிக்காமல் போக 'பிறந்தநாள்...... கண்டறியாத பிறந்தநாள், உது பிறந்த நாளிலையிருந்து என்ரை பிள்ளை கண்ணீரும் சோறும் தின்னுது....... இதுக்கையொரு கோயிலும் குளமும்' என்று புறுபுறுத்தாள்.

அம்மாவின் புறுபுறுப்பும் அக்காவின் கண்ணீரும் கமலியை அலைத்தாலும் தைரியமாக 'அக்கா நீ வெளிக்கிடு..... நாங்களென்ன கேக்வெட்டி கொண்டாட்டமோ நடத்தப்போறம். பிள்ளையின்ரை பிறந்தநாளுக்கு கோயிலுக்கு போய் ஒரு அர்ச்சனை கூடச்செய்யாமல்' என்று சத்தமாய் சொல்லிவிட்டு அகிலனைத் தூக்கியபடி நடக்கத் தொடங்கினாள். சாந்தியும் அவள் பின்னே நடந்தாலும் அம்மாவின் கட்டளையை மீறியதற்காய் அவள் மனது அழுதது. 'அம்மாவின்ரை சொல்லைக் கேக்காமல் தான் இவ்வளவும் வந்தது. அம்மா திரும்ப திரும்ப சொன்னவா....... 'தம்பி வவுனியாவுக்கு மாற்றம் எடுக்கிறியள். நீங்கள் நினைக்கிற மாதிரியில்லை. அங்கை ஆமிக்காரற்றை ஆட்டம் மட்டுமில்லை......... வேற பிரச்சினையளும் இருக்கு. நீங்கள் ஏன் போக ஆசைப்படுறியள்' தன்மையாய் அம்மா சொல்ல நான்தான்; 'அம்மா இஞ்சையிருந்து என்ன செய்யிறது. பனடோலுக்கு கூடப் பஞ்சமாய்க்கிடக்கு. இன்னும் ரெண்டு மாசத்திலை பிள்ளையும் வரப்போகுது......... அங்காலை போனால் நல்லது. ஒரு கஸ்டம் வந்தாலும் வசதியம்மா' என்று அம்மாவை

கேட்டு கலங்கியபடி நடந்த கமலி ஒழுங்கை முகப்பிலை வந்த சைக்கிளைப் பார்த்ததும் திடுக்கிட்டுப்போனாள். சப்தநாடியும் அடங்கியது போல நின்றவள் 'அக்கா!...... அங்கை அத்தான்" என்று கத்தினாள்., கண்கள் கலங்கவந்த சாந்தி நம்ப முடியாமல் கால்கள் பின்னே நிலத்தில் குந்திவிட்டாள். அனைத்தையும் பார்த்து நின்ற அகிலன் அழத்தொடங்கியபோது அருகில் வந்துவிட்ட வரதன் மகனைத் தூக்கி முத்தங்கள் பதித்ததும் குழந்தை வீரிட்டுக் கத்தியது.

நிலமையைச் சமாளிக்க மணியம்மாமா முந்திக்கொண்டு 'வரதன் நீ சாந்தியை சைக்கிளிலை ஏத்திக்கொண்டு போ. நான் கமலியோடை நடந்து வாறன்' என்றார். வரதனின் சைக்கிளில் சாந்தி ஏறிக்கொள்ள அகிலனைத் தூக்கியபடி நடந்த கமலி தன் நெஞ்சில் தைத்த நினைவுகளை நிரையாகச் சொல்லியழுதாள். மாமாவும் மனம் கலங்கி 'அழாதை கமலி நாங்கள் அழுகிறதும் சிரிக்கிறதும் சொல்லாமல்தான் வரும். சொல்லிக்கொண்டு வாறதெல்லாம் நடிப்பு..... இப்ப பார்.... பிள்ளையின்ரை பிறந்தநாளெண்டு சொல்லி தம்பி இனிப்புசாமானுகள்தான் பைநிறைய அள்ளிக்கொண்டு போறார்" என்று சிரிக்க கமலியும் கண்களில் நீரோடு சேர்ந்து சிரித்தாள்.

*திருமதி சுந்தராம்பாள் பாலச்சந்திரன் - Differten*



**வாசக நேயர்கள் அனைவருக்கும்**
**எமது உளம் கனிந்த தீபாவளி**
**நல்வாழ்த்துக்கள்!......**

தமிழர் திருநாளாம் தீபாவளித் திருநாளை முன்னிட்டு வாழ்த்துமடல்கள் அனுப்பி யோருக்கும், மின்அஞ்சல், தொலைநகல், தொலைபேசி மூலம் வாழ்த்துக்களைப் பரிமாறிக்கொண்ட அத்தனை நல் உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளுடன் தீபாவளி வாழ்த்துக்களை நாமும் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்வடைகிறோம்.

www.padippakam.com



# சக்திவழிபாடும் தமிழரும்

உலகில் உள்ள வழிபாட்டின் அதாவது ஆன்மீகத்தின் மூத்தவடிவம் இந்து மதம். சுருங்கக் கூறின் இந்துமதம் மகாநதியானால் மற்ற ஆன்மீக நெறி களெல்லாம் கால்வாய்களாகவும், வாய்க்கால்களாகவும் அமைந்துள்ளன. இப்படிக் கூறுகின்றபோது இந்து தவிர்ந்த ஏனைய ஆன்மிக நெறிகளை தாழ்த்துவது போலிருக்கின்றதே என சிலர் எண்ணக்கூடும். எந்த சந்தர்ப்பத்திலும் எந்த மதத் தையும் தரக்குறைவாக எண்ணும் எண்ணம் என்னிடம் இல்லை. ஏனெனில் அத்தகைய தரக்குறைபாடுடையபவனாக நான் இல்லை. இங்கே இந்திய தத்து வஞானம் கண்ட பேருண்மைகளில் ஒரு துளியை எழுதுவது மட்டுமே நோக் கமாக கொண்டது இக்கட்டுரை.

„இந்துமதம்“ என்ற சொல் பிறரால் நமக்கு தரப்பட்டதேயொழிய இந்திய தத்து வஞானம் பிறரால் எமக்கு தரப்பட்டதல்ல. இந்த தத்துவஞானத்தை நானும் இந்துமதம் என்ற சொல்லால் குறிப்பிட்டுச் சொல்கிறேன். இந்த இந்து மத தத்துவத்தில் சக்திவழிபாடு மிகமிக புராதனமானதாக தோன்றி இன்று பல் வேறுபட்ட இந்த மத உட்கூறுகளால் ஒற்றுமையில் வேற்றுமையாக இருக் கின்ற மக்கள் கூட்டத்தில் பரவிநிற்கிறது.

உலகை ஒரு குழந்தை முதன்முதலில் கண் விழித்துப்பார்க்கும் போது தாயைத்தான் காண்கிறது. பின் அந்த தாய் சொல்லித் தந்தையையும், அதன்பின் தந்தையால் குருவையும், அக்குருவினால் தெய்வத்தையும் அறிந்து கொள் கிறது. இந்த பேருண்மையை பெரியோர்கள்,

*„தாயுடன் சென்று பின் தாதையைக்கூடி ஏயுமானதே நிட்டை ....... “*

என ஆன்ம அனுபவ இன்பத்தால் – அறிவால் அற்புதமாக பேசிப்போயிருக் கிறார்கள். தமிழினத்தை எடுத்துக்கொண்டால் இந்து மதத்தின் முக்கிய பிரிவு களான சைவம், வைணவம் என்பன ஆன்மீக ஒளியை பரப்பி நிற்கிறது. இங்கே நாம் காணக்கூடிய உண்மையென்னவெனில் இவ் இரண்டு தமிழரின் ஆன்மிக உணர்வுகளில் தாய்த்தெய்வ வழிபாடு முக்கியமாக இளையோடி செல் வத்தைக் காணக்கூடியதாக இருக்கிறது. இதில் சைவம் தாய்த்தெய்வத்தை அம்பினை என்கிறது. அந்த தாயை இறைவனின் கருணையே தவிர வேறு எதுவுமல்ல என்று பறைசாற்றுகிறது சைவம். இதை சிவஞானசித்தாந்தத்தின் திரட்டாக இருக்கிற சிவஞானசித்தியார்

*„அருளானது சக்தி ஆகும் அரண் தனக்கு“*

எனக் கூறிச் செல்கிறார்.

இந்த சக்தியுடன் இணைந்துதான் படைத்தல், காத்தல், மறைத்தல், ஒடுக்கல், அருளல் என்ற ஐந்தொழில்களை இறைவனால் செய்யமுடிகிறது. மேலும் இறை வன் உலகத்தில் உயிர்களைக் கரையேற்றிட எந்த வேடத்தை ஏற்கிறானே

அவற்றிற்கேற்ப சக்தியும் வேடமிட்டுக்கொள்கிறாள் எனச் சைவசித்தாந்தம் கூறுகிறது. அதாவது இறைவன்,

*மகேஷ்வரனாக உருக்கொள்ளும்போது தாயவள் மகேஷ்வரியாகவும்,*
*உருதத்திரனாக உருவம் பூண்டால் இரௌத்திரியாகவும்,*
*விஷ்ணுவாக அவன் தோன்றும்போது திருமகளாகவும்,*
*பிரமனாக அவன் வேடம் தாங்கினால் வாணியாகவும்*

அவள் வடிவமெடுத்துக்கொள்கிறாள்.

அதாவது இறைவன் தன் திருவிளையாடல்களை செய்யும்போது அருளின் பல வடிவங்களாக அம்மையவள் உடன் இணைந்து கொள்கிறாள். அம்பிகைத்தாய் அருட்பார்வை நம்மேற்பட்டால் தான் இறைவன் வரம் நம்மை கரையேற்றும் என்கிறது சைவம்.

இதையே அழகு தமிழில் தேவாரம் „மடைவாள்தானோடும் அருள் காரணத்தின் வருவார்" என கூறுகிறது.

மேலும் அம்மையின் பெருமையினை பெரிய புராணத்தில் சேக்கிழார் பெருமான் அடியவர்களை சோதிக்கும் போதெல்லாம் தனியே வரும் அப்பன் அதே அடியவர்களுக்கு அருளைப் பொழியும் போதெல்லாம் அம்மையப்பகை இடபவாகனாரூடராய் தோன்றுகின்றார் எனப் பேசுவார். செந்தமிழ் குழந்தைக்கு அந்த ஞானசம்பந்தனுக்கு ஞானப்பாலூட்ட தாயவளையும் அழைத்தல்லோ அந்த அம்மையப்பன் தோன்றினார்! காரைக்கானல் அம்மையப் பாருங்கள். இந்த சக்தியின் முழுத் தத்துவமும் புரிந்துவிடும். அந்த அம்மை இறைவனை தரிசிக்க கைலைக்குச் செல்கிறார். அந்த புனிதப் பூமியில் தன் கால் படக்கூடாதேயென்ற எண்ணத்தில் கைகளை ஊன்றித் தலைகீழாக நடந்து செல்கிறார். அவர் மீது முதற்பார்வை உமையவள் பார்வைபட்டது. „ஐயனே, இந்த எலும்புக்கூடுபோன்ற தோற்றத்தில் தங்கள் மேல் உள்ள பக்தியை எப்படி வெளிக்காட்டுகிறாள் பார்த்தீர்களா" – என்கிறான் உலகத்தின் தாய் உமையவள். அதற்கு இறைவனும், „உமையவளே! வரும் இவள் நம்மைப் பேணும் அம்மைகாண்" – என்றாராம். இதை அழகாக சேக்கிழார் கூறியுள்ளார். இறைவன் பார்வை படுமுன் பக்தன் மேல் தாயின் அதாவது சக்தியின் பார்வைபடவேண்டும். இதை சக்திநிபாதம் என்பர். நல்ல தமிழில் திருவருள்பதிவு எனக் குறிப்பிடலாம். மேலும் ஒரு உண்மையை இந்த இடத்தில் கூறியாக வேண்டும். 63 நாயன்மார் இருந்தார்கள் என்பதை நாம் அறிவோம். இன்று எந்த கோயில்களுக்கு சென்றாலும் இந்த நாயன்மார் கோலங்கள் அங்கே சிற்பமாகவோ, ஓவியமாகவோ இருப்பதைக் காண்கிறோம். இதன் சிறப்பு என்னவெனில் அங்கெல்லாம் 62 நாயன்மார் திரு உருவங்கள் நிற்கும் கோலத்திலும் காரைக்கால் அம்மையார் திரு உருவம் மட்டும் உட்கார்ந்து இருக்கும் கோலத்தும் அமைந்திருப்பதைக் காணலாம். இது ஏன்? தனக்குத் தாயில்லாக் குறை இறைவனுக்கும் இருக்கிறது. அந்த அண்டசராசரத்தை ஆட்டிப்படைக்கும் இறைவன் தனக்கும் தாய் உண்டு என காரைக்கால் அம்மை உருவத்தில் கண்டானாம். இதன் காரணத்தால் 62

www.padippakam.com



நாயன்மார்களை நிற்கும் கோலத்திலும், தாயவள் காரைக்கால் அம்மையை உட்காந்திருக்கும் கோலத்திலும் காணகிறோம்.
வைணம் கூட அடியவர்களுக்கு என்ன தேவையோ அதை உலகத் தாய்தான் எம்பெருமாளிடம் பரிந்துரை செய்கிறாளாம். இதை அந்த வைணவப் பிரவு புருஷகாரம் என்று கூறுகிறது. இத்துணை பெருமையுடையவள் மகாசக்தி. நம் பாரதி கூட சக்தி பக்தனாகவே வாழ்ந்து முடித்தான். உலகை சக்திமயம் என்றான். ,,எங்கெங்கு காணினும் சக்தியடா“ - என ஆனந்த கூத்தாடினான்.
நாமும் அந்த சக்தியின் பாதத்தை பள்ளிடுவோம்.
இக்கால கட்டத்தில் பொன் நகரிலும் அதை சுற்றியுள்ள றையின் சீக் பிரதேசத்திலும் உள்ள தமிழ் நெஞ்சங்கள் சக்திக்கு ஒரு ஆலயம் எழுப்பி எங்கெங்கு காணினும் சக்தியடா என ஆர்பரித்து எழுந்துள்ள இந்த கால கட்டத்தில் தீவினை அகல முருகனுக்கு வேல் கொடுத்து இன்றும் ஒரு விழாவாக நடைபெறும் முருகனை வணங்கியாளும் தமிழ் வாழ தமிழினம் வாழ தமிழ் அலை மூலம் அடிபணிந்து அம்மையவனை தொழுது ஏற்றுகிறேன்.

*வண்ணை ஆனந்தன்*
Bonn


# புகை பிடிப்பவருக்கு ஏற்படும் நோய்கள்

புகை பிடிப்பதால் உலகம் முழுவதிலும், ஒவ்வொரு 8 விநாடிக்கு ஒருவர் இறந்துகொண்டிருக்கிறார். விடலைப் பருவத்திலேயே புகைக்க ஆரம்பிப்பவர்கள், புகை பிடிக்காதவர்களை விட 20லிருந்து 25 வருடங்கள், சீக்கிரமாக இறந்துவிடுகிறார்கள்.

1. முடி உதிர்தல்
2. கண் கோளாறு
3. சுருக்கம் விழுதல்
4. காது கேளாமை
5. தோல் புற்றுநோய்
6. பல் சொத்தை
7. மார்ச்சளி
8. எலும்பு முறிவு நோய்
9. இருதய நோய்
10. வயிற்றுப் புண்
11. விரல்களின் நிறம் மாறுதல்
12. சோரைஸிஸ் (தோல் நோய்)


படிப்பகம்

# பழங்களின் பயன்பாடுகள்




## ஆப்பிள்

இரும்புச்சத்து, ஆர்சனிக் சத்து மற்றும் பஸ்பரஸ் சத்து அதிகம் கொண்டது ஆப்பிள். இரத்த சோகையைப் போக்குவதற்கான அருமருந்து.




## ஆரஞ்சு

வைட்டமின் "சி" அதிகமாக உள்ளது ஆரஞ்சு. மனித உடலில் பொதுவாக ஏற்படும் ஜலதோஷம், சளிக்காய்ச்சல், இரத்தப்போக்கு முதலியவற்றைக் கட்டுப்படுத்த உதவும்.



## பப்பாளிப்பழம்

பப்பாளியில் வைட்டமின் "ஏ" அதிகமாக உள்ளது. கல்லீரலுக்கு ஏற்ற உணவு பப்பாளி. மேலும் மலச்சிக்கலைப் போக்குவதற்கு பெரிதும் உதவுகிறது.



## விளாம்பழம்

மலச்சிக்கல், வயிற்றுப்போக்கு, வயிற்றுக்கடுப்பு, பெப்டிக் அல்சர் மற்றும் நுரையீரல் கோளாறுகளை நீக்குகிறது விளாம்பழம்.

www.padippakam.com



"ஒரு மாதமாக டயட்டில் இருக்கிறேன். அரை கிலோ கூட குறையல."



"என்மேல கோபம் வந்தால கேக்கு புடிக்க சாப்பிடுறாங்க"

"ஒரு வருடம் கஷ்டப்பட்டு பத்து கிலோ குறைத்தேன். இப்ப மறுபடி எடை ஏற ஆரம்பித்துவிட்டது."

இந்த மாதிரியெல்லாம் பலர் குறைபட்டுக் கொள்கிறார்கள். அதற்கு உண்மையான காரணங்கள் அவர்களுக்கே தெரியாமல் இருக்கலாம். உதாரணமாக, சிலர் ஏதாவது உடல் உபாதைக்காக மருந்து சாப்பிடத் தொடங்கினவுடன் இளைத்த உடல் மீண்டும் பெருக்கத் தொடங்கிவிடலாம். சில மருந்துகள் பசியைத் தூண்டிவிட்டு அதிகமாகச் சாப்பிடச் செய்யும். வேறு சில மருந்துகளோ உடலில் வளர்சிதை மாற்றங்களை மாற்றியமைத்துச் சதை போட வைக்கும். மனச்சோர்வை நீக்குகிற "டிரைசைக்ளிக்" ரக மருந்துகள் கணிசமாக உடல் எடையைக் கூட்டிவிடும். ஹிஸ்டாமைன் எதிர்ப்பு மருந்துகளும், ரத்த அழுத்தத்தைக்

# கவலையும் கோபமும் உடலைப் பெருக்க வைக்குமா?

குறைக்கும் மருந்துகளும் உடம்பில் நீர் தேங்கச் செய்யும். மூட்டு வாதம், ஆஸ்துமா, ஒவ்வாமைகள், என்டோமெட்ரியாசிஸ் போன்ற கோளாறுகளுக்கு அளிக்கப்படுகிற மருந்துகளும் உடலைப் பெருக்க வைக்கும். எனவே இத்தகைய மருந்துகளைச் சாப்பிட நேரும்போது தம்மையுமறியாமல் அதிகமாக உணவு உட்கொள்வதையும், உடலுழைப்பைக் குறைத்து விடுவதையும் தவிர்க்க வேண்டும்.


அடுத்து கோபத்தை அடக்குவது அல்லது பொங்கி எழ விடுவது ஆகிய இரண்டுமே உடல் பெருக்க வழிவகுத்து விடும். பலருக்கு அவர்கள் அறியாமலேயே மனதில் ஏதாவது கோபம் கொந்தளித்துக் கொண்டுதானிருக்கிறது. கோபத்தை அடக்கினாலும் சரி, வெளிப்படுத்தி- னாலும் சரி எதையாவது சாப்பிடத் தோன்றி தேவைக்கு மேற்பட்டு வயிற்றுக்குள் திணித்துவிடுவார்கள்.



படிப்பகம்

உணவுடன் மது அருந்தினால் உடலில் வளர்சிதை மாற்றம் குறைந்து கொழுப்புச் சத்து ஜீரணமாகாமல் தேங்கும். அது இடுப்பிலும் வயிற்றிலும்தான் போய்த் தங்குகிறது.

"துக்கம் தொண்டையை அடைக்காமலா போகும்?"



சிலர் சதா கவலைப்பட்டுக் கொண்டே எதையாவது வாயில் போட்டுகொண்டே இருப்பார்கள். பிரச்னைகளைத் தீர்த்துக்கொள்ள் திறமை இல்லாதவர்களுக்குத் தீனி ஒரு ஆறுதலாக அமையும். கவலைப்பட்டுக் கொண்டே சாப்பிடுகிறவர்களின் உணவில் உள்ள கொழுப்பு இடுப்பைச் சுற்றியே போய் கூடிக்கொள்கிறது. இடுப்பைச் சுற்றி நிறைய கொழுப்பு உள்ளவர்களுக்குத்தான் அதிக அளவில் இதய நோய்கள், மாரடைப்பு, நீரிழிவு, மார்பகப் புற்றுநோய் ஆகியவை வருகின்றன. கவலையின் காரணமாக உடலில் உற்பத்தியாகும் கார்ட்டிசால் என்ற ஹோர்மோன்தான் கொழுப்பை இடுப்புப் பகுதிக்குத் தள்ளுகிறதாகச் சந்தேகப்படுகிறார்கள்.

என்ன நடக்கப்போகிறது என்று தெரியாமல், எது நடந்தாலும் அதை எதிர்கொள்ளத் தன்னால் முடியாது என்று பயந்து கொண்டிருப்பவர்களுக்கு இனிப்பான பொருள்களைச் சாப்பிடுவதில் அதிக நாட்டமிருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அது கவலையைத் தணித்தாலும் அது ஒரு தற்காலிக நிவாரணமே. என்னால் முடியும் என்று மனதளவில் நம்பிக்கையை வளர்த்துக்கொள்வது, எது நடந்தாலும் அது கடவுளின் விருப்பம் என்று பொறுப்பை கைமாற்றி விடுவது, வேறு காரியங்களில் மனதைச் செலுத்துவது, தனிமையிலிருப்பதைத் தவிர்ப்பது, நண்பர்களுடன் அதிக நேரத்தைச் செலவழிப்பது போன்ற உத்திகளால் கவலையைத் தணித்துத் தீனி நாட்டத்தையும் குறைக்கலாம்.

> பிறரது கோபம் நமது சக்தியை அவர்கள் மெச்சுவதற்கு அறிகுறியாகும். ஆனால் அவமதிப்பு சுயமரியாதைக்குப் பங்கம் விளைவிப்பதாகும்.
>
> *- கார்டினர் (1865 - 1918)*

www.padippakam.com





# சாவிலும் சரியாத சரித்திரங்கள்.





## மன்னிக்கையில்

அழுகின்றோம் அழுகின்றோம் இறைவா
அடியோர் என் பிழை தீர்ப்பீரா (2)

பசியோடும் பயத்தோடும் ஏழைகள் அங்கே
பணத்திற்காய் பகட்டுக்காய் அலைந்தோமே இங்கே
உரிமைக்காய் போராடி மடிகின்றார் அங்கே
உண்மைக்கு புறம்பாக வாழ்ந்தோமே இங்கே (அழுகின்)

நாய் தின்னத் தெருவோரம் பிணமானார் அங்கே
நகையென்னும் சிலைதேடி அலைந்தோமே இங்கே
சாவுக்குள் தமிழர்கள் பொதுவானார் அங்கே
சாதிக்குள் பலவாகிப் பிரிந்தோமே இங்கே (அழுகின்)

## அன்னையை வாழ்த்துகையில்

மருதமடு மாதாவே மனுக்குலத்தின் தாயாரே
கருணை அருட் செபமாலை கனிந்திட நாம் செய்தாயே

மகிமை நிறை மாமரியே மாதவருட் பூரணியே
மக்கள் பாவம் பொறுத்தருளமன்றாடாய் நின் சுதனை

துயரம் நிறை தாயகத்தைதூயவளே பார் நீயே
புயல் அரக்க போர் முடிந்து பூமி மீள அருள் நீயே

நீண்ட காலம் உறங்காமல் நிலம் அழுது கிடக்குதம்மா
மாண்டவர்கள் போதாதோ மாமரியே அருள் செய்வாயோ

## மண்ணின் மலர்விற்காய் மடிந்த மாவீரர் நினைவாஞ்சலி அர்ப்பணப் பூக்களுக்கு அஞ்சலிகள் கார்த்திகை தீபங்களுக்கு புஷ்பாஞ்சலிகள்

ஈழத்தாய் பெற்றெடுத்த இனிய தவப் புதல்வர்களே?
ஈழத்தின் தேசிதலைவரின் விடுதலை விளை நிலமதில் விளைந்த புலிவீரரே!
விலங்கினமாய் வாழும் மானிடர்க்கு பாடம் புகட்ட எழுந்த மறவர்களே!
பெண்ணடிமை விலங்கைப் பொடிப்பொடியாக்க துணிந்த தூயவர்களே!
கருவறையைச் சுமக்கும் வயதில் களத்தில் சுமாடிக் கருகிப்போனோரே!
வெடித்துச் சிதறும் கனத்த பூமியில் விடி வெள்ளியாய் ஒளிர்பவரே!
வெட்ட வெட்ட தழைப்பீர் தழைத்து தழைத்து எம்மினம் தழைக்க
மீண்டும் களம் சென்று விதையாய் விழுந்து எழுந்திடுவீர்.
சுதந்திரமாய் நாம் உங்கள் சுவாசத்தைத் தொலைத்தவரே!
மந்திரமாய் தலைவனிட்ட பணிதனை தந்திரமாய் பறந்து பணித்தோரே!
நெஞ்சினில் நெருப்பேந்தி, வஞ்சகரை வெஞ்சமராடி அழித்தோரே! - எம்
நெஞ்சுகனக்க வியக்கின்றோம் உம் விஞ்சி நிற்கும் மாவீரமதை.
உம்முடல்தனை மெழுகாக்கி, உணர்வு தனைத் திரியாக்கி ஒளிதந்த வள்ளல்களே.
கரிகாலன் வழிதனில் வரிப் புலியான வீரவேங்கைகளே!
நிழலாடும் மனிதத்தின் வாழ்விற்கு நிஜம் தேடி நெடுந்தூரம் போனோரே!
களமாடும் கண்ணியத்தின் கடப்பாட்டை கடைசிவரை உளமாரசச் சுமந்தோரே!
கண் முடிக்கல்லறையிலும் நிம்மதியாய் உறங்கிடாத காவிய நாயகரே!
தாயவள் விடுதலைக்காகவே சாவினைச் சுமந்த சந்தன மேனியரே
உயிருள்ள உடலங்களாய் அவன் கருவறைக்குள் மீண்டும் புகுந்து கொண்டோரே!
இளமைக்கல்வியை மறந்து அவ்வாழ்வின் சுகபோகம்யாவும் துறந்தீர்.
கழுத்தினின் நஞ்சையும் நினைவினில் விடுதலையையும்சுமந்து அர்ப்பணப்புக்களே!
தானத் தலைவன் வளர்த்த யாகத்தில் உதித்த அக்கினிக் குஞ்சுகளே!
கரும்புலியாய், கடற்புலியாய், சினந்தெழும் சிறுத்தைப் புலியாய்.
அகிம்சைப் போராளிகளாய் சரித்திரமாகவிட்ட சாதனை வீரப் புதல்வர்களே!
விண்ணொடு நீர் விதைத்துச் சென்ற விடிலய் விளையும் நேரம். உம்
கண்ணொடு கலந்து விட்ட தமிழ்த்தாயின் காயங்கள் ஆறும்.
நீங்கள் புதைக்கப்படவில்லை விதைக்கப்பட்டுள்ளீர்கள் – உங்களை
எம்மிரு கரம் கூப்பி சிரம் தாழ்த்தி உங்கள் ஆன்ம சாந்தியுற இறையருள் இறைஞ்சி
மலர் தூவி, விழி சொரிந்து அஞ்சலிக்கின்றோம்.

சில்லையூர் சிங்கராசா, Olfen

www.padippakam.com





# ஆதரவற்றோர் உதவிநிதி

❖ **ஆரம்பஇருப்பு 01.09.2002** = 5.92

❖ **அன்பளிப்புகள்:**

| | | | | |
|---|---|---|---|---|
| செல்வி: | நிரோஜினி. இரத்தினசிங்கம் | - Duisburg | + | 30.00 |
| (பிறந்தநாள் அன்பளிப்பு) | | | | |
| செல்வன்: | சுரேஸ். கணேசலிங்கம் | - Sweden | + | 50.00 |
| (பிறந்தநாள் அன்பளிப்பு) | | | | |
| செல்வன்: | சுதர்சனன் சிறீஸ்கந்தராசா | - Duisburg | + | 50.00 |
| (பிறந்தநாள் அன்பளிப்பு) | | | | |
| திரு.திருமதி: | பாமா-கீதன் | - Netherland | + | 50.00 |
| (பிறந்தநாள் அன்பளிப்பு) | | | | |
| செல்வன்: | பாஸ்கரன் - பரமசாமி | - London | + | 75.00 |

= 255.00 + 255.00

= 260.92

❖ **அனுப்பியது:**

- "ஊனமுற்றோர்" புனர்வாழ்வுக்கழகம் கிளிநொச்சி - 200.00
- வங்கிக்கட்டணம் - 6.39

- 206.39 - 206.39

= 54.53

**மீதிக்கையிருப்பு 31.10.2002**

இம்மாதம் பிறந்தநாள் கொண்டாடிய சிறுவர்கள் தமிழீழ அநாதைச்சிறுவர்களுக்காக அன்பளிப்புகளை வழங்கியுள்ளனர். அத்துடன் ஆதரவற்றோர் நிதிக்கு உதவிவழங்கியவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். பிறந்தநாள் கொண்டாடிய குழந்தைகளுக்கும் "மண்" சஞ்சிகை வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றது.

– ஆசிரியர் –

படிப்பகம்

www.padippakam.com



கொழும்பு நட்புறவுச் சங்கம், யாழ்ப்பாணக் கிளை
COLOMBO FRIEND IN NEED SOCIETY, JAFFNA BRANCH
(Approved Charity).
JAIPUR FOOT PROGRAMME
Ref. TR. 5519.

No. 3003

Phone 021-2574
No. 5, Old Park Road,
JAFFNA 18-09-2002

Received with thanks from Mann (EROS).
of C/o. Mr. V. Sivarajah, Angertaler Str-98; 47249. DUISBURG. GERMANY.
the sum of Rs. Eighteen thousand five hundred & twenty two only
being Donation.
by Cash / Cheque By Bank Draft. (Euro 200).

Rs. 18522/-

Dr. (Mrs.) S. Thirunavukarasu
Treasurer

Donations are eligible for income tax Relief
Registered under Act No. 31 of 1980 No K/144/84

ஊனமுற்றோர் புனர்வாழ்வுக்கழகம்
கிளிநொச்சி

Anlage Z 1 zur AWV

**ZAHLUNGSAUFTRAG IM AUSSENWIRTSCHAFTSVE**
Meldung nach §§ 59 ff. der Außenwirtschaftsverordnung (AV

1
52: An Kreditinstitut
Stadtsparkasse Duisburg
Königstraße 23-25
47051 Duisburg

Bankleitzahl 350 500 00
Konto-Nummer des Kontoinhabers/Einzahlers 225 000 421

Zahlung zu Lasten: 1 = Euro-Konto, 2 = Währungskonto — 1
Keine Angabe bedeutet Zahlung zu Lasten des Euro-Kontos

32: Währung, Betrag: EUR 200,00
50: Name des Kontoinhabers/Einzahlers: VEREIN MANN ERDE DUISBURG
Straße: ANGERTALER STR 98
Postleitzahl, Ort: 47249 DUISBURG
57: Bank des Begünstigten (bevorzugt als S.W.I.F.T.-Code) — BIC (S.W.I.F.T.-Code)
Ist sowohl der S.W.I.F.T.-Code als auch Name und Anschrift der Bank ausgefüllt, wird die Zahlung gemäß S.W.I.F.T.-Code ausgeführt.
Name des Kreditinstituts: BANK OF CEYLON
Straße: KILINOCHCHI
Ort/Land: SRI LANKA
Konto-Nummer des Begünstigten bzw. IBAN: 3784
Bank Code/S.W.I.F.T.-Code
59: Name des Begünstigten: ASSOCIATION F. REHABILITATION THE DISABLETS
Straße: KANDY ROAD
Ort/Land: KILINOCHCHI SRI LANKA
70: Verwendungszweck (nur für Begünstigten): HILFE FUER KINDERHEIM

Datum: 28 10 2002
Telefon/Durchwahl: 706480

ausfüllen. Bei Handschrift sind Großbuchstaben zu verwenden.

# JAIPUR FOOT PROGRAMME

A PROJECT OF THE COLOMBO FRIEND - IN NEED SOCIETY,
JAFFNA BRANCH
*REGISTRATION NO: L 25716*
(APPROVED CHARITY REGD. NO. KO/ 144/84)

Tele. No: 021-2574
No: 05, Old Park Road,
Chundikuli, Jaffna.

My No: ஜெ/ஜெ/எவ்/பி/121/02.

Your No:

Date: 18-09-02.

வ. சிவராஜா,
ஆசிரியர்,
மண் சஞ்சிகை.

அன்புடையீர்,

நாம் நலம் நலம் அறிய ஆவல். தங்களது 21-08-02 திகதியிட்ட கடிதம் சார்பாக, தங்கள் வாசகர்கள் தங்களூடாக அன்பளிப்பு செய்த 200 (EURO) ஐரோப்பிய நாணயம் வங்கி மாற்றீடு மூலம் எமது பணத்தொகையில் ரூபா 18,522/= பெற்றுக்கொண்டோம் இதற்கான பற்றுச்சீட்டு இல 3003 இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. மனமுவந்த அன்பளிப்பிற்காக தங்களுக்கும் தங்கள் வாசகர்களுக்கும் எமது நிறுவனத்தின் சார்பில் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

தாங்கள் கேட்டுக்கொண்டபடி - எமது நிறுவனத்தின் விபரங்கள் அறிக்கைகள் அடங்கிய பிரசுரமும், மூன்று புகைப்படங்கள், கவிதை ஒன்று, அவயவம் பொருத்தியவர்களின் அனுபவம் (இரு மாணவர்கள் உட்பட) எமது நிறுவனத்தின் செயற்பாடுகள் பற்றி பத்திரிகையில் வெளியிட்ட பிரசுரத்தின் நகல் என்பன அனுப்பி வைக்கிறோம்.

தங்கள் உதவிக்கரத்திற்கும் ஆதரவிற்கும் எமது நன்றிகள்.

-நன்றி-

வலுவிழந்தோர் சேவையில்,

நிர்வாக செயலாளர்.
ஜெய்ப்பூர் செயற்கைக் கால் திட்டம்
இல. 05, பழைய பூங்கா வீதி
சுண்டிக்குழி - யாழ்ப்பாணம்

Project Director: Mrs. T. Yoganathan
Chairperson: Mrs. L Sivaramalingam (Actg)
Project Secretary: Dr. (Mrs). J. Ganeshamoorthy
Treasurer: Dr. (Mrs). S. Theivendran
Members : Mrs. K. Sivasithamparam (S.L.A.S), Miss. B. Vannjasingam, Dr.(Mrs).G.Bavani
Cheques in favour of "The Colombo Friend- in Need Society Jaffna Branch"
Commercial Bank, Jaffna. Account No. 12833 or Bank of Ceylon Jaffna . Account No- C.24029.

www.padippakam.com



**JAIPUR FOOT PROGRAMME**

A PROJECT OF THE COLOMBO FRIEND - IN- NEED SOCIETY,
JAFFNA BRANCH
*REGISTRATION NO: L 25716*
(APPROVED CHARITY REGD. NO. KO/ 144/84)

Tele. No: 021-2574
No: 05, Old Park Road,
Chundikuli, Jaffna.
Date: 18.09.02.

## செயற்கைக்கால் பொருத்தியோரின் உள்ளத்திலிருந்து........

எனது சொந்த தோட்டத்தில் மறைந்திருந்த மிதிவெடியினால் எனது காலை இழந்தபோது நான் அனுபவித்த வேதனையில் உயிர் தப் பியதை விட உயிர் பிரிந்திருக்கலாம் எனக்கூட நினைத்தேன். உடல், உள வேதனையுடமூன்று காலில் ஜெய்ப்பூர் நிறுவனத்திற்கு வந்த எனக்கு செயற்கை அவயவம் பொருத்தி காலுடன் இழந்த தன்னம்பிக்கையையும் ஊட்டி சமூகத்தில் ஓர் மனிதனாக நடமாடவைத்துள்ளார்கள்.
**(கா.சிவரஞ்சன்)**

சலரோக நோயினால் கால் இழந்து நான் பட்ட துயரம் சொல்ல முடியாதது. ஜேய்ப்பூரை நாடிய வேளை என்னை அன்புடனும், பண்புடனும் அரவணைத்து எனக்கேற்ப செயற்கை அவயவத்தை பொருத்தியுள்ளனர். என்னை பழைய நிலைக்கு கொண்டுவந்து என்னால் எதையும் செய்யமுடியும் என்ற நம்பிக்கையுடன் முன்னர் போல் வேலைகள் செய்யக்கூடியதாக உள்ளதையிட்டு மகிழ்ச்சியுடன் இந்நிறுவனத்தினையும் அதன் சேவையையும் வாழ்த்துகிறேன்.
**(திருமதி பூமாலைராசா சந்திரலட்சுமி))**

இடம்பெயர்ந்த அவலத்துடன் மிதிவெடியில் எனது காலை இழந்து வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றவேளை ஜெயப்பூர் நிறுவன ஊழியர் என்னைத்தேடி வந்து ஆறுதல்படுத்தி செயற்கை அவயவம் பற்றிக் கூறிய போது என்னால் அதை ஏற்றுக்கொள்ளமுடியாதிருந்தது. ஏன்னை ஆறுதல் படுத்துகிறார்கள் என அவநம்பிக்கையுற்றேன். ஆனால் எனக்கு தைரியமூட்டி இழந்த காலினைப்போலொரு செயற்கைக்கால் பொருத்திய பின்னர் தான் அவர்கள் கூறியதன் உண்மையை அனுபவித்தேன். இம்மண்ணில் மீண்டும் மனிதனாக வாழவைத்த இந்நிறுவனத்திற்கும், அதன் அளப்பரிய சேவைக்கும் நான் என்றும் கடப்பாடுடையவன்.
**(ச. ஜெயரட்னம்)**

வகுப்புக்கு சென்றுவிட்டு வீடு திரும்புகையில் தறித்த மரம் விழுந்து எனது ஒரு காலை இழந்தேன். இதனால் எனது கல்வி பாதிக்கப்படுமோ என்று எண்ணினேன். ஆனால் ஜெய்ப்பூர்நிறுவனம் தந்த கால் எனது சொந்தக்கால போல் இருப்பதால் நான் எனது கல்வியை தொடர முடிகின்றது. இதற்கு இந் நிறுவனத்தினைப் பாராட்டுகிறேன்.
**(சி. கபில்ராஜ் – மாணவர்)** படிப்பகம்

**Holy Family Convent**
**Madhu Church**

5.10.2002

அன்புள்ள மாஸ்டர் சிவராசா அவர்களுக்கு அன்பு மகிமை, பிள்ளைகள் எல் லோருக்கும் நடுத்தாயின் ஆசி வேண்டி அன்புடன் எழுதிக் கொள்வது.

அன்பான மாஸ்டர், நீங்கள் 10.5.02 எழுதிய கடிதமும், மண் 84ம் இதழ் இன்று காலைதான் என் கையில் கிடைத்தது. அதிசயப்பட்டேன். 5 மாதங்களாக இந்த செய்தி அறியாமல் இருந்தேன். நீங்கள் எனக்கு எழுதிய கடிதமும் அவர்களுக்குப் போயிருந்தபடியால் எனக்கு எதுவுமே தெரியாது. அங்கு போனது நினைவுதான். 5 மாதமாகியும் ஒரு செய்தியும் வராதபடியால் நீங்கள் யோசித்துக் கொண்டுதான் இருந்திருப்பீர்கள். உடன் பதிலாக எழுதுகிறேன்

மடுப்பதியின் நிலைமையை அறிய விரும்புகிறீர்கள். இன்று சமாதான பெருநாள். பூசைக்கு ஆயர் மன்னாரில் இருந்து வந்து பூசை வைத்தார். ஏராளமான மக்கள், தென் பகுதியிலிருந்து இப்போ தினமும் தனியார்களும் சேர்ந்து வந்து கொண்டிருக்கிறார்கள். மாதாவிடம் சமாதானத்துக்காக வேண்டி வருகிறோம். அவ வல்லமையுள்ள அன்புத்தாய். இறைவன் தாய். எல்லா வல்லமையும் அதிகாரமும் அவளின் கையில் கொடுத்திருக்கிறார் இறைவன். சென்ற பல வருடங்கள் இடம் பெயர்ந்த்து தான் கடும் மழை. ஆனால்

வழிபாடு தொடங்குமுன் எல்லாம் ஓய்ந்து
நின்ற வெயிலில். சனநெருக்கமும் அமைதியின் மத்தி
உடனால் இறைவன் - குருவானவர் என்ற நம்பிக்
கையுடன் சென்றுவிட்டோம். அதனின் எல்லாரும்
போய்விட்டார்கள். மருந்தெடுத்த திருப்பட்ட
பட்டபால் மருந்தகம் யாத்திரிகள் வருவது
அதிகம். யாழ்ப்பாணம் நல்ல நிலையில் இருக்
கிறது. நாயர் இளைமயர் பார்க்க வரமாட்டீர்களா?
வந்தால் மருத்துவம் வாங்கலாம். Bishop
உடன்கூட கண்டால் சந்தோஷப்படுவார்.
மீண்டும் உனது நண்பர் அன்புடன் Regina



கிளிநொச்சியில் விடுதலைப்புலிகளின் எழுச்சிவிழா ஒன்றில் சிவப்பு, மஞ்சள் கொடிகளை ஊசி மூலம் தன் உடம்பில் குத்தி தனது உணர்வுகளை வெளிப்படுத்தும் உணர்வுள்ள வயோதிபரை இங்கே காணலாம்.

நன்றி – ,,ஈழநாதம்"

www.padippakam.com

www.padippakam.com



# அன்பளிப்புகள்



தாயகத்தில் அவதியுறும் அநாதைச் சிறுவர்கள், வலுவிழந்தோர்கள், அங்கவீனர்களுக்கு கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக நாம் உதவிவருவது வாசகர்களாகிய உங்களுக்குத் தெரியுமென நம்புகிறோம்.

இடம்பெயர்ந்து வாழும் நாடுகளில் வசிக்கும் நம்மவர்கள் பிள்ளைகளின் பிறந்தநாள், பூப்புனிதநீராட்டுவிழா, திருமணவிழா ஆகியவற்றை கொண்டாடும் போது ஈழத்தில் அல்லலுறும் ஆதரவற்றோருக்கு சிறு உதவியாக பண உதவி புரியலாம் என நம்புகிறோம். இத் திட்டத்திற்கு பலர் உதவிபுரிந்துள்ளார்கள், புரிகிறார்கள்.

எனவே நீங்களும் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல காரியங்கள் நடாத்தும்போது ஈழத்து அநாதைச்சிறுவர்களையும் நினைவுகூர்ந்து சிறிது உதவுங்கள். நீங்கள் உதவும் சிறிது பணம் எத்தனையோ ஆதரவற்றோரை வாழவைக்கின்றது என்பதை நினைவில் கொள்ளுவோம்......

உதவிபுரியும் அன்பர்கள், பிள்ளைகளின் பெயர்களை எமது சஞ்சிகையில் பிரசுரித்து உதவுவோம். எனவே விரும்பிய அன்பர்கள் எம்முடன் தொடர்பு கொண்டு உதவலாம். அல்லது எமது வங்கிக்கணக்கிற்கு நிதி உதவி புரிந்து உதவலாம்.

ஒன்று சேர்ந்து உதவுவோம்......
சிறுதுளி பெருவெள்ளம்......
ஆதரவுக் கரம் நீட்டுவோம்......

~ ஆசிரியர் ~

நிதி உதவி புரியவிரும்பும் அன்பர்கள் கீழ்க்காணும் வங்கிவிபரத்திற்கு அன்பளிப்புக்களை அனுப்பி உதவி புரியுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

**Vyramuthu Sivarajah**
**Stadtsparkasse - Duisburg**
**Konto Nr. - 225000421**
**Bankzahl - 35050000**

ஆதரவற்றோருக்கு ஒன்று கூடி உதவுவோம்

படிப்பகம்



## கிறிஸ்துமஸ் தாத்தா!
## நத்தார் பப்பா!

கிறிஸ்துமஸ் பண்டிகை என்றதுமே நம் நெஞ்சில் நிழலாடுவது யாதெனில் கிறிஸ்துமஸ் தாத்தா வெண்பனி போன்ற வெள்ளைத் தாடி பஞ்சு வைத்துத் தைத்த பருமனனான கம்பளிக் கோட்டு, தலையில் பனிக்குல்லாய் பரிசுப் பொருட்களுடன் கூடிய பனிச் சறுக்கு வண்டி பின்னனியில் கேட்கும் மணிச்சத்தம் போன்ற இசை.

இப்படி ஒரு கற்பனை உருவம் நம் கண் முன் தோற்றமளிக்கும். சுன்ர கினாஸ் என்ற பெயரில் அழைக்கப்படும் கிறிஸ்துமஸ் தாத்தாவைப்பற்றி பல கதைகள் உண்டு.

மத்திய ஆசியாவிலுள்ள மீரா என்னும் மறை வட்ட மேய்ப்புப் பணியின் ஆயராக மேதகு நிக்லஸ் ஆண்டகை அவர்கள் பணியாற்றி வந்தார். ஏழ்மையில் கீழ்மையில், வறுமையில் சிறுமையில், வாடி வதங்கும் குழந்தைகள், இளைஞர்கள், அநாதைச் சிறுவர்கள், இவர்கள் இறைவனின் சாயல் என்றும், விண்ணரசு அப்படிப் பட்ட சிறுவர்களுக்கே உரிய தென்பதை விசுவசித்த ஆயர் அவர்கள் சிறுவர்கள் மட்டில், அன்பும், பற்றும், பரிவும் பாசமும் கொண்டு, தம்மாலியன்றளவு உதவிகளைச் செய்து வந்தார். இவரது இறப்பின் பின்னர், இப்புனிதரின் பெயரால் ஆங்காங்கே பல பேராலயங்கள் எழுப்பப்பட்டன. வணிக நோக்கோடு பல நாடுகளுக்கும் சென்ற டச்சு மாலுமிகள், மறைந்த ஆயர் நிக்லஸ் அவர்கள் சிறுமையுற்ற சிறார்களுக்கு ஆற்றிவந்த அரிய பேருதவிகளில் பரிவிரக்கத்தை மக்களுக்கு அறிவித்து அவரது நீத்தார் நினைவுத் திரு நாளான டிசம்பர் 6ம் திகதி. சிறுவர்களுக்குப் பரிசில்கள். வழங்கி மகிழ்ச்சிப்படுத்தினர். அன்றிலிருந்து சிறுவர்கள் தங்களுக்குள் தாங்களே சிந்தித்து செய்து கொண்ட கற்பனைப் படைப்புதான் வெண் தாடியுடன் வெண் பரி மீதேறிப் பரிசுப் பொட்டலங்களுடன் பவனி வரும் புனித நிக்லஸ்.

www.padippakam.com



நத்தாஸ் விழாவின் போது கண் கவர் பல வண்ணப் பரிசுப் பொருட்களுடன் குழந்தைச் செல்வங்களை குதூகலத்தில் ஆழ்த்தும் புனித நீக்லஸ் அவர்கள். அடிமையில் வேடம் தாங்கி, ஏழ்மையிலும் ஏழ்மையாக, ஈன மாட்டுத் தொழுவமதில், பாவத்திலும் சாபத்திலும் மூழ்கியிருந்த மனித குலத்திற்கு விடுதலை அளிக்க அவனிலில் அவதரித்த குழந்தை இயேசு நம்மெல்லோருக்கும் அளிக்கும் அளப்பரிய அன்புப்பரிசாகிய முழு மனிதசுதந்திர சமாதானத்தின் அடையாளமாகவே திகழ்கின்றார். இன்று எம் சொந்த மண்ணிலே சோகம் சுமந்து வாழும் எம் சொந்தங்களுக்கு, பெற்றவரை, உற்றவரைகப் பெற்றெடுத்த செல்வங்களை எம் தேசத்தின் மீட்பிற்காக, எம் எதிர்காலச் சந்ததியின் சுய நிர்ணய சுபீட்சமான வாழ்விற்காகப் பறிகொடுத்து, தனிமையிலே தங்கள் கருவறையிலிருந்து, இரத்தக் கண்ணீர் வடிக்கின்ற தாய் மார்களுக்கு, வறுமையின் வெம்மையிலே வாடி வதங்கிடும் ஏழை எளியவர்க்கு, எம்மிடதிருப்பதை இல்லாதாரோடு பகிர்ந்துண்டு வாழ்ந்து அவர்க்கு உதவி செய்து, பிறருக்காக மடிந்து வாழும் வாழ்வை நாம் வாழ வேண்டுமென்று நினைவூட்டுகின்றார்.

சில்லையூர் சிங்கராசா, Olfen

## குறுந்தகவல்கள்

நிலவில் உங்கள் எடை பூமியில் இருப்பதைப் போல ஆறில் ஒரு பங்குதான்.

ஒரு தலைமுறை என்பது 33 ஆண்டுகள்.

ஆங்கில எழுத்துகளில் அதிகம் பயன்படுவது "E".

பூமியில் 71 சதவிகிதம் நீர் இருக்கிறது.

தேன்சிட்டு (Humming Bird) தான் பறவைகளில் மிகச் சிறியது.

உலகின் பெரிய் கடல் பசிபிக் பெருங்கடல்.

'க்வி...க்வி' என்று கத்துவதால் KIWI பறவைக்கு அந்தப் பெயர் வந்தது. இதற்கு இறக்கைகள் கிடையாது.

நமது உடலில் கணையம் (pancreas) என்ற உறுப்பினால் இன்சுலின் சுரக்கப்படுகிறது. இன்சுலின் குறைபாடு நீரிழிவு நோயை உண்டாக்குகிறது.

சுறா மீன்களால் முன்னோக்கி மட்டுமே நீந்த முடியும். பின்னோக்கி நீந்த முடியாது.

ஒட்டகச்சிவிங்கியே மிகப் பெரிய பாலூட்டி, அதனால் திரும்பாமலே பின்பக்கம் பார்க்க முடியும். படிப்பகம்

www.padippakam.com



# கிறிஸ்துவின் வருகை!

## அடிமைத் தளைகளை அறுத்தெறிய மீட்பரே விரைவாகவாரும்

சமாதானம் தொலைந்து ஐ ஐந்து அகவைகளுக்கு மேலாகிவிட்ட
தங்கத் தமிழரின் சொந்த மண்ணான தமிழீழத்திலே
சமாதானத்தின் பூ வாகப்பூ த்து மலர்ந்து மணம்வீச
துங்க மாமரி மைந்தன் இயேசுவே வந்து நீர் பிறந்திடும் ஐயா!

செங்குருதியில் நீராடி எம்சூ ரியக்குஞ்சுகளைத் தினம் முழ்கவைத்த
சிங்களத்தின் சிறுமதிபடைத்த வெஞ்சினங்கொண்டோரால்
எங்கள் அமைதி வாழ்வு குலைந்து அலங்கோலமானதே இறைவா
பொங்குமுன் அமைதி அங்கு ஆறாய்ஓடிட உள்ளருள் பொழியுமய்யா!

செல்வீச்சால் எம்மவர் செல்வமெலாம் சீரழிந்து போகலாச்சு
நல்தமிழீழ அழகெல்லாம் அலங்கோலமாச்சு
நெல்விளைநிலமும் மாய்ந்து மகிழ்விழந்து போச்சு
கடல்வளமும் கரைந்து நாளும் பிணவாடையாச்சு!

மனிதம் மனிதநேயமும் மாண்பும் எப்போ பறந்தாச்சு
புனித தலங்களும் வழிபாடுகளும் இடர்படலாச்சு
கனிமொழிக் கல்விக்கூடங்களும் சுடுகாடாய்ப்போச்சு
இனிதே வாழ்ந்ததமிழ் வாழ்விடங்கள் காவலரண்களாச்சு!

தினம், காணாமல் போனவர்கள் பட்டியல் நீண்டுபோகலாச்சு
கனம் கொண்ட கண்ணிவெடியால் கால்கள் கழட்டலாச்சு
வன்னியிலே எங்கள் சொந்தங்கள் கண்ணீரில் கலங்கலாச்சு.
கன்னியர் கன்னிமை காதகரின் மிருகவெறியால்பறி போகலாச்சு.

நோயில் வீழ்ந்தோர், மருந்தின்றி, பசியால் நலிந்து செத்து மடியலாச்சு
மெய்யிழந்து, மொழிமறந்து, உரிமை துறந்து, முகமின்றி அகதிவாழ்வாச்சு.
உய்யவழியின்றி வேதனையில் எம் நேசங்கள் வீழ்துழலாச்சு.
தெய்வமே! உன்னருட் பார்வையை நம்பியே எம்மினம் வாழலாச்சு.

இறைவேதம் நிதம் குறைவிலா போதிக்கும் இறைபணியாளர்
நிறைவாக, இறை பொதுப்பணியாற்றும் சமூகநலத்தொண்டர்கள்.
மழை வழியில் வளரும் இல்லங்களாக மனிதமாண் பின் சொரூபங்களாக்
குறைகள் விடுத்து, அன்பியமாய் நாம் வாழ எம்முள்ளத்தில் இறைவா!
நீர் வந்து பிறந்திடுவீர்!

*சில்லைஊர் சிங்கராசா*
**Olfen**

# ABC வானொலி பாரிஸ்
# 3வது தேன்மதுர மாலை – 2002

ஆசிய ஒலிபரப்புக்கூட்டுத் தாபனத்தின் (ABC) 3வது தேன்மதுர மாலை 2002 நிகழ்ச்சிகள் ஜேர்மனியில் சிறப்பாக நடைபெறவுள்ளது. இந் நிகழ்வில் பலதரப்பட்ட கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. சிறப்பு நிகழ்ச்சியாக ABC வானொலிக்கலைஞர்கள் கலந்துகொள்ளும் பல் சுவை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. அனைத்துக்கலை உறவுகளை யும் அன்போடு அழைக்கிறார்கள்.

ABC வானொலிக்கலையகத்தினர்
பாரிஸ் – பிரான்ஸ்

**காலம்:** **14.12.2002 சனிக்கிழமை மாலை 3 மணி**

**இடம்:** Goethe Gymnasium
Stettinewr Str. 12
44263, Dortmund – Hörde

**குறிப்பு:** **சிறுவர்களுக்கான போட்டிநிகழ்வுகள் காலை 10மணிக்கு ஆரம்பமாகும்.**

மேலதிகத்தொடர்புகளுக்கு:
ABC வானொலிக்கலையகம்
Tel. 00331/48304455

புத்தகங்களை மட்டும் படிப்பது சமுதாய வாழ்விற்குப் போதாது. நாம் அன்றாடம் சந்திக்கும் மனிதர்களையும் படிக்க வேண்டும். சமுதாய வாழ்விற்கு இது மிகவும் முக்கியமானது. ஒவ்வொரு மனிதனும் குழப்பங்கள் நிறைந்த ஒவ்வொரு புத்தகங்களாகும்.

(ஓர் அறிஞர்)

நீ பகைவரால் அழிக்கப்படாதிருக்க வேண்டுமானால் உன்னை அழிக்க வரும் பகைவரை நீ அழிப்பதே வழி.

(குறள்)

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# ERDE

## Einsatz Fur eine Freiheitliche Zukunft



## யாழ் – சுண்டிக்குழி செயற்கை
## அவயங்கள் பொருத்து நிலையம்

**வருடாந்த சந்தா 15.00 யூரோ**

படிப்பகம்